# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 59 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 11. செவ்வாய்க்கிழமை 24.01.2017






3 இன்னும் நாள்களில்




## கலவர பூமியானது மெரீனா கடற்கரை

### தடியடி, கண்ணீர்ப் புகை நடத்தியதால் பொலிஸார் – இளைஞர்கள் மோதல்

சென்னை, ஜன. 24
ஜல்லிக்கட்டு நடத்த ஆதரவாக நிரந்தரச் சட்டம் வேண்டும் என்று வலியுறுத்திச் சென்னை மெரீனா கடற்கரையிலும் மதுரை அலங்காநல்லூரிலும் ஏனைய இடங்

>> 25

## ஜல்லிக்கட்டு ஆதரவாக வந்தது நிரந்தரச் சட்டம்

சென்னை, ஜன. 24
ஜல்லிக்கட்டு நடத்தத் தற்காலிகமாக இயற்றப்பட்ட அவசர சட்டத்துக்குப் பதிலாகப் புதிய நிரந்தரச் சட்டம் தமிழ்நாடு சட்டசபையால் நேற்று மாலை நடை முறைப் படுத்தப்பட்டது.

>> 24

## லசந்த கொலையாளிகள் யாழ்ப்பாணத்தில் கடமை

### *விசாரணைகளை முடுக்கிவிடும் குற்றப்புலனாய்வுப் பிரிவு*

கொழும்பு, ஜன. 24
யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினர்களுக்கு, ஊடகவியலாளர் லசந்த படுகொலையில் தொடர்பு இருப்பதாகக்

>> 25

## கடத்தப்பட்டுக் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்ட பிரகீத்

### *விசாரணைகளில் புதிய தகவல்*

கொழும்பு, ஜன. 24
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட மின்னேரிய முகாமுக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னர் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததைக் குற்றப் புலனாய்

>> 25

## இடியுடன் கூடிய மழை பெய்யலாம்

கொழும்பு, ஜன. 24
நாட்டின் பல பிரதேசங்களிலும் இடியுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

>> 25

முச்சந்தி முரளி



ஜல்லிக்கட்டு கலவரக் கட்டா முடிஞ்சுது பாருங்கோ!...

## கையாடிய நிதியை மீள வழங்கும் தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஜன. 24
நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட, தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்,

>> 25

# புதிய அரசமைப்பை விரைவுபடுத்தவென மாபெரும் பரப்புரை

### அரசின் அமைச்சர்கள்-சிவில் சமூகத்தினர் இணைந்து முன்னெடுப்பதற்குத் திட்டம்

கொழும்பு, ஜனவரி 24
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் தாமதமடைந்து – இழுபறிப்பட்டு வருகின்ற நிலையில், அதனை விரைந்து முன்னெடுப்பதற்குப் பரந்தளவிலான மிகப் பெரும் பரப்புரை மேற்கொள்வதற்குக் கூட்டு அரசின் அமைச்சர்களும் – சிவில் சமூகத்தினரும் இணங்கியுள்ளனர்.

சிவில் சமூகத்தினரும், கூட்டு அரசின் அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன, துமிந்த திசாநாயக்க, மனோகணேசன், சரத்பொன்சேகா, ஹர்ச டி சில்வா ஆகியோர் கலந்துகொண்ட சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் தேக்கநிலையை அடைந்துள்ளது. வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் இரு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. வழிநடத்தல் குழுவின் அடுத்த கூட்டம் எப்போது என்று இன்னமும் இறுதி செய்யப்படவில்லை. தாமதமடைந்து கொண்டு செல்லும், புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கையை விரைவுபடுத்தவேண்டும். இதற்காகட! பரந்த

>> 25

## நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பார் மைத்திரிபால

### கூட்டு அரசின் அமைச்சர்கள் சிவில் சமூகத்திடம் உறுதி

கொழும்பு, ஜன. 24
நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அந்த நிலைப்பாட்டில் இன்னமும் உறுதியாக இருக்கின்றார்.

இவ்வாறு கூட்டு அரசின் முக்கிய அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன, துமிந்த திசாநாயக்க ஆகியோர்

>> 24

## திருமலையிலும் போராட்டம்

திருகோணமலை, ஜன. 24
தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, , கடத்தப்பட்டு, கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் முன்னெடுக்கப்படும் தொடர் உணவு ஒறுத்தல் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக் காலை திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால்

>> 25

## ரோம் பிரகடனத்தில் அரசு கையெழுத்திட ஐ.நா. கடும் அழுத்தம்

### *ஜீவன் மெண்டஸின் அறிக்கையில் வலியுறுத்தல்*



கொழும்பு, ஜன. 24
பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் பிரகடனத்தில் கொழும்பு அரசைக் கையெழுத்திடுமாறு ஐ.நா.

>> 25

## சரத் பொன்சேகாவிடம் இன்று மீள விசாரணை

### *லசந்த படுகொலை தொடர்பில்*

கொழும்பு, ஜன. 24
சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சரு

>> 25

## மூன்று இளைஞர்கள் கடலில் மூழ்கிச் சாவு

### *மூதூர்ப் பகுதியில் பரிதாபம்*

திருமலை, ஜன.24
திருகோணமலை மூதூர்ப் பகுதியில் கடலில் நீராடச் சென்ற இளைஞர்கள் மூவர் நேற்றுக் காலை நீரில் மூழ்கிச் சாவடைந்தனர் எனப்

>> 25




## உறவுகளைக் கண்டறிய உணவு ஒறுப்பு ஆரம்பம்

### வவுனியா நகரில் நேற்று முதல் தொடர் போராட்டம்

வவுனியா, ஜன. 24
தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தொடர் உணவு ஒறுத்தல் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டம் வவுனியா நகரப்பகுயில் நேற்று காலை 9.30 மணி யளவில் ஆரம்பமானது.

எமது உறவுகள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா?

>> 25



## வடக்கில் வாகனப் பதிவுடையோர் வரி அனுமதியை எங்கும் பெறலாம்

### *நேற்று முதல் இணையம் மூலம் வசதி*

யாழ்ப்பாணம், ஜன. 24
வடக்கு மாகாணத்தில் வாகனப் பதிவைக் கொண்ட எவரும், நாட்டின் எந்தப் பிரதேசத்திலிருந்தும் இணையத்தின்ஊடாக வாகன வரி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். நாட்டின் ஏனைய மாகாணங்களில் நடைமுறையிலிருந்த மேற்படி

>> 24

# கூட்டாட்சியையே வலியுறுத்துகிறது உபகுழு அறிக்கை

*கூறுகிறார் கெஹலிய*

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் வடக்கு-கிழக்கு மீளிணைப்புக்கான கூட்டாட்சிக் (சமஷ்டி) கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்தே அரசமைப்பு உபகுழுவின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

திம்பு கலந்துரையாடலிலிருந்து இன்றுவரை பயங்கரவாத்தை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசமைப்பு மற்றும் அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 13ஆவது திருத்தத்தைத் கொண்டு வர ஜே.ஆர். ஜெயவர்தனவுக்குப் பெரிய அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. அதனால்தான் விருப்பம் இல்லாமல் அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தார். அதில் ஒரு உபாயமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கொழும்புஅரசோடுஇணைந்து செயற்படுமாறு குறிப்பிட்டிருந்தார். மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல்வாக்குறுதியில்புதியஅரசமைப்பு மற்றும் நிறைவேற்று அரச தலைவர் முறைமைஒழிப்பு ஆகியவற்றை முன்வைத்தார்.

அதுபோலவே தற்போது எதிர்க்கட்சித் தலைவராகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கு – கிழக்கு மீளிணைப்புக்கான கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்து தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருந்தார். புதிய அரசமைப்பினூடாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உறுதிமொழி அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வாக்குறுதி நிறைவேற் றப்படவுள்ளது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

நாடாளுமன்ற உபகுழுக்களின் அறிக்கையில் தெளிவாக ஒரு விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் முதல் மூன்று உறுப்புரைகள் மாற்றியமைக்கப்படும் அல்லது இல்லாமலாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் இரண்டாவது உறுப்புரை இலங்கை ஒற்றையாட்சி அரசு எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் விருப்பத்தை நிறைவேற் றவே இவர்கள் காத்திருக்கின்றார்கள் எனத் தெரிய வந்துள்ளது - என்றார். (த-5)

# சுவிற்சர்லாந்தில் இலங்கைக்கு பெரும் வரவேற்பு

## தப்பபிப்பிராயமும் நீங்கியது என்கிறார் அமைச்சர் ஹரின்



கொழும்பு, ஜன. 24

சுவிஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாடு அரசுக்குப் பெரும் வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளது. கடந்த அரசின் காலத்தில் இலங்கை தொடர்பில் பன்னாட்டு மட்டத்தில் காணப்பட்ட தவறான அபிப்பிராயங்களையும் தற்போது மாற்றியுள்ளோம்.

இவ்வாறு டிஜிற்றல் தொழில்நுட்ப அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பன்னாட்டுப் பொருளாதார மாநாட்டில் இலங்கை கலந்துகொண்டமை குறித்துத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கூட்டு அரசு முன்னெடுத்து வரும் நல்லிணக்க முயற்சிகளும் மனித உரிமைகளைப் பாதுகாக்க வகுத்துள்ள வேலைத்திட்டங்களின் அடிப்படையிலும், சுவிஸில் நடைபெற்ற பன்னாட்டுப் பொருளாதார மாநாடு அரசுக்குப் பெரும் வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளது.

சுவிஸின் டாவோஸ் நகரத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் இலங்கை கலந்துகொண்டமையால் பெரும் முதலீடுகள் எதிர்காலத்தில் இலங்கைக்கு வரவுள்ளன. எமது பொருளாதாரத் திட்டம் குறித்து ரணில் விக்கிரமசிங்க அந்த மாநாட்டில் விளக்கமளித்திருந்தார். அதற்குப் பன்னாட்டு முதலீட்டாளர்கள் மிகுந்த வரவேற்பைக் கொடுத்தனர்.

கடந்த அரசின் காலத்தில் இலங்கை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் தவறான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலமையை எம்மால் மாற்ற முடிந்தது. உலகத்தலைவர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் இது தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தினார்.

முதலீடு

அதன் மூலமாக இலங்கையில் தற்போது முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளில் உலக நாடுகளினதும் முதலீட்டாளர்களினதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியா, சீனா, அமெரிக்க முதலீட்டாளர்கள் இந்த மாநாட்டின்போது நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம மற்றும் தலைமை அமைச்சர் ரணிலுடன் முதலீட்டை மேற்கொள்வதில் உள்ள ஆர்வம் குறித்துத் தெரிவித்தனர். குறிப்பாக சீனாவின் ஈ.கொம் சேவையில் ஈடுபட்டுவரும் அலிபாபா நிறுவனம் நிதி அமைச்சருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கைக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை ஒரு வரப்பிரசாதம். பன்னாட்டு முதலீட்டாளர்கள் எதிர்வரும் காலங்களில் துறைசார் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுடன் பேசி இலங்கையில் முதலீடு செய்வது குறித்து ஆராயவுள்ளனர்.

*உரிமையின் நிலைப்பாடு*

இதேவேளை, மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தையும்விட தற்போதைய சமகால கூட்டாட்சி அரசில் ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடுவதற்கும் எழுதுவதற்கும் உரிமையுண்டு. இதனாலேயே சில வங்குரோத்து அரசியல்வாதிகள் தம்மை மீண்டும் அரசியலில் நிலை நிறுத்திக்கொள்வதற்காக அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையில் கருத்து முரண்பாடு இருப்பதாக - உண்மைக்குப் புறம்பான விடயங்களை மக்கள் மத்தியில் பரப்புகின்றனர். அவர்களது பரப்புரையில் எவ்விதமான உண்மையும் இல்லை. அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் இடையிலான உறவு சுமுகமாகவே உள்ளது. நாங்கள் இல்லாமல் அரச தலைவரும் இல்லை- என்றார். (த-4)

# அதிசொகுசுக் காருடன் சிக்கியது கேரளக் கஞ்சா

மன்னரில் மூவர் பொலிஸாரால் கைது

மன்னார், ஜன.24

தலைமன்னாரில் இருந்து மன்னார் ஊடாகக் கொழும்புக்கு அதிசொகுசுக் கார் ஒன்றில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் 3 பேரை மன்னார் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்தனர்.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, 2ஆம் கட்டைப் பகுதியில் வைத்தே குறித்த கஞ்சாப் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த அவர்கள் தலைமன்னாரில் இருந்து மன்னார் நோக்கி வந்துகொண்டிருந்த சொகுசுக் கார் ஒன்றை இடை மறித்துச் சோதனை செய்தனர். இதன்போது காரில் மறைத்து வைத்திருந்த நிலையில் சுமார் 35 கிலோ கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. குறித்த காரில் பய ணித்த கொழும்பைச் சேர்ந்த 3 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த கஞ்சாப் பொதிகள் 35 இலட்சம் ரூபா பெறுமதியானது எனத் தெரிய வருகின்றது.

எனினும் குறித்த கஞ்சாப் பொருள் மீட்கப்பட்டதை பொலிஸார் உறுதிப்படுத்தியபோதும் அவற்றைப் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-56)

# பஸ்யால விபத்தில் இருவர் உயிரிழப்பு

*35 பேர் வரை காயம்*

கொழும்பு, ஜன 24

கொழும்பு கண்டி வீதி, பஸ்யால பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் லொறி ஒன்றுடன் பஸ் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 35 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் ஒரு கார் மற்றும் முச்சக்கரவண்டி ஆகியனவும் சேதமடைந்துள்ளன. (த)

பிணை முறி மோசடி விசாரணைக்கு

# அரச தலைவர் குழுவை நியமிக்கும் வர்த்தமானி இந்த வாரம் வெளிவரும்

யாழ்ப்பாணம், ஜன. 24

மத்திய வங்கிப் பிணைமுறிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில், அரச தலைவர் ஆணைக்குழுவை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் வெளியிடப்படும்.

இவ்வாறு அரச தலைவர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது கீச்சகத்தில் (ருவிற்றர்) நேற்று முன்தினம் இது தொடர்பில் பதிவிட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில்,

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றிப் புலனாய்வு மற்றும் விசாரணை மேற்கொண்டு அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக அரச தலைவர் ஆணைக்குழுவை நியமிப்பதற்கு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர், மேல் நீதிமன்ற நீதிபதி மற்றும் கணக்காய்வு நிபுணர் ஆகியோரை உள்ளடக்கிய மூன்று பேர் அடங்கிய அரச தலைவர் ஆணைக்குழுவை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரம் வெளியிடப்படவுள்ளது. ஆணைக்குழுவின் விதந்துரைகளுடனான அறிக்கை மூன்று மாதத்தினுள் நிறைவு செய்யப்படும்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு அரச தலைவர் மைத்திரிபால, தொடர்புடைய தரப்புக்களிடம் கோரியுள்ளார். (த-5)

# கூட்டு எதிரணிக் கூட்டத்தில் முக்கிய முஸ்லிம் அமைச்சர்

## பங்கேற்கவுள்ளார் எனத் தகவல்

மகிந்த தலைமையில் கூட்டு எதிரணி 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடத்தவுள்ள கூட்டத்தில், கூட்டு அரசின் முக்கிய முஸ்லிம் அமைச்சர் ஒருவர் பங்கேற்கவுள் ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டு எதிரணியால் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை நுகேகொடையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் பங்கேற்கவுள்ளார். கூட்டு அரசின் அதிருப்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் மேடையேறவுள்ளனர் என்று கூட்டு எதிரணியினர் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர். கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய முஸ்லிம் அமைச்சர் ஒருவரும் இந்தக் கூட்டத்தில் மேடையேறவுள்ளார் எனக்கூட்டுஎதிரணியினர்தெரிவித்துள்ளனர். முஸ்லிம் அமைச்சர் கூட்டு எதிரணியுடன் இணையவுள்ளமை உறுதி என்றும் அவர்கள் குறிப் பிட்டுள்ளனர். இதற்கான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, கூட்டு எதிரணி உறுப்பினர் அப்துல் சத்தார் தெரிவித்தார். (த-5)



# மட்டு. குளங்களில் நீர் மட்டம் உயர்வு

மட்டக்களப்பு,ஜன.24
நீண்ட வறட்சிக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் பெரிய குளங்களின் நீர் மட்டம் அதிகரித்திருப்பதாகப் பிரதேச நீர்ப்பாசனப் பொறியிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையில் உன்னிச்சைக் குளம், உறுகாமம் குளம், வாகனேரி குளம், வெலிக்காகண்டி குளம், வடமுனை குளம், கித்துள் வடிச்சல் குளம், கட்டுமுறிவு குளம், புனானை குளம் ஆகியவற்றின் நீர் மட்டம் தற்பொழுது பெய்து கொண்டிருக்கும் அதிக மழையினால் மேலும் அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும் உறுகாமம் நீர்ப்பாசனத் திட்டத்துக்குப்பொறுப்பான பிரதேச பொறியியலாளர் எஸ். நிரோஜன் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப் பிரதேசத்திலுள்ள நவகிரி பெரிய நீர்ப்பாசனக் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாக பிரதேச நீர்ப்பாசனப் பொறியிலாளர் எம். மயூரன் தெரிவித்தார். (ஐ)

# வெட்டுப்புள்ளியைக் குறைத்து ஆசிரியர் நியமனம் வழங்குங்கள்

## கிழக்கு மாகாண சபையில் பிரேரணை

மட்டக்களப்பு,ஜன.24
பட்டதாரிகளின் வெட்டுப் புள்ளிகளைக் குறைத்து ஆசிரியர்நியமனம்வழங்கக் கோரி, கிழக்கு மாகாண சபையில் பிரேரணையொன்றை முன்மொழிய இருப்பதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கிழக்கு மாகாணப்பொதுச்சேவைஆணைக் குழுவால் உளச்சார்பு, பொதுஅறிவு ஆகிய இரு பாடங்களில் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

அதற்கமைய, 16.01.2017 அன்று வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றின்படி ஒவ்வொரு பாடங்களிலும், 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 305 ஆசிரியர்கள் நேர்முகத்தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஏனைய மாகாணங்களில், வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் மீண்டும் நடத்தப்பட்டு, ஆசிரியர்களை உள்வாங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே 01.08.2016 ஆம் தேர்வின்படி வெட்டுப் புள்ளிகளை30 அல்லது 35 ஆகக் குறைத்து தேவையான ஆசிரியர்களை இந்தப் பெறுபேற்றின் அடிப்படையில் உள்ளீர்த்துநியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவசர பிரேரணை யொன்றைக் கிழக்கு மாகாண சபையில் கொண்டுவரவுள்ளேன். இந்தப் பிரேரணை இன்றுநடைபெறும்மாகாண சபைக்கூட்டத்தில்முன்வைக்கப்படும்.–என்றார். (து-ஐ)

# கிழக்குப் பல்கலை மாணவர் போராட்டம்

## விரிவுரைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரி

மட்டக்களப்பு, ஜன 24
கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள விரிவுரைகளை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி, பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலுக்கு முன்னால் நேற்று ஒன்றுகூடிய மாணவர்கள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



கிழக்குப் பல்கலைகழக மாணவர்களின் விடுதி உரிமைப் போராட்டம் காரணமாகப் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

முன்னதாகக் கடந்த சனிக்கிழமை, மாணவர்கள் அனைவரையும் பல்கலைகழக வளாகத்தை விட்டு வெளியேறுமாறு நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

மாணவர்கள் வெளியேற விதிக்கப்பட்டுள்ள காலக்கெடு, கடந்த சனிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்தபோதிலும் தொடர்ந்தும் மாணவர்கள் நிர்வாகக் கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

விடுதி வசதியுடன் மீண்டும் விரிவுரைகளை ஆரம்பிக்கக் கோரி நேற்று நண்பகல் நிர்வாகக் கட்டடத் தொகுதியிலிருந்து பேரணியாகப் புறப்பட்ட மாணவர்கள் வந்தாறுமூலை பிரதான வாயிலை சென்றடைந்து, தங்கள் உரிமைகளை வலியுறுத்தும் வகையில் கோசங்களை எழுப்பினார்கள்.

இதேவேளை, பல்கலைகழகத்தின் மாணவர்கள் 10 பேர், நேற்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டு, இன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டதாக மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (து)

# கைத்தொழில் அமைச்சுக்கு புதிய செயலாளர்

கொழும்பு, ஜன 24
கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சின் புதிய செயலாளராக சிந்தக்க எஸ். லொக்குஹெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை தனது பணிகளை அமைச்சில் ஆரம்பித்தார்.

இந்த நிகழ்வில் கைத்தொழில்மற்றும்வர்த்தகஅலுவல்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (து)

# கொத்மலை நீர்த்தேக்கத்தில் சடலம் மீட்பு

கொழும்பு,ஜன.24
தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கப் பகுதியில் ஆணின் சடலம் ஒன்றைத் தலவாக்கலைப் பொலிஸார் நேற்று மதியம் மீட்டுள்ளனர்.

குறித்த சடலம் தலவாக்கலை ரயில் நிலையத்திற்கு அப்பால், மேல் கொத்மலை நீர்த்தேக்கப் பகுதியில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரேட்வெஸ்டன் கல்கந்த தோட்டத்தில் வசிக்கும் க.ரவீந்திரன் (வயது 30) என்பவரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.(ஐ)

# பெல்ஜியத்தின் தூதுக் குழு விரைவில் இலங்கை வரும்

பெல்ஜியம் நாட்டின் தூதுக் குழுவினர் விரைவில் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளதாகப் பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகம் தெரி வித்துள்ளது.

சுவிற்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்ற உலகப் பொருளாதார மாநாட்டின் போது இலங்கை மற்றும் பெல்ஜியம் நாட்டின் உயர்மட்டக் குழுவினருக்கு இடையில் பேச்சு ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு மாநகர கழிவு நீர் முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கியுடன் இலங்கை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டுள்ளது. ஐரோப்பிய முதலீட்டுவங்கியின்உபதலைவர்அன்ரூமக்டொவலுக்கும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் இந்த 50 மில்லியன் யூரோ நிதி உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் மூலம் கொழும்பு மாநகர கழிவு நீர் முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற் காக 50 மில்லியன் யூரோ நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக பெல்ஜியத்திலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (து)

# கோப் குழு விவாதத்தை தடுக்கவே மனுத் தாக்கல்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கோப் குழு தொடர்பிலான விவாதத்தைத் தடுப்பதற்காகவே தெனியாவெல பாலித தேரரால் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் அரசியல் களத்தில் தேரர்கள் தான் தற்போது அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். விமல் வீரவன்ச நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வருகை தந்தபோது பெல்கமுவ நாகல தேரர், அவருக்குப் பிரித் நூல் கட்டிவிட்டார். இந்தத் தேரர் மகிந்தவின் ஆலோசகராக செயற்பட்டபோது 60 ஆயிரம் ரூபா மாதச் சம்பளமும் சொகுசு வாகனமும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில், நாளை (இன்று) நாடாளுமன்றில் கோப் அறிக்கை தொடர்பிலான விவாதம் இடம்பெறவுள்ள நிலையில், லங்கா வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினரான தெனியாவெல பாலித தேரர் குறித்த அறிக்கைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு நாடாளுமன்றில் நடைபெறவுள்ள கோப் அறிக்கை தொடர்பிலான விவாதத்தைத் நிறுத்துவதற்காகவே அரசு முயற்சிக்கின்றது.

இந்த விவாதம் நாளை (இன்று) நாடாளுமன்றில் எடுத்துக் கொள்ளப்படும்போது சபை முதல்வரான லக்ஸ்மன் கிரியெல்ல, அறிக்கை தொடர்பிலான மனு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் விவாதத்தை நடத்த முடியாது என்று அறிவிப்பார். அதற்கிணங்க விவாதமும் பிற்போடப்படும். இதுதான் இந்த அரசியல் திட்டமாகும். இதற்கெல்லாம் நாம் ஒருபோதும் பணியமாட்டோம்.

இந்த விடயம் குறித்து அவ்வளவு தெளிவாகப் பேசும் குறித்த தேரரை வைத்தியசாலைப் பணிப்பாளர் சபை உறுப்பினராக அன்றி மத்திய வங்கியின் ஆளுநராக தலைமை அமைச்சர் ரணில் நியமித்திருக்கலாம் - என்றார். (து-5)

# அர்ஜூன் மகேந்திரன் மீண்டும் நிதியமைச்சில்

## ஊழல் தடுப்பு முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன 24
மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன்மகேந்திரன்,தற்போதுநிதிஅமைச்சின் ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார் என ஊழல் தடுப்பு முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

நிதி அமைச்சின் சந்திப்புக்களில் மத்திய வங்கயின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பங்குபற்றுவதைத் தடுக்கக் கோரி ஊழல் தடுப்பு முன்னணி, அரச தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள புதிய ஆணைக்குழு ஒன்று நியமித்தமையை தாம் வரவேற்பதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அர்ஜுன் மகேந்திரன் எவ்வாறு நிதி அமைச்சின் ஆலோசகராகப் பணியாற்ற முடியும்?. அர்ஜுன் மகேந்திரன் தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்ட பலருடன் நிதி அமைச்சின் கூட்டங்களில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக் கிழமைகளில் கலந்து கொள்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கவேண்டும் - என்றுள்ளது. (து)

## ரயில் சாரதிகள் சட்டப்படி வேலை

ரயில் சாரதிகள் பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று இரவு தொடக்கம் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் புகையிரத இயந்திர செயற்புடுத்தல் பொறியியலாளர்கள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் இந்திய தொடங்கொட, இந்தத் தகவலை வெளியிட்டார்.

பல தடவைகள் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் போதும் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை. அதனால் சட்டப்படி வேலைசெய்யும் தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பித்ததாக அவர் கூறினார்.

உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் நாட்களில் பெரியளவிலான தொழிற்சங்கப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (வ-4)

## காரைக்காலில் இன்று குதிரைத் திருவிழா

இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிறி விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் ஆலய அம்பாள் சந்நிதி பெருந் திருவிழா நடைபெற்று வருகிறது.

இதில் இன்று இரவு 7 மணிக்கு குதிரை வாகனத் திருவிழாவும் நாளை புதன்கிழமை இரவு 7 மணிக்கு சப்பைரதத் திருவிழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறுகிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

## மரண அறிவித்தல்

### பேரம்பலம் கணேசலிங்கம்

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட E.S.P கொம்பனி உரிமையாளர் பேரம்பலம் கணேசலிங்கம் நேற்று (23.01.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 691 3239


ICBT CAMPUS JAFFNA
www.icbt.lk


CIVIL ENGINEERING
QUANTITY SURVEYING
Qualified Lecture Panel | Library, Laboratory, Modern Lecture Hall facilities
Cafeteria | Recreation Area | Student Friendly Environment | Easy Payment
Accredited by:
Cardiff Metropolitan University, UK | European Quality Assurance Agency | NAARIC
580,Hospital Rd., Jaffna | Tel: -0214 777 888
0770 746 553 | 0769 289 784

# நுழைய முடியாத நிலையில் யாழ். நகரப் பகுதி பொதுக் கழிப்பறைகள்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு









யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். நகரின் மத்தியில் உள்ள நவீன சந்தை கட்டடத்தொகுதியைத் திருத்தி அமைத்த நகர சபையினர் அங்குள்ள மலசல கூடங்களைச் சீரமைக்காது விட்டுள்ளனர். அதனால் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

யாழ். நகரத்துக்கு பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகின்றனர். விசேட நாள்களில், அதாவது தீபாவளி, வருடப்பிறப்பு, பொங்கல், பால்ன்பிறப்பு, ஹஜ் பெருநாள் போன்ற நிகழ்வுகளின் போது அதிகமான மக்கள் யாழ் நகரத்துக்கு வருகின்றனர். வருவோர் நீண்ட நேரம் நகரப் பகுதிகளில் உலாவி தங்களுடைய தேவைகளை நிறைவு செய்வர்.

நகரப் பகுதியில் மக்களுடைய அடிப்படைத் தேவைகளில் ஒன்றான மலசல கூட வசதி ஏற்படுத்த வேண்டியது கட்டாயமானது. யாழ். பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறை 10 ரூபா கட்டணத்துடன் பயன் படுத்தக் கூடியதாக உள்ளது. பலர் அவற்றைப் பயன்படுத்தமாட்டார்கள். கட்டணமின்றி உள்ள பொதுக் கழிப்பறைகளையே பயன்படுத்துவார்கள். யாழ். நகரப் பகுதியில் உள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் மாநகர சபையால் கழிப்ப றைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் தற்போதைய நிலமை கவலை அளிப்பதாகவே உள்ளது.

அவற்றில் ஒன்றேனும் சிறந்த முறையில் காணப்படவில்லை. கழிப்பறைக்குள் சென்ற மறு நொடியே அங்கிருந்து வெளியேறும் நிலையில் சிலதும், உள்ளே போக முடியாத அளவில் படு மோசமாக சிலவும் உள்ளன. கதவுகள் உடைந்துள்ளன. ஆண்களுக்கான கழிப்பறைகள் உடைந்துள்ளன. பெண்களுடைய கழிப்பறை ஓரளவு பயன்படுத்தக்கூடியதாக இருந்தாலும் ஒரு சில கழிப்பறைகளே அவ்வாறு உள்ளன.

இரவு வேளைகளில் வெளிமாட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு வருபவர்கள் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைக்கு செல்வார்கள். அது இரவு வேளைகளில் மூடப்பட்டு விடும். வேறு வழியின்றி பேருந்து நிலையத்தின் இருட்டு நிறைந்த பகுதிகளில் சிறுநீர் கழிக்கின்றனர். பொது மலசல கூடங்கள் எங்கு உள்ளது என்பது அவர்களுக்குத் தெரியாது. நகர சபையினர் விரைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.- என்றனர்.

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட வகையில் நல்லூர், நவீன சந்தை கட்டடத் தொகுதி, பெரிய கடை மரக்கறிச் சந்தை, பண்ணை சந்தைபோன்ற இடங்களில்பொதுமலசலகூடங்கள் உள்ளன. சிலவற்றில் திருத்தவேலைகள் காணப்படுகின்றன. அவை இன்னும் ஓரிரு தினங்களில் திருத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு உகந்ததாக மாற்றப்படும். பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து தனியாருக்கு 6 மாதகால குத்தகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான பகிரங்க ஏலம் கூறல் நடைபெறவுள்ளது.- என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ற-21,10)

# 2017 பெப்ரவரி விசேட நுழைவு அனுமதிகள்

# SLIIT
*Discover Your Future*

## UNDERGRADUATE DEGREE PROGRAMMES

COMPUTING | BUSINESS | ENGINEERING | ARCHITECTURE | QUANTITY SURVEYING | HOSPITALITY MANAGEMENT


4 YEARS

## COMPUTING

BSc (Hons) Degree in
Information Technology *specialising in*

- Information Technology
- Software Engineering
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Interactive Media
- Cyber Security


4 YEARS

## BUSINESS

BBA (Hons) Degree
*specialising in*

- Accounting & Finance
- Marketing Management
- Human Capital Management
- Logistics & Supply Chain Management
- Business Analytics


4 YEARS

## ENGINEERING

BSc Engineering (Hons) Degree
*specialising in*

- Civil Engineering
- Electrical & Electronic Engineering
- Materials Engineering
- Mechanical Engineering
- Mechanical Engineering (Mechatronics)

## UGC Approved. Professionally Accredited

**வர்த்தக இளமாணி (சிறப்பு) மற்றும் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டங்களுக்கான நுழைவு தகைமைகள்**
ஒரே தடவையில் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் (இலங்கை / இலண்டன்) மூன்று பாடங்களிலும் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவு சோதனையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**கணனி முறைமைகள் மற்றும் வலையமைப்பு பொறியியலுக்கான தகைமைகள்**
மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பதாரி க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் இணைந்த கணிதம் அல்லது பௌதீகவியல் உள்ளடங்கலாக ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவு சோதனையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது உயர் தரத்தில் தொழில்நுட்பத் துறையில் கற்றிருத்தல் வேண்டும்.

**விஞ்ஞான இளமாணி பொறியியல் (சிறப்பு) பட்டங்களுக்கான நுழைவு தகமைகள்**
இலங்கை / இலண்டன் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் இணைந்த கணிதம் அல்லது பௌதீகவியலில் திறமைச் சித்தி உள்ளடங்கலாக கணிதத் துறையில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருப்பதுடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவு சோதனையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 2017 பெப்ரவரி 02**

### நுண்ணறிவு சோதனை

| | |
|---|---|
| நுண்ணறிவு சோதனை | : 2017 பெப்ரவரி 05 (மு:ப 10.00 - மு:ப 11.00) |
| அமைவிடம | : அனைத்து SLIIT வளாகங்கள் மற்றும் நிலையங்கள் (கொழும்பு, மாலபே, கண்டி, குருநாகல், மாத்தறை, யாழ்ப்பாணம்) |
| மொழி மூலம் | : ஆங்கிலம், சிங்களம், தமிழ் |

### விண்ணப்பிப்பது எவ்வாறு

| | | |
|---|---|---|
| தெரிவு 2 | Apply online www.sliit.lk/apply | Register Online |
| தெரிவு 3 | Download the Application from www.sliit.lk | Send the duly filled Application form to Manager Academic Affairs SLIIT, BoC Merchant Tower, #28, St. Michael's Road, Colombo 03 |
| தெரிவு 1 | எமது வளாகங்கள் அல்லது கல்வி நிலையங்களில் ஏதேனுமொன்றிலிருந்து விண்ணப்பத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் | |

**011 754 4801 OR 011 230 1904**

SLIIT
*Discover Your Future*
BoC Merchant Tower,
#28, St. Michael's Road, Colombo 03
Tel: (011) 230 1904 URL: www.sliit.lk Email:info@sliit.lk

ASSOCIATION OF COMMONWEALTH UNIVERSITIES & INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES

## மெய்வன்மை போட்டிகள்

கொடிகாமம் கெற்பேலி அ.த.க பாடசாலைஇல்லமெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிர திக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் த.கந்தையாவும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

+++++++++

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் திருமதி எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் என். காண்டீபனும் சிறப்பு விருந்தினராக விக்ரோறியன் எஸ். தவராஜாவும் கௌரவ விருந்தினராக விக்ரோறியன் கே.வினோதனும் கலந்து சிறப்பிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## 'காகிதக் கப்பல்கள்' நூல்வெளியீடு

மிருசுவில் தமிழ்தாசன் எழுதிய காகிதக் கப்பல்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப.3 மணிக்கு மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கவிஞர் த.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குத் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி உதவிப்பிரதேசசெயலர் செல்வி ரஞ்சினி நவரத்தினம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அலுவலர் சி.முகுந்தன் சமூகமாமணி அ.கிருபாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர் களாக சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் இ.கோகிலன், சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நூல்வெளியீட்டுரையை தளவாசல் சஞ்சிகை ஆசிரியர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் நிகழ்த்துவார். முதன்மைவிருந்தினர் நூலை வெளியிட கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் அகிருபாகரன் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)



# கல்வி அமைச்சின் செயலாளரிடம் விளக்கம் கேட்டுவிட்டு நடவடிக்கை

## போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

இடமாற்றம்கோரி ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தின்போது என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. ஒரு தரப்பினரின் கருத்துக்களை மட்டும் வைத்து முடிவு எடுக்க முடியாது. கல்வி அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் வெளிநாட்டில் உள்ளனர். நாடு திரும்பியதும் அவர்களிடமும் விளக்கம் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

கைதடியிலுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்துக்கு முன்பாக ஆசிரியர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது மாவட்டத்துக்கு இடமாற்றத்தை வலியுறுத்தியும் சில ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள பணித்தடையை விலக்க வேண்டும் என்று கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

அதன்பின்னர் முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் வைத்து இலங்கை ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உள்ளிட்டவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அதன் பின்னர் ஸ்ராலின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பிறமாவட்டங்களில்பணிபுரியவேண்டிய கால வரையறையை நிறைவு செய்துள்ளதாகத் தெரிவிக்கும் பிற மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு வலியுறுத்தி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு முன்பாக அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் இலங்கையின் பல பாகங்களிலும் ஜனநாயக ரீதியான போராட்டங்கள் இடம்பெற்றன. அதேபோலவே ஆசிரியர்களும் தங்களுக்கு நீதி வேண்டி வடக்கு மாகாண கல்வியமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக கடந்த 10ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களின் கோரிக்கைகளை சிறுமைப்படுத்தும் விதமாக கல்வியமைச்சின் செயலாளரின் வாகனம் செல்ல முற்பட்டவேளை ஆசிரியர்கள் வாகனத்தை வழிமறித்திருந்தனர். இதன்போது சிலர் காயமடைந்தனர். செயலாளரின் வாகன சாரதியும் ஆசிரியர்களை தாக்க முயன்றுள்ளார்.

இந்த நிலையில் செயலாளர் பூட்டப்பட்டிருந்த முன் கதவினூடாக ஏறிப் பாய்ந்து வேறொரு வாகனத்தில் சென்றிருந்தார். இதனையறிந்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தோம்.

அதேவேளை ஆசிரியர் ஒருவர் தன்னைத் தாக்க வந்ததாகக் கல்வியமைச்சின் செயலாளரினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதாக அறியமுடிந்தது. ஆனால் ஆசிரியர்கள் காயமடைந்த நிலையில் செயலாளர் தற்காப்பு முயற்சியாகவே முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன்போது இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து சில ஆசிரியர்களுக்கு விசாரணைக்கான பணித்தடை உத்தரவு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் அனுப்பப்பட்டது. இது ஜனநாயக உரிமையை நசுக்கும் செயற்பாடாகாவே நாம் கருதுகிறோம். வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொள்ளும் பாரபட்சங்களின் உச்சத்தில் நாம் இழைக்கும் அநீதிகளை நியாயப்படுத்தியும் ஜனநாயக உரிமையை நசுக்கியும் செயற்பட முன்வந்தமையை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு பணித்தடை வழங்கப்பட்டதை நாம் கண்டிக்கிறோம்.

இடமாற்றங்களைக் கோரி கவனவீர்ப்புச் செய்தமை ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான உரிமை. இதனைச் சிறுமைப்படுத்த முயற்சித்த வேளையிலேயே அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதாக கருதுகின்றோம். வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தால் இடமாற்றங்கள் பாரபட்சமாகவே தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று வரை 2017ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த இடமாற்றமும் நீதியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வருடாந்த இடமாற்றத்தில் வெளிமாவட்டங்களில்சேவைநிபந்தனைக் காலத்தைநிறைவுசெய்துபணியாற்றி வரும் ஆசிரியர்களுக்குத் தொழிற் சங்கங்களுடன் இணைந்து எட்டப்பட்ட தீர்மானத்துக்கமையவே இடமாற்றங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கும் அதிகாரிகள், வெளிமாவட்ட பாடசாலைகளுக்கு ஆசிரிய ஆளணி வழங்க இலங்கை ஆசிரியர் சங்கம் இடமாற்றச்சபையில் விதித்த நிபந்தனைகளுக்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒருவார கால அவகாசத்தின் பின்னரும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குநீதிகிடைக்கவில்லை என்றால், மீண்டும் தொழிற் சங்கங்களை இணைத்து போராட்டத்தில் ஈடுபட உத்தேசித்துள்ளோம் - என்றார். (வ-4,8)

## கல்முனை புனித யூதாததேயு ஆலயத் திருவிழா

கொழும்புத்துறை, ஜன.24

பூநகரி கல்முனை புனித யூதாத தேயு ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை. 4.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமா கும் என்று அறிவிக்கப்பட்டது.

28ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச் சொரூப பவனியும் இடம் பெறவுள்ளதாக பங்குத் தந்தை அருட்திரு. யே.அருள்தாஸ் அடிகள் தெரிவித்தார். (வ-135)

## காந்தி அடிகளின் 69ஆவது நினைவு

யாழ்ப்பாணம், ஜன. 24

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி அடிகளின் 69ஆவது நினைவு தினம் எதிர் வரும் 30 ஆம் திகதி திங்கட் கிழமை கொண்டாடப்படவுள்ள தாக பொதுச் செயலர் ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள மகாத்மா காந்தியடிகளின் திருவுருவச் சிலையடியில் முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் தலை வரும் யாழ். பல்கலைக் கழக மெய்யியல்துறை விரிவுரையாளருமான ந.சிவகரன் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

கிளிநொச்சி உருத்திரபுரம் காந்திய நிலைய சிறுவர் இல்லத்தில் பி.ப 3 மணிக்கு கிளிநொச்சி காந்தி நிலையத் தலை வர் கா.கார்த்திகேசு தலைமையில் நினைவு தின நிகழ்வு நடைபெறும். என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## தொலைக்கல்வி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களின் நலன்கருதி திசைமுகப்படுத்தல் நிகழ்வு ஒவ் வொரு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடத்தப்படும் என்று யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய பணிப்பாளர் பா.நிமலதாசன் அறிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் வணிகமாணி புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் மூலம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி இந்த நிகழ்வு ஏற்பாடாகியுள்ளது. இதற் கான நேர அட்டவணையை WWW.jfn.ac.lk/codl எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

# வலி. தெற்கு, வலி. தென் மேற்கு பிரதேசங்களில்டெங்கு அபாயம்

## சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 24

வலி. தெற்கு, வலி. தென்மேற்கு ஆகிய பிரதேசங்களில் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. 20 தினங்களில் 34 டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட் டுள்ள சுகாதாரப் பிரிவினர், டெங்கு நுளம்புப் பெருக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழலை வைத் திருந்த 10 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பருவ மழை ஏமாற்றிய போதிலும் டெங்கு நோய்த் தொற்று குறிப்பிட்ட பிரதேசங்களில் அதிகரித்துள்ளது. இதனையடுத்து நோயின் தாக்கம் அதிகமாக இனங்காணப்பட்ட இடங்களில் புகையூட்டல் நடவடிக்கை முன்னெடுக்கப் படுகிறது.

பொதுச் சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீடுகளுக்கு நேரில் சென்று பரப்புரை நடவடிக்கையையும் சோதனை நடவடிக்கையையும் முன்னெடுத்து வருகின்றனர்.

வலி. தெற்குப் பிரதேசத்தில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இணுவில், மல்வம் ஆகிய இடங்களில் கடந்த 20 நாட் களுக்குள் 25 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதேபோல் வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சாவற்கட்டு, பண்டத்தரிப்பு, இளவாலை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் 9 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய்த் தொற்று இனங் காணப்பட்ட கிராமங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பொலிஸாருடன் இணைந்து வீடுவீடாக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-115)

## மாவாப் பாக்கு வைத்திருந்தோருக்கு ரூ. 9,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஜன. 24

கஞ்சா போதை கலந்த மாவாவினை வைத்திருந்த இரண்டு இளைஞர்களுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று நேற்று 9 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரண்டு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக நீதிமன்றில் நேற்று பொலிஸாரால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. குற்றச்சாட்டை இரண்டு இளைஞர்களும் ஏற்றுக் கொண்டனர். அவர்கள் ஒவ்வொருவரையும் 9 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிவான் சி. சதீஸ்தரன் உத்தரவிட்டார். (வ-103)

## வாள் வெட்டு குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 24

வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி கைதடிப்பகுதியில் வசிக்கும் குறித்த நபரும் அவரது உடன்பிறந்த சகோதரனும் வாள் வெட்டுச் சம்பவங்கள் பலவற்றுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

சாவகச்சேரிப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற புலனாய்வுத் தகவலின் பிரகாரமே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் கூறினர். (வ-101)

# இனப்பிரச்சினையை அபிவிருத்தியுடன் ஒப்பிடவேண்டாம்

## வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால் எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என்று இல்லை. எமது நாட்டுக்கு வரும் நல்ல திட்டங்களை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் - ஏற்றுக் கொள்வோம். இனப் பிரச்சினையையும் நாட்டின் அபிவிருத்தியையும் ஒன்றாகப் பார்க்க வேண்டாம். நாட்டின் அபிவிருத்தியையே நாம் முதலில் பார்க்கவேண்டும். அப்போது தான் எமது இலக்குகளைச் சரியாக அடைய முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்தார்.

இணையம் மூலமாக வாகன வருமான வரிப் பத்திரம் பெறுவதனை அறிமுகப்படுத்தும் நிகழ்வு யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறி விட்டதோ, அதுக்கு ஏற்றாற்போல நாங்களும் மாற வேண்டும். மக்கள் இதனை விளங்கிக் கொள்ளாமல் இருக்கின்றார்கள். 25 வருடங்களாகப் பின்தங்கிய நிலையில் உள்ள நாம் எந்தவொரு செயற்பாட்டையும் செய்வதற்கு முதலில் திட்டமிட வேண்டும். பணம் இல்லை என்று சொல்லி யோசிக்கத் தேவையில்லை. நாங்கள் போடும் திட்டங்கள் சரியானால் வாய்ப்புக்கள் எம்மைத் தேடிவரும்.

ஆனால் எம்மவர்கள் இதனைப் புரிந்துகொள்ளாமல் எல்லா வேலைகளையும் பல நாள்களை எடுத்துக் கடினமாகச் செய்கிறார்கள். தொழில்நுட்பத்தைப் பின்பற்றுங்கள் என்றால் வாள் வெட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றுகிறார்கள். இந்த சமுதாயம் இப்படிச் செல்லக்கூடாது.

தற்போதைய வேகமான கால ஓட்டத்திலே நம்மை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும் - என்றார். (வ-4)

# பல்கலை. மாணவர் 5 பேர் நேற்றிரவு கைது

கொழும்பு, ஜன. 24

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக செயற்பாடுகளுக்கு தடங்கல்களை ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 10 மாணவர்கள் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதி வசதிகளை வழங்கக் கோரி பல்கலைக்கழகத்தினை முற்றுகையிட்டு, கடந்த 5 நாள்களாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் முக்கிய உறுப்பினர்கள் பத்து பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## 18 பேரிடம் தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், ஜன. 24

நுளம்பு பெருகி டெங்கு நோய்த் தொற்று ஏற்படும் விதமாக சுற்றுச் சூழலை வைத்திருந்த 18 பேருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று 27 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

யாழ்ப்பாண நகர்ப் பகுதி மற்றும் புறநகர் பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவினரும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையிலேயே 18 பேரும் இனங்காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நுளம்புகள் பெருகும் விதமாக நீர் நிரம்பிய குடம்பிகள் காணப்பட்ட பாத்திரங்களை வைத்திருந்தமை, குப்பை கூளங்களை அகற்றாமல் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர்களுக்கு எதிராக பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டன.

இவர்களுக்கு எதிரான வழக்குகள் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. நீதிமன்றில் குற்றச்சாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஒவ்வொருவருக் கும் 1500 ரூபா தண்டம் மன்றினால் விதிக்கப்பட்டது. (வ-103)

## அளவெட்டிப் பெண்ணுக்கு பொலிஸார் வலை விரிப்பு

### வங்கியிலிருந்த பணத்தை முறைகேடாகப் பெற்றதால்

யாழ்ப்பாணம், ஜன. 24

போலிக் கையெழுத்திட்டும் உருமாற்றம் செய்யப்பட்ட அடையாள அட்டையைக் காண்பித்தும் 45 ஆயிரம் ரூபா பணத்தினை முறைகேடாக வங்கியிலிருந்து பெற்றதாக அள வெட்டியைச் சேர்ந்த பெண்ணுக்கு எதிராக முறையிடப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணைத் தேடி வலை விரித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அளவெட்டியைச் சேர்ந்த பெண்ணுக்குச் சமுர்த்தி வங்கியில் இருந்துகிடைத்த பணத்தை வங்கி ஒன்றில் வைப்பிலிட்டுள்ளார். கடந்த டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி அந்தப் பெண், வைப்பில் இட்ட பணத்தை எடுக்கச் சென்றபோது, 45 ஆயிரம் ரூபா பணம் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டமை தெரியவந்தது.

அது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளையடுத்து, அவரது சகோதரியே பணத்தைப்பெற்றுக் கொண்டமை தெரியவந்தது. அந்தப் பெண்ணை கைதுசெய்ய முயற் சித்த போது, அவர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைப்போர் மீது நடவடிக்கை

## வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு போக்குவரத்து அமைச்சர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 24

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் கட்டடங்கள் அமைக்கப்பட்டால், தயவு தாட்சணியமின்றி அதிகாரிகள் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சட்டவிரோதமாக கட்டடம் கட்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறும் பிரதேச சபைகளுக்கும் சேர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடித்துறை அமைச்சின் நடப்பாண்டுக்கான அமைச்சு ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

குருநகரில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள கேட்போர் கூடத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன் தலைமையில் இந்தக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதியின்றி அவர்களின் எல்லைகளுக்குள் சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைக்கப்படுகின்றபோதும், குறித்த திணைக்களம் நடவடிக்கை எடுப்பதில்லை என்று குற்றம் சாட்டினார்.

சட்ட விரோதமாக கட்டடங்கள் அமைக்கப்படும் போது வீதி அபிவிருத்தித் திணைக்களம், அந்தப் பகுதி பிரதேச சபைக்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கும். அதன் பின்னர் பிரதேச சபைதான் கட்டடம் அமைத்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரி விளமக்களித்தார்.


இந்த விடயத்தை கவனத்தில் எடுத்த வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், வீதி அபிவிருத்தித் திணைக் களத்தின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமாக கட்டடங் கள் அமைக்கப்படும் போது அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரம் திணைக்களத்துக்கு உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர முடியும். எனவே நீங்கள் இனி வரும் காலங்களில் சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்றால், சட்டத்தை மீறுபவர்கள் எதிராக உடனடியாகவே நீதிமன்றை நாடி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த சிவாஜிலிங்கம்:

சட்டவிரோதமாக கட்டடம் அமைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கும் பிரதேச சபைகளுக்கும் சேர்த்து வீதி அபிவிருத்தித் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அவர்களும் நீதி மன்றில் வந்து நிலைமை தொடர்பில் விளக்கம் தரட்டும் என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர்,வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-8)

## பிக்குனியின் போராட்டத்துக்கு காரணம் கண்டறிந்தது பொலிஸ்



கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு அருகில் பிக்குனி ஒருவர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். உதய கம்மன்பில தலைமையிலான பிவித்துரு ஹெல உறுமயக் கட்சியின் நோக்கத்தினை நிறை வேற்றுவதற்கே அவர் அவ்வாறு போராட்டம் நடத்துவதாகப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டு அரசைக் கலைத்துவிடுமாறுகோரி நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் பிக்குனி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

போராட்டத்தைப் பார்வையிடச் சென்ற ஒருவரிடம் பிக்குனி அலைபேசியை பெற்று யாருடனோ கதைத்து விட்டு மீண்டும் உரியவரிடம் அலைபேசியைத் திருப்பிக் கொடுத்துள்ளார். இந்தச் செயலைக் கண்காணித்துக் கொண்டிருந்த பொலிஸார் குறித்த அலைபேசியைப் பெற்று இலக்கங்களைப் பரிசோதித்தபோது, அது பிவித்துரு ஹெல உறுமயக் கட்சிக்காரருடையது என்று பொலிஸாரால் கண்டறியப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த பிக்குனி நேற்றிரவு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (வ-4)

# கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன. 24

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் என்.வி.கியூ. மட்டத்திலான முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சிக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என முல்லைத்தீவு நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், இருசக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், தையல், வெதுப்புநர், அழகுக்கலையும் சிகையலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணினி வன்பொருள் திருத்துநர், நீர்க் குழாய் பொருத்துநர், மோட்டார் வாகனம் திருத்துநர் ஆகிய கற்கைநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர், புதுக்குடியிருப்பு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இலவசமாக நடைபெறும் இந்தக் கற்கைநெறிகளை கற்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி, மாங்குளம் முல்லைத்தீவிலும், அந்தந்த தொழிற் பயிற்சி நிலையங்களிலும்பதிவுசெய்ய முடியும். அலுமினியம் பொருத்துநர், மின்னியலாளர், வெதுப்புநர் போன்ற கற்கை நெறி களுக்கு எதிர் வரும் 25 ஆம் திகதி வரை பதிவு செய்யமுடியும். –என்றார். (ற-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி கந்தசாமி புனிதவதனா
தம்பதியரின் புதல்வி

**பிரியங்கா கந்தசாமி**
(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**க.பொ.த உ/த 2016 உயிரியல் பிரிவு**
3A Z– புள்ளி 2.1125 மாவட்டநிலை 23

கரும்பாக பல்கலைக் கழகமதில் மருத்துவராய்
இருப்புயர் கல்விதனில் அழகுறும் – பெருமைதனில்
கந்தசாமி பிரியங்கா காணுகின்ற துறையதனில்
பந்தியிலே வைத்துனைப் புகழும்.

Best Wishes

பெரியப்பா, பெரியன்ரா
மாமா, மாமி
ஆசையப்பா, ஆசையன்ரா

சொப்பன்ரா
சித்தப்பா, சின்னன்ரா
சகோதரர்கள், சகோதரிகள்
மைத்துனர்கள், மைத்துனிகள்

Galaxy Star
வெற்றி வாரம் 129 | திகதி 22.01.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
07 03 25 52 55

தொ.பே: 0114062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும் அல்லது நேரடி அழைப்பு 1919

அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,528,820/-
2017.01.25 ஆம் திகதி புதன்கிழமை
...
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
30 • 07 • 1956



இறைவன் அடியில்
23 • 01 • 2017

அமரர் **கனகரத்தினம் வசந்தன்**
(முன்னாள் உதவி முகாமையாளர் Hatton National Bank

அச்சுவேலி தோப்பை பிறப்பிடமாகவும், 42-1/1, அறத்துசா ஒழுங்கை, கொழும்பு-6 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். கனகரத்தினம் வசந்தன் அவர்கள் 23 ஜனவரி 2017 அன்று அதிகாலைப் பொழுதில் சிவபதமடைந்தார். அன்னார் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த அமரர் கந்தையா கனகரத்தினம், அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த அமரர் காசிப்பிள்ளை தனலக்ஷ்மி தம்பதிகளின் மூத்த புத்திரனும், கந்தரோடையைச் சேர்ந்த அமரர் முருகையா, அமரர் ரத்தினம்மாவின் மருமகனுமாவார்.

அன்னார் கௌசலாதேவியின் அன்புக் கணவரும், சிவகஜன், சிவகணேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாலன், பாஸ்கரன், ஜெயகாந்தன், உமாதேவி ஆகியோரின் அன்புத் தமையனும், இந்திரா, காயத்ததிரி, நிரஞ்சனா, சுபத்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கிறோம்.
தகவல் :– குடும்பத்தார்
0777288649 / 0112360278 / 0784566371/0763342069

## சிங்கள வகுப்பு

வடமராட்சிப் பாடசாலைகளுக்கு பகுதி நேரமாகவும் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு சிங்களம் கற்பிக்க ஆசிரியர் தேவையாயின் தொடர்பு கொள்ளவும்

தொடர்பு: 076 396 1983

## வேலையாள்கள் தேவை

யாழ் பிரதேசத்தில் அமைந்துள்ள காமன்ஸ் ஒன்றிற்கு தையல் வேலைகள் தெரிந்த பெண் வேலையாள்கள் மற்றும் உதவியாளர்கள் தேவை.

078 856 2970

(3259)
(22.17)

**40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற**

**‘ றோயல் குளுக்கோஸ்’**

தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**“ றோயல் குளுக்கோஸ்”**

Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670




**சிவா நறுமணப் பூங்கா**
இல.888, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567

(ச/00348)(11.17)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
01.05.1945



உதிர்வு
10.02.2010

**திருமதி ருக்மணி நடராசா**

திதி: 24.01.2017

எம் அன்புத் தெய்வமே ! அம்மா ! பாசத்தின் வடிவமாகப் பாரினில்
எமையெல்லாம் பண்பு சொல்லி பரிவுகாட்டிப் படிக்க வைத்து
பாதியிலே உன் செல்வங்கள் பரிதவிக்க தாயில்லாப் பிள்ளையோ காலனவன்
தாய் மடிக்கேங்கி உனைக் கவர்ந்தானோ ? மௌனத்துயர் அமர்ந்து நம் இதயம்
விம்மித் துடிப்பதென்ன ? அலைபாயும் மனமும் நிலைசோரும்
உடலும் உனைப்பார்க்கத் தவிக்கின்றன உங்கள் முகம் ஆங்காங்கு எல்லாம்
கண்டு அகமெல்லாம் கலங்குகின்றதே ! ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு ஈடாகுமா ! அம்மா அன்போடு எமை அரவணைத்து
பண்போடு எமை வழிநடத்திய நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
ஏழாண்டுகள் உருண்டோடி விட்டதே அம்மா
இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும்
உங்கள் நினைவுகள் என்றுமே எம்மை விட்டுப்பிரியாது
மீண்டுமொரு புது ஜென்மம் எடுத்திங்கு எமதுயிரை விடுவிக்க வேண்டுமம்மா ?
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

138, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

நடராசா(கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## ஜல்லிக்கட்டுக்கு வன்னி குறோஸ் ஆதரவு

முல்லைத்தீவு, ஜன.24

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடையை நீக்குவதற்காகப் போராடும் உறவுகளுடன் தாங்களும் கைகோர்த்துள்ளார்கள் என்று புதுக்குடியிருப்பு வன்னிக் குறோஸ் கலாசாரப் பேரவையினர் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச வன்னிக் குறோஸ் கலாசாரப் பேரவையின் வருடாந்தக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் கடந்த சனிக்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.

வன்னிப் பிரதேசத்தில் அழிந்துவரும் மற்றும் அழிந்த தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளை மீள் உருவாக்க வேண்டும். ஜல்லிக்கட்டுத் தடைக்கு எதிராக தமிழகத்தில் ஒன்றுதிரண்டிருக்கும் தமிழ் உறவுகளோடு நமது கரங்களையும் இணைத்து அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டது. (ற-7)




## மன்னார் மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

மன்னார், ஜன.24
மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக் குரல் அமைப்பால் நேற்றுமுன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மன்னார் எழுத்தூர் பாடசாலை, அடம்பன் பாடசாலை என்பவற்றில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
கல்விக் குரல் அமைப்பால் இந்த ஆண்டு சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் நன்மையடைவர். ஒரு தொகுதி மாணவர்களுக்கு ஓர் ஆண்டுக்குத் தேவையான அனைத்துக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன - என்று கல்விக் குரல் அமைப்பின் தலைவர் எஸ்.எம்.டிலான் தெரிவித்தார். (ற-56)

## கிணற்றுள் தவறி விழுந்த பெண் பத்திரமாக மீட்பு

### மின்சார சபையினரின் உதவியுடன்

யாழ்ப்பாணம், ஜன.24
கிணற்றுக்குள் தவறி விழுந்த குடும்பப் பெண் இலங்கை மின்சார சபைப் பணியாளர்களின் உதவியுடன் மீட்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாங்குளத்தில் இடம்பெற்றுள்ளது.
மாங்குளம் சந்திக்கு அண்மையில் தனியாக வசிக்கும் கருணாவதி (வயது-55) என்பவரே காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
கருணாவதி கிணற்றில் நீர் எடுக்கச் சென்றுள்ளார். அப்போது தவறி கிணற்றுக்குள் விழுந்துள்ளார். அவரின் அவலக் குரலைக் கேட்டுத் திரண்ட அயலவர்கள் அருகில் உள்ள இலங்கை மின்சார சபை ஊழியர்களிடம் உதவி கோரினர். அவர்கள் விரைந்து வந்து ஏணி, கயிறு என்பவற்றின் உதவியுடன் கருணாவதியை மீட்டனர். (ற-101)



# முல்லை. கடலில் இந்திய ட்ரோலர்கள் படையெடுப்பு

### நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.24
முல்லைத்தீவுக் கடலில் நேற்று இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் படையெடுத்தன. கரையில் இருந்து 6 மைல் தூரத்தில் அவை மீன்பிடியில் ஈடுபட்டன. இலங்கைக் கடற்படைக்குத் தெரியாது இந்திய மீனவர்கள் வருவது எவ்வாறு சாத்தியம்?
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியசாரா கேள்வி எழுப்பினார்.
அவர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்தில் பருவகால மீன்பிடி ஆரம்பித்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் இந்திய மீனவர்களின் ட்ரோலர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது முன்னரும் அவதானிக்கப்பட்டுள்ளது. மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர், மாவட்ட செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என அனைவருக்கும் இது தொடர்பாகத் தெரியப்படுத்தியிருந்தோம். கடந்த அரசிடமும், தற்போதைய அரசிடமும் மனுக்கள் மூலம் முறையிட்டபோதும், பேராட்டங்கள் நடத்தியபோதும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.
இப்போது கடற்கரையில் இருந்து 6 கடல் மைல் தூரத்தில் இந்திய ரோலர் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் இதனால் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். போரால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வெளி மாவட்ட மீனவர்கள் ஒருபுறம், இந்திய மீனவர்கள் ஒருபுறம் என மாவட்ட கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது.
கடற்படையினருக்குத் தெரியாது இந்திய ட்ரோலர்கள் மீன்பிடியில் ஈடுபடுவது எவ்வாறு சாத்தியம்? இந்திய ட்ரோலர் படகுகளைக் கட்டுப்படுத்தி முல்லைத்தீவு மாவட்டகடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தை வடக்கு மாகாண சபை, கொழும்பு அரசு என்பன அவசரமாகக் கையாண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ற-21,7)

## வெற்றுக் காணியில் கழிவுகள் கொட்டுவதை தடுக்கவேண்டும்

### வலி.கிழக்குப் பிரதேச சபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.24
கோப்பாய் - இராச வீதியில் கிருஷ்ணன் கோயில் சந்திக்கு அருகில் உள்ள வெற்றுக் காணியில் தொடர்ந்தும் கழிவுகள் கொட்டப்படுகின்றன. வெற்றுக் காணியின் உரித்தாளர்கள் காணியைத் துப்புரவாக்கி பாதுகாப்பு வேலி அமைக்காவிட்டால் சபை விரைவில் காணியைப் பொறுப்பேற்கும். இவ்வாறு வலி.கிழக்குப் பிரதேச சபை தெரிவித்தது.



கோப்புப்படம்

காணியில் பொதுமக்கள் கழிவுகளை இரவு நேரங்களில் கொட்டுகின்றனர். கழிவுகளை விலங்குகள், பறவைகள் இழுத்துச் செல்கின்றன. சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுகின்றது. சபையின் கழிவகற்றும் பிரிவினர் கழிவுகளைத் தினமும் அகற்றுகின்றனர்.
காணி உரிய பராமரிப்பு இன்றி உள்ளதால் மக்கள் கழிவுகளைக் கொட்டுகின்றனர். காணிக்கு உரித்தானவர்கள் காணியைப் பராமரித்து கழிவுகள் கொட்டாதவாறு பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும்.
இல்லையேல் சபை யின் சட்டத்துக்கு அமைய காணியைப் பொறுப்பேற்று, கழிவுகளைச் சேகரிப்பதற்கான கழிவு சேகரிப்புத் தொட்டியை அமைப்பது என்று ஆலோசிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## காங்கேசன்துறை எரிபொருள் நிலையம் நாளை முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜன.24
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான காங்கேசன்துறை எரிபொருள் விற்பனை நிலையம் 27 ஆண்டுகளின் பின்னர் மக்கள் பாவனைக்காகத் நாளை திறக்கப்படவுள்ளது.
இவ்வாறு சங்கத்தின் தலைவர் ந.உமாகரன் தெரிவித்தார்.
நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்டச் செயலாளர் நா. வேதநாயகன் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் வி.சண் முகநாதன் ஆகியோர் எரிபொருள் விற்பனை நிலையத்தைத் திறக்கவுள்ளனர்.
இந்த எரிபொருள் விற்பனை நிலையம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது. அது சீரமைக்கப்பட்டு முதற்கட்டமாக டீசல் விநி யோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது. விரைவில் பெற்றோல், மண்ணெண்ணெய் விநியோகமும் நடைபெறும் என்றும் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ற-17)

## இ.போ.ச. ஊழியர் மீது தாக்குதல்

வவுனியா, ஜன.24
வவுனியாவில் இலங்கைப்போக்குவரத்துச் சபை ஊழியர் மீது நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியாவில் புதிதாகத் திறக்கப்பட்ட பேருந்து நிலையத்துக்குள் இ.போ.ச. பேருந்து நுழைவதற்காக அங்கு கடமையில் இருந்த இ.போ.ச. பாதுகாப்பு உத்தியோகத்தர் வாயிலைத் திறக்க முற்பட்டார். அங்கிருந்த தனியார் பேருந்து ஊழியர் ஒருவர் வாயிலைத்திறக்க வேண்டாம்என்றுகூறியுள்ளார். அதைப் பொருட்படுத்தாது இ.போ.ச. பாதுகாப்பு உத்தியோகத்தர் வாயிலைத் திறந்தார். ஆத்திரமுற்ற தனியார் பேருந்து ஊழியர் தாக்குதல் நடத்தியுள்ளார்.
காயத்துக்குள்ளான பாதுகாப்பு உத்தியோகத்தர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார்
இது தொடர்பாக மேலதிகவிசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## கிளிநொச்சியில் பொருத்து வீட்டுக்கு 7 ஆயிரம் குடும்பங்கள் விண்ணப்பம்

கிளிநொச்சி, ஜன.24
கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 753 குடும்பங்கள் பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பித்துள்ளன என்று பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவித்தன.
கிளிநொச்சி மாவட்டத்துக்கு பொருத்து வீடுகளுக்கான 11 ஆயிரம் விண்ணப்பங்கள் மீள் குடியேற்ற அமைச்சால் வழங்கப்பட்டன. கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு 6 ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. 4 ஆயிரத்து 454 பேர் விண்ணப்பித்துள்ளனர். அதேவேளை கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரதத்துக்கும் மேற்பட்ட வீடுகள் தேவையாக உள்ளன.
கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 300 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. ஆயிரத்து 676 பேர் விண்ணப்பித்துள்ளனர். கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயித்து 500 வீடுகள் தேவையாக உள்ளன.
பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. ஆயிரத்து 187 பேர் விண்ணப்பித்துள்ளனர். பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயித்து 500 க்கு மேற்பட்ட வீடுகள் தேவையாக உள்ளன.
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு 700 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன. 436 பேர் விண்ணப்பித்துள்ளனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 700க்கு மேற்பட்ட வீடுகள் தேவையாக உள்ளன. (ற-6)

# மணல் அகழ்வைத் தடுக்க அதிரடிப் படை களத்தில்

தென்மராட்சி, ஜன.24
தென்மராட்சியில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கண்காணிப்பதற்காக விசேட அதிரடிப் படையினர் களமிறங்கியுள்ளனர்.

கெற்பேலி, பலாலி பிரதேசங்களில் வகை, தொகையின்றி வாகனங்களில் மணல் அகழப்பட்டு யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. மணல் அகழ்வால் கடலேரி நீர் கிராமத்துக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பிரதேச மக்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தனர். அதையடுத்தே விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கெற்பேலி பகுதியில் உள்ள தனியார் காணிகளில் மணல் ஏற்றுவதற்கு பிரதேச செயலகத்தில் அனுமதிப்பத்திரம் பெறுவோர் பிரதேச செயலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாகன உரிமையாளர்களிடம் அனுமதிப் பத்திரத்தைக் கையளிக்கின்றனர். பிரதேச செயலகத்தால் மூன்று லோட் மணல் ஏற்ற அனுமதி வழங்கப்படுகின்றது. எனினும் அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி மூன்று வாகனங்கள் தலா 5 தடவைகள் (15 லோட்) மணல் ஏற்றிச் செல்கின்றனர். இது தொடர்பாக பிரதேச செயலகம், கிராம அலுவலர், பிரதேச சபை போன்றவற்றுக்கு முறையிட்டும் பயன் கிடைக்காததால் ஜனாதிபதிக்கு முறையிட்டப்பட்டது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.(ற-9)



காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிக் கண்டுபிடிப்பது தொடர்பான அலுவலகம் அமைப்பது பற்றிய விளக்கமளிக்கும் அமர்வு நேற்று வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கா.உதயராசா தலைமையில் நடைபெற்றது. காணாமல் ஆக்கப்பட்டோருக்காக அமைக்கப்படவிருக்கும் அலுவலகம் தொடர்பான விளக்கத்தை மனித உரிமைகள்சம்பந்தமானவிரிவுரையாளர்றிக்கி பொனாண்டோ வழங்கியிருந்தார். அதில் 70 குடும்பங்களைச்சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். NCEASL நிறுவனம்இக்கலந்துரையாடல் நிகழ்வினை ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

BAJAJ
MOTORCYCLES

pulsar
NS150



மாற்றத்திற்கான ஆற்றல்

ஆற்றல் | செயல்திறன் | சிறப்புத்தன்மை

பல்சர் NS 150 - விலை. ரூ. 364,990/-
(விலை முன்னறிவித்தலின்றி மாற்றமடையலாம்)

DPMC
டேவிட் பிரீஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவிலக்கம். PB270

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02 0773-675508, 0777-668142, 0772-981010, 011-4700600 011-4700677
info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

DPMC app ஐ google play store மற்றும் apple app store ஊடாக தரவிறக்கம் செய்துகொள்ளலாம்

# மீரிகம-குருநாகல் அதிவேக வீதி அமைப்புப் பணி விரைவில்

கொழும்பு, ஜன. 24

மீரிகம-குருநாகல் இடையிலான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென்று திட்டப் பணிப்பாளர் வி.மொஹான் தெரிவித்தார்.

இதற்கான காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுவதாகவும் தேசிய ஒப்பந்தக்காரர்கள் இதற்கான நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பாகச் செயற்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இவர்களுக்கு ஆரம்ப கட்டமாக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அடுத்த வாரத்தில் ஆவணம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒப்பந்தக்காரர்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளை செய்துகொள்வதற்கான நிதி வழங்கப்படவேண்டும். மீரிகமவில் இருந்து குருநாகல் வரையிலான பிரிவு 40கிலோமீற்றர்களைக் கொண்டுள்ளது. இதன் நிர்மாணப் பணிகளில் 30 சத வீதமானவை இந்த வருடத்திலும், 40 சத வீதமானவை அடுத்த வருடத்திலும் முழுமை செய்யப்படவுள்ளன.

137 பில்லியன் ரூபா இந்தத் திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் 2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் நிர்மாணப் பணிகள் முழுமையடைய உள்ளன-என்றார். (த)

# தக்க தருணத்தில் இந்த ஆட்சியை கவிழ்ப்போம்

## கூறுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஜன. 24

2020ஆம் ஆண்டுக்கு முன்னர், சரியான வாய்ப்பொன்று கிடைக்குமாயின், தற்போது ஆட்சியிலுள்ள அரசைக் கவிழ்ப்பதற்குத் தயாராக உள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மஹரகமையில், நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்ட ஊக்குவிப்புச் சங்கத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு, பொலிஸ் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு, நீதித்துறை ஆகியன தண்டனை வழங்காவிடில், மக்களே தண்டனையை வழங்கவேண்டிய சூழ்நிலை உருவாகும். அலுவலகங்களிலிருந்து மோசடிகள் துடைத்தெறியப்படல் வேண்டும். இது, எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் இடம்பெறவுள்ள தேர்தலுக்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு முன்னரும் இதைச் செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

இந்த ஆட்சி, விரைவில் செல்வாக்கற்றுப் போகவுள்ளது. இது, மைத்திரிக்கோ ரணிலுக்கோ உள்ள பிரச்சினை கிடையாது. நாட்டின் சமூக முறைமை கீழிறங்கிப் போவதை, இதுபிரதிபலிக்கின்றது. இது, இலங்கை அரசியலின் விதிமுறையாகும். மக்கள், இந்தநிலைமைக்கு முகங்கொடுத்தேயாக வேண்டும்-என்றார். (த)

# கொலைச் சந்தேகநபர் துப்பாக்கியுடன் கைது

கொழும்பு, ஜன 24

டிசெம்பர் மாதம் இடம்பெற்ற ஒரு கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டிசெம்பர்மாதம் 24ஆம்திகதி வெயாங்கொடை - கட்டு நாயக்க வீதியில் வெயாங்கொடை ரயில் குறுக்கு வீதியில் ஜானக்க சமன் எனும் நபர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நபர், காரொன்றில் வந்து இறங்கி, துப்பாக்கியை எடுத்துச் சுடும் காட்சிகள், வீதியில் இருந்த சீ.சீ.டிவி கமெராவில் பதிவாகியிருந்தன.

இதனையடுத்து, சந்தேக நபரைக் கைது செய்யும் நடவடிக்கையை மேல் மாகாண வடக்கு குற்றப்புலனாய்வுப் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இந்தநிலையில்,சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர், நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வீரகுல, யக்கல பிரதேசத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக துப்பாக்கி, அதற்கு பயன்படுத்தப்படும் ரவைகள் அடங்கிய மகசின் மற்றும் 4 துப்பாக்கி ரவைகள் என்பனவும் சந்தேக நபரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வீரகுல, யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை, அத்தனகலை மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் கூறினர். (த)

ஜோசப் எம்.பி. கொலை:

# பிள்ளையானின் மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு, ஜன 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் உள்ளிட்ட 4 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிவானும் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதியுமான எம்.பி.முகைதீன் முன்னிலையில் நேற்று இவர்களை முற்படுத்தியபோதே விளக்கமறியலை அவர் நீடித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல் ஆகியோருக்கே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த)

# மட்டக்களப்பில் அதிகூடிய மழை

மட்டக்களப்பு, ஜன 24

கிழக்கு மாகாணத்தில் நேற்றுக் காலை 8.30 மணிவரையான கடந்த 24 மணித்தியாலங்களில் கிடைத்த மழை வீழ்ச்சி அளவுகளின் அடிப்படையில் மட்டக்களப்பில் அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுக் காலை 8.30 மணி வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் 68.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாவட்டத்தில் அடை மழை பெய்து வருவதால், வறட்சியால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் மழை நீர் தேங்கியுள்ளது. ஆரையம்பதி, காத்தான்குடி கொக்கட்டிச்சோலை, மண்முனை வடக்கு உட்பட பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறையில் நேற்றுக் காலை 8.30 மணி வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் 52.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை, திருகோணமலையில் நேற்றுக் காலை 8.30 மணி வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் 65 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# புத்தர் சிலைகள் உடைத்தோரை கைது செய்ய சிறப்புப் பொலிஸ்

கொழும்பு, ஜன 24

திருகோணமலை மாவட்டத்தில் சில இடங்களில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களைக் கைதுசெய்யும் நோக்கில் எட்டு சிறப்புப் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழுக்களில் நான்கு குழுக்கள் சிவில் உடையிலும் ஏனைய நான்கு குழுக்கள் சீருடையிலும் செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்கவின் ஆலோசனைக்கு அமைய திருகோணமலைக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் பெரேராவின் மேற்பார்வையில், இந்த சிறப்புப் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

அண்மைக்காலங்களில், திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களில் ஆங்காங்கே புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நோக்கில், இந்தப் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

சில புத்தர் சிலைகள் மற்றும் விகாரைகளுக்குப் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# கிழக்கில் 4 ஆயிரம் பேருக்கு விரைவில் தொழில்வாய்ப்பு

## முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.24

கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் 4 ஆயிரம் பேருக்கான வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு முழுமையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் நிலவும் காவலாளி வெற்றிடங்கள், நூலக உதவியாளர்கள் மற்றும் காரியாலய உதவியாளர்கள் ஆகியோருக்கான வெற்றிடங்கள், அரச திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்கள் என்பவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் குறுகிய அதிகாரப் பரப்புக்குள் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியிலேயே பல விடயங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது.

பல வருடங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்வி கற்று பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியாகும் பட்ட தாரிகள் தொழில்வாய்ப்புக்களின்றி மேலும் சிரமங்களை எதிர்நோக்குவது வேதனையளிக்கிறது. கணிசமான பட்டதாரிகளை அரச தொழிற்துறையில் விரைவில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த ஆட்சியாளர்கள் கிழக்கின் அரச தொழிற்துறையில் இருக்கும் வெற்றிடங்களைச் சரியாக அடையாளங்காணாமையும், அதற்கு பட்டதாரிகளையும், ஏனையவர்களையும் உள்வாங்குவதற்கான பொறிமுறையொன்றுக்கான அடித்தளத்தை இடாமையுமே இதற்கான காரணமாக அமைந்துள்ளது.

கடந்த ஆட்சியில் வாய்மூடி மௌனமாக இருந்து சுகபோகங்களை அனுபவித்து விட்டு, இன்று கிழக்கின் பல்வேறு துறைகளுக்கும் அபிவிருத்தியை பெற்றுக் கொடுக்க நாம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை இடுபவர்களாகவே கடந்த ஆட்சியின் அமைச்சர்கள் உள்ளனர். -என்றார். (ஐ)

# ஏ.ரி.எம் உடைத்து இலட்சக்கணக்கில் பணம் கொள்ளை


கொழும்பு,ஜன.24
மொனராகலை – மெதகம பகுதியிலுள்ள அரச வங்கி யொன்றின்தன்னியக்க இயந் திரத்தை (ஏ.ரி.எம்) உடைத்து 57 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப் பட்டுள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை இந் தக் கொள்ளை இடம்பெற் றுள்ளதாகத் தெரியவந்துள் ளது. இதனையடுத்துசி.சி.ரி.வி கமராக் காட்சிகளைச் சோத னையிட்ட போது கொள்ளை இடம்பெற்றமை உறுதி செய் யப்பட்டது. சம்பவம் தொடர் பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. இது தொடர்பான மேலதிக விசார ணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. (ஐ)

# மதுபோதையில் சைக்கிள் ஓடியவருக்கு விளக்கமறியல்

திருமலை,ஜன.24
திருகோணமலை, நிலா வெளிப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் மதுபோதை யில் துவிச்சக்கரவண்டியைச் செலுத்திச் சென்ற நபரை, எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறுதிருகோணமலை நீதிமன்ற நீதவான் சமிலா குமாரி ரத்நாயக்க உத்தர விட்டார்.
திருகோணமலை, சாம்பல் தீவுப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார். குறித்த சந்தேகநபர், மது போதையில் துவிச்சக் கரவண்டியில் சாம்பல்தீவுப் பகுதிக்குச் இரவு வேளையில் சென்றவேளை, அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடு பட்டிருந்த பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.. (ஐ)

# கொக்கட்டிச்சோலை படுகொலையின் நினைவு சனியன்று

## தமிழரசுக் கட்சி ஏற்பாடு



மட்டக்களப்பு,ஜன.24
மட்டக்களப்பு படுவான்கரை கொக் கட்டிச்சோலையில் 1987ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மகிழடித்தீவு சந்தி யில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி அருகில் நடைபெறும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்தது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிப்பளைக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு த.தே.கூ. வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் பா.அரியநேத்திரன் தலைமை தாங்குவார்.
1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் திகதி இறால் பண்ணையில் தொழில் புரிந்த 23 பேரும், மேலும் அன்றைய தினத்திலிருந்து 3 நாள்கள் இடம்பெற்ற சிறப்பு அதிரடிப்படையின் நட வடிக்கையில் சுமார் 63 பேரும் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
இந்த நினைவுதின நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, தீப வணக்கமும் நடை பெறவுள்ளதுடன், அவர்களின் ஆத்ம சாந்திக்காக ஆலயங்களில் சிறப்பு பூசைகளும் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

# மாணவர்களுக்குப் பாலியல் நோய்கள் பரவும் அபாயம்

கொழும்பு,ஜன.24
பாடசாலை மாணவர்கள் மத்தியில், பாலியல் ரீதியிலான நோய்கள் பரவும் ஆபத்துக் காணப்படுவதாக, கல்விச் சேவைகள் சங்கம் எச்சரிக்கை விடுத்தது.
குறித்த சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்போதே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலைமையைத் தடுக்க பாலியல் தொடர்பான கல்வியை மாணவர்களிடத்தில் முன்னெடுக்க வேண்டும். அத்துடன் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் நடத்தை தொடர்பில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியது மிகவும் அவசியம் எனவும் அச்சங்கம் எச்சரித்துள்ளது. (ஐ)

# நுகர்வோர் அதிகார சபைக்கு வர்த்தகர்களால் அதிர்ஷ்டம்

## கடந்த வருடம் மட்டும் ரூ.90 மில்லியன் வருமானம்

கொழும்பு,ஜன.24
நுகர்வோர் அதிகார சபை யினால் கடந்த வருடம் மேற் கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கைக ளின் போது, வர்த்தகர்க ளுக்கு எதிராக விதிக்கப்பட்ட அபராதம் காரணமாக, 90 மில்லியன் ரூபா வருமா னம், சபைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதென, கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு அறிவித்தது.
2015ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து 2016 இல் கிடைக்கப்பெற்ற வருமானம் 33 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், கடந்த வருடம் மாத்திரம் 21 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்தது.
அரச அமைப்பாக இயங்கி வரும் இந்த நுகர்வோர் அதி கார சபை, நுகர்வோரைப் பாதுகாப்பதும், நியாயமான சந்தைப் போட்டிநிலை நிலவு கின்றமையை உறுதிப்படுத்தி வருகின்றமையும் குறிப்பி டத்தக்கதாகும். (ஐ)

# உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களின் பங்களிப்பு

## மட்டக்களப்பில் நாளை விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு,ஜன.24
உள்ளூராட்சிமன்றத் தேர் தலில் பெண்களின் பிரதி நிதித்துவத்தை அதிகரிப் பதற்காக, உள்ளூராட்சி மட்டத்தில் முதன் முறையாக நடைமுறைப் படுத்தப்படும் பெண்களுக்கான 25 சத வீத ஒதுக்கீடு தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்வு மற்றும் மாவட்ட ரீதியிலான வேலைத் திட்டம் மட்டக் களப்பு நகரில் நாளை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது.
'உள்ளூராட்சி அரசியல் செயற்பாடுகளில் பெண் களின் பங்களிப்பை வலுப் படுத்துதல்' என்ற திட்டத்தில் பரப்புரை மேற்கொள்ளு தல், கையொப்பம் பெற் றுக்கொள்ளல் என்பனவும் நடைபெறும் என மேற்படி திட்டத்தின் இணைப்பாளர் வி.இராமேஸ் ஆனந்தன் தெரிவித்தார்.
மாற்றுக்கொள்கைகளுக் கான நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் தச் செயற்றிட்டத்தின் மாவட்ட ரீதியிலான கருத்தரங்குகள் கடந்த வருடத்தில் நடத்தப் பட்டிருந்தன.
இந்த நடவடிக்கையின் அடுத்த கட்டமாக, குறிப்பிட்ட மாவட்டங்களின் பிரதான நகரங்களில் மக்களை விழிப்புணர்வூட்டு வதற் கான நிகழ்வுகள் நடத்தப் படும் எனவும் அவர் தெரி வித்தார். (ஐ)

# பொதுக் காணிகள் அபகரிப்பைக் கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

கண்டி,ஜன.24
மஸ்கெலியா – நல்லதண்ணிப் பிரதேசத்தில் சிவனொளிபாதமலையை அண்டிய அரச காணிகள் மற்றும் பொது இடங்களை வெளி யாள்கள் ஆக்கிரமித்து வருவதை இப்பகுதி கிராம சேவகர் கண்டுகொள்வதில்லை என எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் நல் லதண்ணி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்த ஆர்ப்பாட்டத்தில் நல்லதண்ணிப் பிரதேசத்தில் சிவனொளிபாதமலைப் பகுதி யில், பருவகால நிகழ்வின் போது வருகை தரும் வெளியாள்கள் பொது இடங்கள் மற்றும் அரச காணிகளை ஆக்கிரமித்துக் கொள் கின்றனர் என பொதுமக்கள் குற்றம் சுமத்தி யுள்ளனர்.
அதேவேளை இந்தக் காணி ஆக்கிரமிப்புக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த கிராம சேவகர் ஒருவர் வெளியாள்களுக்கு ஆதரவு வழங்கி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இது தொடர்பில் பகுதியைச் சேர்ந்த அரச அதி காரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடம் பல்வேறுபட்ட முறைபாடுகளைச் செய் துள்ள போதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்ட வில்லை எனவும் ஆர்ப்பாட்டகாரர்கள் சுட்டிக் காட்டினர்.
அதேவேளை நல்லதண்ணிப் பிரதேசத்தில் உள்ள அரச காணிகள் மற்றும் பொது இடங் களில் வெளியாள்கள் ஆக்கிரமிக்கும் இடங் களில், உள்ளூர் அரச அதிகாரிகள் ஏதாவி னும் ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க இடங்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அந்த இடங்கள் தமக்குச் சொந்தம் என வெளியிடவாசிகள் தெரிவிக்கின்றனர்.
குறித்த இடங்களை வெளியிடவாசிகளுக்கு எந்த ரீதியில் உரிமை கொள்ள முடிகின்றது எனவும் தெரியாமல் இருப்பதாகப் பொதுமக் களும் சில திணைக்கள அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர்.
அதேவேளை வெளியிடவாசிகளால் கைப்பற்றப்படுகின்ற இடங்கள் தொடர்பில் இப்பகுதி கிராம சேவக அதிகாரிக்கே நன்கு தெரிந்திருக்க வேண்டும். இருந்தும் இவ்வாறாக கைப்பற்றப்படுகின்ற இடங்கள் தொடர்பில் கிராம அதிகாரி நடவடிக்கை எடுக்காதது ஏன் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



எனவே இப்பகுதி மக்களுக்குச் சொந்தமான பொது இடங்களை வெளியாள்களுக்கு விற் பனை செய்கின்றனரா? இது தொடர்பில் உரிய நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியுள்ளனர். (ஐ)

## காணிகளைத் துப்புரவு செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.24
வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பராமரிப்பு இன்றிய வெற்றுக் காணிகளை உடனடியாகத் துப்புரவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


ஒலி பெருக்கி ஊடாக இவ்வாறு கடந்த வாரம் அறிவிப்பு விடுக்கப்பட்டது என்று பிரதேச சபை தெரிவித்தது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள அநேகமான வெற்றுக் காணிகள் பராமரிப்பு இன்றிக் காணப்படுகின்றன. காணிகளின் உரித்தானவர்கள் உடனடியாக காணிகளைத் துப்புரவு செய்ய வேண்டும்.

செடிகள், பற்றைகளால் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது. பிரதேச சபை சட்டத்திற்கமைவாக காணிகளைத் துப்புரவாக்குவதற்கான அறிவித்தல் கம்பங்கள் சம்பந்தப்பட்ட வெற்றுக் காணிகளில் நட்டப்படும்.

காணி உரித்தாளர்கள் தத்தம் காணிகளை துப்புரவாக்கா விட்டால் சபை காணிகளைப் பொறுப்பேற்று துப்புரவு செய்யும். பின்னர் அதற்கான கட்டணம் உரியவர்களிடம் அறவிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-17)

## மழை பொழிந்ததால் தப்பிய நெற் பயிர்கள்




கிளிநொச்சி, ஜன.24
கிளிநொச்சி மாவட்டத்தில் இரு தினங்கள் பெய்த மழையால் குடலைப் பருவத்தில் இருந்த நெற்செய்கைகளைக் காப்பாற்றக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்தார்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட காலபோகச் செய்கை யில் 50 வீதமானவை வறட்சியால் பாதிக்கப்பட்டன. தற்போது இரு தினங்கள் மழை பெய்ததால் குடலைப் பருவத்தில் அதாவது ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நிலையில் இருந்த பயிர்கள் காப்பாற்றப்பட் டுள்ளன. தொடர்ச்சியாக மழை பெய்தால் மானாவரிச் செய்கையில் அழிவடையாது உள்ள பயிர்களைக் காப்பாற்ற முடியும்" – என்றார். (ந-6)

# ஒதியமலை அபிவிருத்திக்கு உதவுங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, ஜன.24
வளம் கொழிக்கும் கிராமமாக இருந்த ஒதியமலை மீண்டும் வளம் பெற வேண்டும். அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு, ஒதியமலைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது–
ஒதியமலையில் கருவேப்பன் முறிப்புக்குளம், தொண்டைப்புலவு குளம் ஆகிய குளங்களில் கீழ் சுமார் 600 ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இந்த இரு குளங்களும் அழிவடைந்துள்ளன. குளத்தின் கீழான விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியுள்ளன. இரு குளங்களையும் சீரமைத்து வழங்கினால் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும். குளங் கள் கைவிடப்பட்டதால் காணிகளும் வளவனத் திணைக்களத்தினரால் அடையாளமிடப்பட்டுள்ளன.

எல்லைக் கிராமங்களில் எமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள இரு குளங்களும் சீரமைக்கப்படுவது அவசியம். குளங்களின் கீழான காணிகளையும் எமக்குப் பெற்றுத் தர வேண்டும்.

அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ இங்கு வருவதில்லை. எமது காணிகள் பற்றைக் காடுகளாகியுள்ளன. கனரக இயந்திரங்களின் மூலம் அவற்றைத் துப்புரவு செய்வதற்குரிய வசதிகள் எம்மிடம் இல்லை. அவற்றைத் துப்புரவாக்கித் தந்தால் நாம் விவசாயம் செய்ய முடியும்.

1984ஆம் ஆண்டு 32 தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட இடம் கூட ஆவணப்படுத்தப்படாது, அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

ஒதியமலையை போன்று வளம் கொழிக்கும் கிராமம் இந்தியாவிலேயே இல்லை என்று ஒதியமலைக்கு வந்த பழ. நெடுமாறன் கூறியிருந்தார். இப்போது எமது கிராமம் அழிந்துள்ளது. எமது கிராமத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்ற உதவ வேண்டும்.– என்றனர்.

இந்த ஆண்டுக்கான ஒதுக்கீடு இன்னும் கிடைக்கவில்லை. தற்போது முல்லைத்தீவு மாவட்ட கமக்கார அமைப்புகளைச் சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்து வருகின்றோம். இவ்வாறான குளங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு சீரமைக்கப்படும் – என்று முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.புனிதகுமார் தெரிவித்தார். (ந-21,7)



வவுனியாமாவட்டச்செயலகத்தின்பொங்கல் விழா நேற்று காலை மாவட்ட செயலாளர் எம். பி. றோஹன புஸ்பகுமார தலைமையில் நடைபெற்றது. வவுனியா மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் மேலதிக மாவட்ட செயலாளர் த. திரேஸ்குமார், மாவட்ட செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-21)

## கைதடி முதியோர் இல்லத்தில் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

### வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்னுதாரணம்

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் தமது வருடாந்த ஒன்றுகூடலை கைதடி முதியோர் இல்லத்தில் கொண்டாடினர்.

மு.ப. 10 மணி முதல் பி.ப. 4 மணிவரை நடைபெற்ற நிகழ்வுகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், இல்லத்திலுள்ள முதியவர்களும் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. மதிய உணவு, சிற்றுண்டிகள் வழங் கப்பட்டன.



சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் முன்னுதாரணமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தால் ஒரு தொகுதி மருந்துப் பொதிகள் இல்லத் தின் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டன. காத்தவராயன் கூத்து, காவடி ஆட்டம், கரகாட்டம் உட்பட மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.மாவட்டசெயலர் என்.வேதநாயகன், மேலதிக மாவட்ட செயலர் பா.செந்தில்நந்தனன், மாவட்ட வாழ் வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் கே.மகேஸ்வரன், கைதடி முதியோர் இல்லத்தின் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சுரேந்திரா, இல்லப் பணியாளர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட வாழ்வின் எழுச்சித் திட்ட உத்தியோகத்தர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## குளவிகள் கொட்டியதில் 39 மாணவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜன.24
மரத்தில் இருந்த குளவிகள் கலைந்து கொட்டியதில் இரு பாடசாலைகளைச் சேர்ந்த 39 மாணவர்களும், 7 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டனர்.



அவர்கள் நோயாளர் காவு வண்டிகள் மூலம் தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஆரம்பப் பிரிவு மாணவர்கள் இருவர் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

முல்லைத்தீவு, விசுவமடு மகா வித்தியாலயத்துக்கும், விசுநாதர் ஆரம்ப வித்தியாலயத்துக்கும் இடையே உள்ள மரம் ஒன்றிலிருந்த குளவிகள்கலைந்தன. அவை இரு பாடசாலைகளுக்குள்ளும் புகுந்து மாணவர்கள், ஆசிரியர்களைக் கொட்டின.

விசுவநாதர் ஆரம்ப வித்தியாலயத்தைச் சேர்ந்த 30 மாணவர்களும், 5 ஆசிரியர்களும், விசுவமடு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 9 மாணவர்களும், 2 ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டனர்.

காற்றின் வேகத்தால் குளவிக் கூடு கலைந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று இரு பாடசாலைகளிலும் கற்றல் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். (ந-21,35)







# ஏறாவூரில் புதிய அரபுக் கல்லூரி திறந்து வைப்பு

ஏறாவூர்,ஜன.24
ஏறாவூரில் ஜாமியா நிழாமிய்யா அரபுக் கல்லூரி என்ற பெயரில் புதிய அரபுக் கல்லூரி திறப்புவிழா நேற்று இடம்பெற்றது. சிங்கப்பூர் நாட்டில் வசிக்கும் முஹைதீன் பின் அப்துல் காதரின், சுமார் 2 கோடி ரூபா செலவிலான நன்கொடை நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட இந்த அரபுக் கல்லூரியில் சுமார் 50 மாணவர்கள் ஒரே காலப்பகுதியில் தங்கியிருந்து சன்மார்க்கக் கல்வியைக் கற்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிங்கப்பூரிலிருந்து வருகை தந்திருந்த முஹைதீன் பின் அப்துல் காதிர், அரபுக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா, மலர் வெளியீடு மற்றும் மாணவர்களுக்குத் தலைப்பாகை சூட்டுதல் ஆகிய நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ)

# இளைய சமுதாயத்தினருக்கு இன ஐக்கிய உறவு தேவை

மட்டக்களப்பு,ஜன.24
நாட்டில் இன்றைய இளைய சமுதாயத்தினரை கல்வி மற்றும் இன ஐக்கியத்தில் வழி நடத்த வேண்டும் என்று இளைஞர் நாடாளுமன்றத்தின் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி வழிகாட்டல் அமைச்சர் மனோகரன் சுரேஷ் காந்தன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்டு கல்வியில் பின் தங்கியிருக்கும் இளையோர் சமூகத்தை கல்வி மற்றும் தொழிற் பயிற்சியினால் ஊக்குவிக்க வேண்டிய சமகாலத் தேவையுள்ளது.
அதேவேளை, தேசிய ரீதியில் அனைத்து சமூக இளைஞர்களிடையேயும் இன ஐக்கியத்தைக் கட்டி வளர்க்க வேண்டிய அவசியமும் உள்ளது. இந்த நாடு ஐக்கியப்பட்ட, கல்வி அறிவில் மேம்பட்ட இளைஞர் சமுதாயத்திற்கூடாகவே சுபீட்சமடைய முடியும் என் பது எனது நம்பிக்கையும் பேரவாவுமாகும் -என்றார். (ஐ-46)

# தமிழர் என்ற தனித்துவத்தை விட்டுக் கொடுக்க முடியாது

## நந்திக்கொடிக்கும் இடம் வேண்டும் என்கிறார் அமைச்சர் மனோ கணேசன்

கொழும்பு,ஜன.24
சிங்களம், பௌத்தம் மாத்திரம் இலங்கையர் என்ற நிலைப்பாட்டினை தூக்கியெறிந்து விட்டோம். தமிழருக்கான மதம் மொழி என்ற தனித்துவத்தையும் எம்மால் விட்டுக் கொடுக்க முடியாது.
சிங்கக் கொடிக்கு கொடுக்கும் தனித்துவத்தை நந்திக் கொடிக்கும் கொடுக்க வேண்டும். இவ்வாறு தேசிய சகவாழ்வு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.
கொழும்பு கதிரேசன் வீதி கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் இலங்கையராக வாழ வேண்டுமாயின் எமது மதம், மொழி என அனைத்து அம்சங்களும் சிங்கள பௌத்தம் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு மாறி விட்டது. இன்று சிங்கக் கொடிக்குக் கொடுக்கப் படுகின்ற முக்கியத்துவம் நந்திக்கொடிக்கும் வழங்கப்பட வேண்டும். சிங்கக் கொடியை முன்னிலைப் படுத்துவதில் மாத்திரம் திருப்பதியடையாமல், நந்திக்கொடியையும் உள்வாங்கித் திருப்பியடைய வேண்டும். அதுவே சமத்துவம். உண்மையான தேசியமும் அதுவேயாகும்.
ஆனால் இன்று சிலருக்கு சிங்கம் மாத்திரமே தேசியமாக உள்ளது. சிங்கம் மட்டும் தேசியம் அல்ல. நந்தி மட்டும் தேசியம் என்றால் அதனை இனவாதம் அல்லது தீவிரவாதம் என்றே கருத வேண்டும். எனவே இரண்டையும் சமமாகக் கருத வேண்டும் ஒரு புறம் நந்தி மறுபுறம் சிங்கம் என்ற கோணத்திலிருந்து நாம் பார்க்க வேண்டும்.
இவை இரண்டும் இருந்தால் மாத்திரமே நாம் இந்த நாட்டில் இந்துவாகவும், தமிழனாகவும், இலங்கையனாகவும் வாழ முடியும். அவற்றில் குழப்பங்களை ஏற்படுத்துவதில் அர்த்தமில்லை.



ஆனால் நாம் இலங்கையர் என்பதால் இந்து என்பதையும், தமிழர் என்பதையும் விட்டுக்கொடுக்கவும் முடியாது.
சிங்களவர் முதற் தர இலங்கையர் என்றும், மற்றையவர் அடுத்தடுத்த தரத்தில் உள்ளவர்கள் என்ற கருத்தினையும் நாம் இன்று தகர்த்துள்ளோம். ஆகவே இன்று தமிழனாகவும், இந்துவாகவும் இருக்கின்ற அதேவேளை, நாம் இலங்கையனாகவும் இருக்க வேண்டும்.
இந்த அறிவு சகலருக்கும் இருக்க வேண்டும். இந்த அறிவு அரசுக்கும், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், அமைச்சரவைக்கும், துறைசார் அமைச்சருக்கும் உள்ளது. அதனால் சிங்கக் கொடியை உயர்த்தி தேசியத்தை போற்றினாலும் எமது இனம், மதம் என்ற தனித்துவத்தை மறந்து விடக்கூடாது.
தமிழருக்கும் ஈழத்தமிழர், மலையகத் தமிழர் என்று வேறுபாடு உள்ளது. அவை வரலாறு. அந்தத் தனித்துவங்கள் உள்வாங்கப்படுவது சிறந்தது. ஆனால் இலங்கையராக இருக்க வேண்டும். பறங்கியர், ஆபிரிக்கர்கள், மலையாளத்தினைச் சேர்ந்தவர்கள் என 19 இனத்தவர் இலங்கையில் உள்ளனர் - என்றார். (ஐ)

# கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது

திருமலை,ஜன.24
திருகோணமலை, அலஸ் தோட்டம் பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கணவன், மனைவி மற்றும் இளைஞர் ஒருவரையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை கைது செய்ததுடன், அவர்களிடமிருந்து கஞ்சாவைக் கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
கணவன், மனைவி ஆகிய இருவரும் கஞ்சாவை விற்பனை செய்ய முயல்வதாக தமக்குக் கிடைத்த தகவலை அடுத்து, குறித்த இடத்துக்குச் சென்று விசாரணை செய்த போது, அவர்களிடம் ஒவ்வொரு கிலோகிராம் கஞ்சாவாகப் பொதி செய்யப்பட்ட இரண்டு கஞ்சாப் பொதிகள் இருந்தமை தெரிய வந்தது.
மேலும், இச்சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, இளைஞர் ஒருவரிடமும் 50 கிராம் கஞ்சா இருந்தமை தெரியவந்தது.
முல்லைதீவு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 38 வயதுடைய கணவரையும் 29 வயதுடைய மனைவியையும் திருகோணமலை, கும்புறுப்பிட்டியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரையுமே கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரி வித்தனர். (ஐ)

# மட்டக்களப்பில் 534 பொலிஸாருக்கு இடமாற்றம்

மட்டக்களப்பு,ஜன.24
ஐந்து வருட சேவை இடமாற்றத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 534 பொலிஸாருக்கு, நாட்டின் இதர பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தினேஸ் கருணாநாயக்க தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நகரப் பிரதேசங்களான மட்டக்களப்பு நகரம், ஏறாவூர், வாழைச்சேனை, காத்தான்குடி உள்ளிட்ட மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய 534 பொலிஸார் வழமையான இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுத்தப்பட்டுள்ளனர்.
ஆண், பெண் அதிகாரிகளான பிரதான பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் சார்ஜன்ற், பொலிஸ் உத்தியோகத்தர்கள் வரை இந்த இடமாற்றம் வழங்கபபட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ஐ)

# அபிவிருத்திகளைத் தடுக்கும் ரிசாத்தின் முயற்சி ஒரு போதும் வெற்றியடையாது

## கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் கொந்தளிப்பு

கொழும்பு,ஜன.24
அபிவிருத்திகளைத் தடுத்து அரசியல் செய்ய ரிசாத்தும் அவரது சகாக்களும் செய்யும் முயற்சி ஒருபோதும் வெற்றியடையாது. ரிசாத், அடாவடித்தனங்களை கிழக்கில் மேற்கொண்டு சேவைகளைத் தடுக்க முடியாது என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் தெரிவித்தார்.
அம்பாறை நற்பிட்டிமுனை கிராமத்தில் திவிநெகும சமுர்த்தி வங்கிக் கிளைத் திறப்பு விழா நேற்று முன்தினம் முதன்மை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.ஷாலிக் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
5 மில்லியன் நிதியில் ஆயுள்வேதக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதை எல்லாம் அறியாமல் அமைச்சர் ரிசாத் ஆள்களால் ஆர்பாட்டங்கள் செய்வது சிறுபிள்ளைத்தனமான செயற்பாடாக உள்ளது.
இலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராலும், அதன் அமைச்சர்களாலும்




உருவாக்கப்பட்ட இந்தக் கட்டடத்துக்கு ரிசாத் உரிமை கொண்டாடுவது எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.
எனக்கெதிராக முகநூல்களில் போலி எழுத்துக்களை எழுதுவதன் மூலம் நாம் அடங்கி ஒடுங்கி விட்டோம் என எண்ணிவிட வேண்டாம். குறித்த வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக சமுர்த்திப் பயனாளிகள் மருதமுனையில் அமைந்துள்ள மேற்படி வங்கிக்குச் செல்ல வேண்டி இருந்தது. ஆனால் தற்போது இவ்வங்கி இம்மக்களின் அருகாமையில் அமையப் பெற்றுள்ளதை அறிய வேண்டும் - என்றார். (ஐ)

# அத்துரலிய ரத்ன தேரரின் பதவியை மீளப்பெறவும்

கொழும்பு, ஜன. 24
ஐக்கிய தேசியக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அத்துரலிய ரத்ன தேரர், சுயாதீனமாக இயங்கப் போவதாக அறிவித்துள்ளதையடுத்து, அவரது நியமன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய முன்னணியில் ஹெல உறுமய இணைந்து போட்டியிட்டது. ஐக்கிய தேசிய முன்னணிக்கு கிடைத்த நியமன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் ஒன்று, ஹெல உறுமய உறுப்பினரான அத்துரலிய ரத்தன தேரருக்கு வழங் கப்பட்டது.
நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப் போவதாக அத்துரலிய ரத்ன தேரர் கடந்த வாரம் அறிவித்திருந்தார். கூட்டு அரசை சரியான் திசையில் வழிப்படுத்தவே தான் இவ்வாறு சுயாதீனமாகச் செயற்படப் போவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.
இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்ட உறுப்பினர்கள், ரத்ன தேரருக்கு வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மீளப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில், சுவிஸ் சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் ஆராயப்படும் என்று தெரிய வருகின்றது. (ஐ-5)

# சூரிய சக்திப் புரட்சிக்கு

வணிகம்



"பிரதான மின்சக்தி ஒளிவட்டமான சூரியனின் அதிகப்பட்ச மின்சக்தியானது புவியின் மீது அனுப்பப்படுகிறது. இலங்கைக்கு மட்டுமே ஒரு நாளைக்கு 2 லட்சத்து 62 ஆயிரம் ஜிகா வாட்ஸ் அளவு மின்சக்தி கிடைக்கின்றது. இதில் 38 ஆயிரம் ஜிகா வாட்ஸ் மின்சக்தியை பெற்றுக் கொள்மிதற்கான தொழில்நுட்பமே எம்மிடம் உள்ளது. ஒரு நொடியில் 3.04 ஜிகா வாட்ஸ் (261.1 ரி.ஓ.இ ) மின்சாரத்தை சூரிய சக்தியா ல் உற் பத்தி செய்ய முடிகிறது. அத்தோடு ஒரு நாளைக்குத் தேவையான முழுமையான அன்றாட மின் நுகர்வை 11 நொடிகளுக்குள் உற்பத்தி செய்ய முடிகிறது. அந்தவகையிலே வருடம் முழுவதும் சூரிய ஒளியைப் பெற்றுக்கொள்ளும் இலங்கையைப் போன்ற வெப்ப மண்டலப் பிராந்திய நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சக்தி நெருக்கடிக்கு மிகச் சிறந்த தீர்வாக சூரிய சக்தியை சுட்டிக்காட்ட முடியும்.
அத்துடன் சூழல் நட்புறவுடைய நீண்ட நாள்கள் பயன்தரும் வினைத்திறன்மிகு மின்சக்தியை உற்பத்தி செய்யும் ஒரு வழிமுறையை நோக்கி நாம் நகர வேண்டியது காலத்தின் தேவையாகியுள்ளது.
இலங்கை புவியியல் ரீதியாக பூமி மத்திய ரேகைக்கு மிக அண்மையில் உள்ள தாற்பரியங்கள் சூரிய ஒளியால் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தி தந்துள்ளது."

"சோலர் அமைப்புக்களை நிறுவிய முதல் ஊடக நிறுவனமாக-சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு அபான்ஸ் நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றை அண்மையில் கையெழுத்திட்டுள்ளது."




## அபான்ஸ் வழங்கும் எல்.ஜி. சோலர் பனல் சிறந்த மின்சக்தி வழங்கி

"அபான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சூரிய ஒளிமூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சோலர் அமைப்புக்களை பொருத்திக் கொள்வதன் மூலம் எதிர்காலத்துக்கான சிறந்த முதலீட்டை மேற்கொள்ள முடியும்."

"எல்.ஜி சோலர் பனல் ஒன்றை பொருத்துவதன் மூலம் 25 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு மின்கட்டணத்தை செலுத்த வேண்டிய தேவை ஏற்படாது."

சுய தேவைக்கான அன்றாட மின்சக்தி பாவனையை சிறந்த முறையில் பயனுறுதியாக்கிக் கொள்ளவும் பணவிரயமின்றி அதனை சேமிக்கவும் ஏற்றவகையிலான கட்டமைப்பு ஒன்று எமக்குத் தேவைப்படுகின்றது.
அந்தவகையிலே அதற்கான தெரிவு முறைகளில் ஒன்றான சோலர் அமைப்பை சரியான முறையில் இனங்கண்டு பெற்றுக் கொள்வதற்கும், வினைத்திறனான பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் உலகின் முன்னணி இலத்திரனியல் உபகரண உற்பத்தி மற்றும் விநியோகஸ்தர்களான அபான்ஸ் நிறுவனம் தற்போது ஏற்படுத்திக் கொடுத்துள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி 25 வருட காலத்திற்கு எந்த தடைகளும் இன்றிய சிறப்பான செயற்பாடுகளை மேற்கொண்டு, மின்சக்தியை வழங்கக்கூடியதான செயற்றிறன்மிக்க, தொழில்நுட்பரீதியில் மேம்படுத்தப்பட்ட, அதிகப்பட்ச மின்சாரத்தை உற்பத்தியாக்கி சக்தி வீண்விரயமாவதை தவிர்க்கும் உலகின் தலைசிறந்த சோலரான எல்.ஜி.மொனோ எக்ஸ் நியோன் (LG mono X Neon) இனை அபான்ஸ் வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.
மேலும், அரசின் சூரிய பள சங்கிராமய திட்டத்தின் மூலமான அனுசரணையில் மிகக் குறைந்த எடையுடைய எல்.ஜி மொனோ எக்ஸ் நியோன் சோலர்களுக்கான பராமரிப்பு நடவடிக்கைகள் வழங்கப்படுவதாகவும் நம்பகத்தன்மை மற்றும் உத்தரவாதம் என்பன உறுதி செய்யப்படுவதாகவும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.
ஆகாயத்தை முகரும் கட்டடங்கள், தொடர்மாடி குடியிருப்புக்கள், அரச மற்றும் தனியார் அமைப்புக்கள், மருத்துவமனைகள், வங்கிகள் உள்ளிட்ட 250 இற்கும் மேற்பட்ட இடங்களில் சோலர் அமைப்புக்களை நிறுவும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நாடு முழுமையுமாகக் காணப்படுகின்ற அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும், வீடுகளுக்கும் சூரிய ஒளியினால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சோலார் அமைப்புக்களைப் பொருத்தி எதிர்காலத்திற்கென சிறந்த முதலீட்டை மேற்கொள்ளுமாறு அபான்ஸ் நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.
அபான்ஸ் பொறியியல் தனியார் நிறுவனம் புகழ்பெற்ற அபான்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமாக செயற்பட்டுவருவதுடன் ஏல்.ஜி. சோலர் அமைப்புக்களை வழங்குதல், பொருத்துதல் ,பராமரித்தல் மற்றும் சென்ட்ரல் வளிச் சீராக்கிகளின் ஏசுர் அமைப்புக்களை பொருத்தும் பணிகளையும்-செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது.

## முகத்தை அடையாளம் கண்டு உணவுப் பரிமாறல்

சீனாவின் பைடு (பைனை ) என்று அழைக்கப்படும் கூகுள் தேடுதல் இயந்திரமானது விரைவு பரிமாறல் உணவகமான கே.எவ்.சீ. உடன் இணைந்து வாடிக்கையாளர்களின் முகத்தை அடையாளம் கண்டு கொண்டு உணவை வழங்கும் அல்லது பரிமாறிக்கொள்ளும் தொழில்நுட்ப முறைமையை அறிமுகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்த அறிவுத்திறன் என்பது வாடிக்கையாளரின் வயது,மனநிலை என்பவற்றை உய்த்தறிந்து கொண்டு, அதற்கேற்ப உணவை வழங்குமென கேஎவ்.சீ. இன் அதிகாரபூர்வ தகவல் மையம் சுட்டிக்காட்டியது.
இதன்படி இருபது வயதுடையவர்களுக்கு ஒருவகை உணவையும் 50 வயதுடையவர்களுக்கு இன்னொரு வகை உணவையும் கிடைக்கச் செய்யும் விதமாக இந்தத் தொழில்நுட்பம் செயலாற்றும் எனவும் சொல்லப்படுகின்றது.






## தொழில்நுட்ப ரீதியில் கைபேசி இணைப்புத் திறனை மேம்படுத்தும் எடிசலாட் லங்கா

கைபேசி இணைப்புத்திறனை மேலும் ஸ்திரப்படுத்தும் முகமாகவும், விரைவான மற்றும் இடையறாத கைபேசி இணைய சேவைகளை வழங்குவதற்கான வாய்ப்புக்களை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திடவும் நாடெங்கிலுமுள்ள தமது வலையமைப்பை விஸ்தரிக்கவுள்ளதாக எடிசலாட் லங்கா அறிவித்துள்ளது. இதன்படி 300 தொலைதொடர்பு கோபுரங்கள் மூலமான ஓர் இடத்திலிருந்து மற்றைய இடத்துக்கான இணைப்புத்திறனை விஸ்தரித்து அதனை மேம்படுத்தும் பணிகளை ஆரம்பித்த தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வருகின்ற வாடிக்கையாளர்களின் தேவைகளை வினைத்திறனான முறையிலே முழுமை செய் யும் வகையில் பிரத்தியேகமாக வடிவமைக்கப் பட்ட தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த் தக நிறுவனங்களுக்கானதரவுத் திட்டங்களை வழங்கி இலங்கையில் அனைத்து பிராந்தியங் களிலும் வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# திடீர் சாலை மறியல்கள்



சென்னை, ஜன. 24
ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக போராடிய இளைஞர்கள் மீது தடியடி நடத்தப்பட்டதால், பொதுமக்கள் கொதித்தெழுந்து திடீர் சாலை மறியல்களில் ஈடுபட்டனர்.
ஜல்லிக்கட்டுக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்று வலியுறுத்திய இளைஞர் படை பொலிஸாரின் எச்சரிக்கைகளைக் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து மெரீனாவில் போராட்டம் நடத்தி வந்தது. இதனால் இளைஞர்கள் மீது தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை பொலிஸார் மேற்கொண்டனர். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் திடீர் சாலை மறியல்களை நடத்தினர்.
சென்னை அண்ணாசாலை, ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பெரம்பூர் நெடுஞ்சாலை உள்ளிட்ட நகரின் பல முக்கிய சாலைகள் நேற்று மதியம் முடக்கப்பட்டன.
(ம-எ)

# ஜல்லிக்கட்டில் இருவர் சாவு



கோப்புப் படம்

சென்னை, ஜன. 24
தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜல்லிக்கட்டு ஒன்றில் காளை மோதி இருவர் சாவடைந்தனர். நீண்ட இழுபறிக்குப்பின்னர் ஜல்லிக்கட்டுக்கு கடந்த சனிக்கிழமை அனுமதி கிடைத்தது. இதனால் நேற்றுமுன்தினம் சில இடங்களில் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது. புதுக்கோட்டை மாவட்டம் ராப்பூசலில் ஜல்லிக்கட்டு காளை முட்டி, மோகன் என்பவர் உயிரிழந்தார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், மற்றுமொருவர் அங்கே சாவடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. 60 பேர் காயமடைந்தனர். இந்த அசம்பாவிதத்துக்கு அரசியல் தலைவர்கள் பலரும் தமது வருத்தத்தைத் தெரிவித்தனர். (ம-எ)



# கடலால் வந்தது உணவு

சென்னை, ஜன. 24
மெரீனாவில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு கடல் வழியாக நேற்று உணவுகள் வழங்கப்பட்டன. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டத்தில்ஈடுபட்ட இளைஞர்கள், கலைந்து செல்லும் படி பொலிஸார் தெரிவித்த உத்தரவை ஏற்க மறுத்தனர். இதனால் மெரீனாவுக்குச் செல்லும் பாதைகள் முழுவதுமாக முடக்கப்பட்டன. இளைஞர்களுக்கான உணவு மற்றும் குடிதண்ணீர் என்பவற்றை உள்ளுக்குள் கொண்டு செல்லவும் பொலிஸார் தடை விதித்தனர். இதனால் கிட்டத்தட்ட 750 படகுகளில் கடல் வழியாக இளைஞர்களுக்கு உணவு மற்றும் குடிதண்ணீர் என்பன விநியோகிக்கப்பட்டன. (ம-எ)



# மெரீனாவில் இளைஞர்கள் ப
# கண்ணீர்ப்புகை, தடியடியும் நட

## ஏனைய இடங்களிலும் அவ்வாறே



சென்னை, ஜன. 24
ஜல்லிக்கட்டுக்கு நடத்த ஆதரவாக நிரந்தரச் சட்டம் வேண்டும் என்று வலியுறுத்தி, சென்னை மெரீனா கடற்கரையிலும்-மதுரை அலங்காநல்லூரிலும்-ஏனைய இடங்களிலும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களும், பொதுமக்களும் பொலிஸாரால் நேற்று அதிகாலை முதல் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். மதியத்துக்குப் பிற்பாடும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கலைந்துசெல்ல மறுத்ததால் அவர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டு வீசப்பட்டது, தடியடியும் நடத்தப்பட்டது. இளைஞர்களும் கற்களைக் கொண்டு பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதால் பதற்றம் ஏற்பட்டது.
மிருகவதை என்று தெரிவித்து இந்தியாவில் ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட்டிருந்தது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாதலால் அதை தடைப்பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று பல அரசியல் கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் பொங்கல் முடிந்த பிற்பாடும் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் உறுதியான எந்த முடிவும் வழங்கப்படவில்லை. டெல்லி அரசின் இந்த நிலைப்பாட்டைக் கண்டித்து, தமிழ்நாட்டில் பரவலான கண்டனங்களும், ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் இடம்பெற்று வந்தன-வருகின்றன. கடந்த திங்கட்கிழமை முதல் அலங்காநல்லூரிலும் மெரீனாவிலும் இளைஞர்கள் பெருந்திரளாகக் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இளைஞர்களின் எழுச்சியை அடுத்து ஜல்லிக்கட்டை நடத்த ஏதுவாக அவசர இயற்றிட தமிழ்நாட்டு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் முனைப்புக்காட்டினார்.
27 பக்கங்களைக் கொண்ட அவசரச் சட்டம் இயற்றப்பட்டது. மிருக வதையில் இருந்து ஜல்லிக்கட்டுக்கு விலக்கு. தமிழ்நாட்டு பாரம்பரிய காளைகளைக் காத்திட உரிய நடவடிக்கை ஆகியன அவசரச் சட்டத்தின் சிறப்பம்சங்கள். ஆனால், தமக்கு நிரந்தர சட்டமே வேண்டும் எனத் தெரிவித்து இளைஞர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**போர்க்களமானது மெரீனா**

இந்தியாவின் குடியரசுத் தினம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. குடியரசுத் தினத்தன்று சென்னை, மெரீனாவில் பெரிய அணிவகுப்புக்கள் வழக்கமாக இடம்பெறும். போராட்டத்தால் குடியரசுத்தினம் நடைபெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் தான் பொலிஸாரால் இளைஞர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
முதலில், பெண்கள், குழந்தைகள் வெளியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து சிலர் தாங்களாகவே வெளியேறினர்.ஆனால், ஏராளமான இளைஞர்கள் கடலை நோக்கி ஓடினர். அங்கேயே மனிதச் சங்கிலி அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மெரீனா கடற்கரை சில மணித் துளிகளில் போர்க்களமானது. நேற்று மதிய நிலவரத்தின்படி மெரீனாவில் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களின் தொகை பாதியாகக் குறைவடைந்தது.

# பனியில் புதைந்தது விடுதி 16 பேர் சாவு; 9 பேர் மீட்பு

உரோம், ஜன. 24
இத்தாலி மத்திய பகுதியில் உள்ள அப்ருஸோவில் கடும் பனிச்சரிவு காரணமாக 4 நட்சத்திர விடுதியொன்று கடந்த சனிக்கிழமை புதையுண்டது. இதில் 30 பேர் சிக்கியிருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்ட நிலையில், அவர்களில் 16 பேர் உயிரிழந்தனர் என்றும்-9 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர் என்றும்-தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



# பெப்ரவரி முதலாம்
# அலங்காநல்லூரில்

சென்னை, ஜன. 24
பெப்ரவரி முதலாம் திகதியில் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்த தீர்மானிக்கப்பட்டது. ஜல்லிக்கட்டை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தின் விளைவாக அவசரச் சட்டம் இயற்றப்பட்டு ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உடைக்கப்பட்டது. இதனை யடுத்து நேற்றுமுன்தினம் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அலங்கா
நல்லூ
வைப்
ஆனா
என்று
யனுப்
நேற்று
வரி மு
ஜல்லிக்
கப்பட்

# பொலிஸ் வாகனம்

சென்னை, ஜன. 24
ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி
இளைஞர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தப்பட்ட
லிக்கேணியில் உள்ள பொலிஸ் நிலையம் மீது தாக்
பொலிஸ் நிலையம் முன்னதாக இருந்த வாகனங்க
ணைப்புப் படையினரின் சில நிமிடப் போராட்டத்தின்
வரப்பட்டது. குறித்த பகுதியில் பாதுகாப்பும் அதிகரிக்



## ...லவந்த வெளியேற்றம்
## ...த்துப்பட்டதால் பதற்றம்



**அலங்காநல்லூரிலும் பலவந்த வெளியேற்றம்**

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவுப் போராட்டத்தில் ஈடுபட்ட மற்றொரு முக்கிய நகரான அலங்காநல்லூரிலும் பொலிஸார் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று பலர் தாமாகவே வெளியேறினர்.

மேலும், பலர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். மீண்டும் கூட்டம் கூடிவிடாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (ம-எ)

# அரசு– கிளர்ச்சிக்குழு இடையே சிரியாவில் அமைதிப் பேச்சு ஆரம்பம்

டமஸ்கஸ், ஜன. 24

சிரியா–சிரிய அரசுக்கு எதிரான ஆயுதக்குழு ஆகியவற்றுக்கு இடையிலான சமா தானப் பேச்சுவார்த்தை கஜகஸ்தானில் நேற்று ஆரம்பமானது. இந்தப்பேச்சுவார்த்தை இன்றும்தொடரும்.

சிரிய ஜனாதிபதி அல் அசாத்தை பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி தோற்றம் பெற்ற அழுத்தக் குழுக்கள், அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவாகவும் மாற்றம் பெற்றன. கடந்த ஆறுவருடங்களாக இரு தரப்புக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது. கடந்த டிசெம்பர் இறுதியில் சிரியாவுக்கு ஆதரவாக இருந்த ரஷ்யா மற்றும் ஈரானின் சம்மதத்துடன் தற்காலிகப் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனையடுத்து கஜகஸ்தானில் இந்த மாதம் நிரந்தரத்தீர்வுதொடர்பிலான பேச்சு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் நேற்று குறித்த பேச்சுவார்த்தைஆரம்பமானது. இன்றும் அது தொடர்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் சிரியாவுக்கான தூதுவர் ஸ்ரபான் டி மெஸ்ரூறா, அமெரிக்காவின் கஜகஸ்தான் தூதுவர், ரஷ்யப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-எ)





# ஒடிசா ரயில் விபத்து; சாவு 39ஆக உயர்வு

புதுடில்லி, ஜன. 24

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள விஜயநகரம் மாவட்டத்தில் ரயிலொன்று கடந்த சனிக்கிழமை நள்ளிரவுதடம்புரண்டதில் உயிரிழப்பு எண்ணிக்கை 39 ஆக அதிகரித்தது.

ஜக்தல்பூர் - புவனேஸ்வர் கடுகதி ரயிலே அவ்வாறு விபத்துக்கு உள்ளானது. 32 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களைத் தவிர 54 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பலரது நிலைமை கவலைக்கிடமாக இருந்ததால் உயிரிழப்பு மேலும் அதிகரித்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.



இந்த நிலையில் நேற்றுக் காலை நிலவரத்தின்படி சாவு எண் ணிக்கை 39 ஆக அதிகரித்தது.

ரயில் தண்டவாளம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது என்று முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்தது. இது அந்தப் பகுதியில் நடமாடிவரும் நக்சலைட்களின் நாசவேலையாக இருக்கும் என்று சந்தேகம் வெளியிடப்பட்டது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரமும் வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. (ம-எ)



## விலகுவதற்கு சம்மதித்தார் யாகியா ஜம்மே

காம்பியாவில் நீண்டகாலமாக அதிபராக இருக்கின்ற யாகியா ஜம்மே பதவியில் இருந்து விலக சம்மதித்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யாகியா ஜம்மே தோல்வியடைந்தார். இருப்பினும் அவர் ஆட்சி கைமாறுவதை விரும்பவில்லை. அவர் பதவி விலக வேண்டும் என்று மேற்கு ஆபிரிக்க நாடுகள் அழுத்தம் கொடுத்தன. இதனையடுத்தே அவர் பதவி விலக ஒப்புக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை அடுத்து ஜம்மே, கென்யாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

ஜம்மே 22 ஆண்டுகள் காம்பியாவை ஆட்சி செய்தார். தன்னுடைய அரசியல் எதிரிகளை பலவந்தமாக சிறையில் அடைத்தார் என்று குற்றச்சாட்டுக்கள் உள்ளன. (ம-எ)

## ... திகதியன்று ...ல் ஜல்லிக்கட்டு

...லூரில் ஜல்லிக்கட்டை ஆரம்பித்து ...ப்பார் என்று அறிவிக்கப்பட்டது. ...னால் தமக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் ...று வலியுறுத்தி அவரை மக்கள் திருப்பி ...ப்பினர். கிராமத்தின் பொதுக்கூட்டம் ...றுக் காலை இடம்பெற்றது. இதில் பெப்ர... முதலாம் திகதி அலங்காநல்லூரில் ...லிக்கட்டு நடத்தப்படும் என்று அறிவிக்...ட்டது. (ம-எ)

## ... தீக்கிரை

...தி மெரீனாவில் போராட்டம் நடத்திய ...ட்டதை அடுத்து, சென்னை திருவல் ...ாக்குதல் நடத்தப்பட்டது. ...ங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. திய...தின் பின்னர் தீ கட்டுக்குள் கொண்டு ...ரிக்கப்பட்டது. (ம-எ)

# ஏமன் உள்நாட்டுப் போரில் இரு நாளில் 70 பேர் சாவு

ஏமனில் அரசுக்கும், ஹௌதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த இரு நாள்களாக இடம்பெற்ற போரில் 70 பொது மக்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைநகர் சனா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் ஹௌதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி தனி அரசு நடத்தி வருகின்றனர். எனவே அதிபர் மன்சூர் ஹாதி, ஏடனை தலைநகராக கொண்டு ஆட்சி நடத்தி வருகிறார். இவருக்கு சவூதிக் கூட்டுப்படைகள் ஆதரவு அளித்துள்ளன. இதனால் கிளர்ச்சியாளர்களுக்கும், சவூதி கூட்டுப் படைக்கும் இடையே கடும் சண்டை நடக்கிறது. இந்த நிலையில், ஏமனில் கடந்த இரண்டுநாள்களாக நடைபெற்ற மோதலில் 70 பொதுமக்கள் சாவடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டது. (ம-ஏ)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சந்தேகங்களைக் கிளப்பும் வகையில் நடக்காதீர்கள்

**நா**வற்குழியில் அரச காணியில் குடியேறிய சிங்களவர்களில் 51 குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க தேசிய வீடமைப்பு அதிகார சபை முன்வந்துள்ளது என்று செய்திகள் வெளியாகின்றன. இந்த வீடுகளுக்கான அடிக்கற்கள் எதிர்வரும் 30ஆம் திகதி நடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேபகுதியில் 130 தமிழ்க் குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

ஒரு புறத்தில் பொருத்து வீடுகளைப் பெறுவதற்கு பல ஆயிரக்கணக்கானவர்கள் விண்ணப்பிக்கிறார்கள் என்கிற தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கையிலேயே இதுபோன்று எந்தவித உரிய நடைமுறைகளும் இன்றி – அடாத்தாக அரச காணியில் குடியேறியவர்களுக்குக் காணிகளை வழங்கி அதில் வீடுகளையும் கட்டிக்கொடுக்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. சட்ட நெறிமுறைகளுக்குக் கீழ் இது எப்படி நீதியாக முடியும் என்கிற கேள்வி ஒரு பக்கம் இருக்க, இதுபோன்று சிங்களக் குடியேற்றங்களைத் தமிழர்களின் மத்தியில் கொழும்பு அரசே ஏற்படுத்துவது ஏற்றுக் கொள்ளப்படாத – ஆக்கிரமிப்புத் தனமாகக் கொள்ளப்படவேண்டியது.

வடக்கில் போர் தீவிரமடைவதற்கு முன்னர், 1980களில் யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் வாழ்ந்தார்கள் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது. ஆனால், அவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் ஒரு குடியிருப்பாக வாழ்ந்தார்கள் என்று சொல்லிவிட முடியாது. அவரவர் தொழில் வசதிகளுக்கு ஏற்ப தேவைப்பட்ட இடங்களில் அவர்கள் வாழ்ந்தார்கள். முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் குடாநாட்டில் இருந்ததுபோன்று சிங்களவர்களின் செறிவான குடியிருப்பு எங்கும் இருந்ததில்லை.

அப்படியிருக்க, மீள்குடியேற்றம் என்ற பெயரில் ஒரு பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றுவது வளப் பகிர்வின் நீதியின்மையை எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய திட்டமிட்ட அரச ஆதரவு பெற்ற சிங்களக் குடியேற்றங்களே கடந்த காலங்களிலும் ஒரு மிகமோசமான குருதி சொட்டும் போருக்கு வழி வகுத்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இவ்வளவுகாலப் போர் இத்தனை இழப்புக்களுக்குப் பின்னரும் – தமிழர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஒரு அரசு பதவியில் இருக்கும்போதும் மீண்டும் அதே போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுவது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல.

இதற்காக சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறுவதைத் தமிழர்கள் எதிர்க்கிறார்கள் என்று அர்த்தமல்ல. சிங்களக் குடியேற்றங்களை அரசு திட்டமிட்டு உருவாக்குவதையும் ஊக்குவிப்பதையும்தான் எதிர்க்கிறார்கள். சிங்களவர்களை அப்படிக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கும் அரசு, 1983 கலவரத்தில் கொழும்பிலிருந்து நாட்டின் வேறு பகுதிகளில் இருந்தும் வெளியேறியவர்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதுதான் இங்கு பிரச்சினைக்குரிய விடயம்.

சிங்களவர்கள் இங்கு குடியேறுவதற்குத் தமிழர்கள் எதிர்ப்பில்லை என்றதன் அடையாளமாகத்தான் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், 1983 வாக்காளர் பட்டியலில் பதியப்பட்ட சிங்களவர்களின் வாரிசுகளுக்கு காணிகளும் வீடுகளும் வழங்க முடியும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், புதிய சிங்களக் குடியேற்றங்களை அரசு திட்டமிட்டு ஊக்குவித்து உருவாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழியில் குடியேறிய சிங்களவர்கள் சிலரது பின்புலத்துடன் யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்கள். நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அப்படி வந்தபோதும் அவற்றில் பல அநுராதபுரத்திற்கே திரும்பிச் சென்றுவிட்டன. இப்போது வேறு சில குடும்பங்களும் சேர்ந்து 57 குடும்பங்கள் அங்கு வாழ்வதாகக் கூறப்படுகின்றது. அவர்களில் 51 குடும்பங்களுக்கே வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு திடீரென வந்து குடியேறியவர்களுக்கு வீடுகள் வழங்கப்படுவதில் காட்டப்படும் ஆர்வமே ஐயங்களையும் அச்சங்களையும் தோற்றுவிக்கிறது. அதுவே பின்னர் எதிர்ப்பாகவும் மாற்றமடைகின்றது. தமிழர்கள் இந்த நாட்டில் இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்பட்டமையே போருக்கும் இழப்புக்கும் வழிவகுத்தது என்பதை மறந்துவிடக்கூடாது. வீடமைப்பு அதிகார சபை இது விடயத்தில் அவசரப்படாமல் நிதானமாகச் செயற்படுவதே நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் வழியாக இருக்கும்.

# வளங்கள் குறைந்த பாடசாலைகளின் கல்வித் தரம் உயருமா?

ந.லோகதயாளன்

**வ**டக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களில் அதிக வளப்பற்றாக்குறை, நெருக்கடிகளுடன் இயங்கும் வலயமாக 75 பாடசாலைகளை உள்ளடக்கிய வவுனியா வடக்கு கல்வி வலயம் கணிப்பிடப்பட்டுள்ளது. வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கீழ் 81 பாடசாலைகள் உள்ளபோதிலும், 75 பாடசாலைகளே இயங்கு நிலையில் உள்ளன. அவற்றுக்குத் தேவையான வளங்கள் அல்லது அடிப்படைத் தேவைகள் ஓரளவுதானும் பூர்த்தி செய்யப்படவில்லை. இந்த வலயத்தில் 8320 மாணவர்களின் கல்விக்காக 789 ஆசிரியர்கள் தற்போது பணியாற்றுகின்றனர். பாடசாலைகளில் 04 பாடசாலைகள் 1ஏ.பி தரத்தையும், 7 பாடசாலைகள் 1சீ தரத்தையும் கொண்டவையாகும்.

### வவு.வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளில் அதிக அளவு வளப்பற்றாக்குறை

இரண்டாம் தரத்தைச் சேர்ந்த 27 பாடசாலைகளும், ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளாக 37 பாடசாலைகளும் உள்ளன. இந்த வலயத்துக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்களில் பெரும்பாலோர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வலயத்தின் கல்விச் செயற்பாட்டுக்கான தடை போக்குவரத்திலேயே ஆரம்பிக்கின்றது. இவ்வலயத்தின் 44 பாடசாலைகள் வாகனப் போக்குவரத்து அற்ற பகுதிகளிலேயே தற்போதும் இருந்து வருகின்றன.

இத்தகையதோர் இக்கட்டால், பல ஆசிரியர்கள் இங்கு பணியாற்றப் பின்னடிப்பதோடு, அண்மையில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் சிலர் தமது நியமனத்தையே ஏற்காது கைவிட்டுள்ளனர். நெடுங்கேணியின் சேமமடு, அனந்தர் புளியங்குளம், விஞ்ஞான குளம், கரப்புக்குத்தி, ஆகிய பிரதேசங்களுடன் மாதர்பனிக்கங்குளம், குஞ்சுக்குளம் உள்ளிட்ட பகுதிகளும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

போக்குவரத்து நெருக்கடி ஒரு புறமெனில், ஆசிரிய பற்றாக்குறை மறுபுறம் வாட்டுகின்றது. ஏ.9 வீதியை அண்டிய பாடசாலைகளில் ஓரளவு ஆசிரியர்கள் இருப்பினும், உட்பகுதிப் பாடசாலைகளில் பாடரீதியான ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது. இவற்றை நிவர்த்தி செய்யமுடியாது வலயக் கல்வித் திணைக்களம் இன்றுவரை திணறுவதாகவே தெரிகின்றது. பற்றாக்குறைக்கான காரணமாக, அதிக பாடாலை களில் எண்ணிக்கையில் மிகக் குறைந்த மாணவர்களே கற்பதுதான் என்ற காரணமும் முன்வைக்கப்படுகின்றது.

அதாவது 75 பாடசாலைகள் இயங்கும் குறித்த வலயத்தில் 36 பாடசாலைகளில் சராசரி 25 மாணவர்கள்கூடக் கல்வி கற்கவில்லை. அதனைவிட 10 மாணவர்களுடன் இயங்கும் 9 பாடசாலைகளும் இந்தக் கல்வி வலயத்தில் உள்ளன. இவ்வாறு இயங்கும் பாடசாலைகளில் ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களே பணிபுரிகின்றனர். இருப்பினும் மூன்றாவது ஆசிரியரையும் நியமிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில், இரு பாடசாலைகளை ஒன்றிணைப்பதன் மூலம் தற்போதுள்ள ஆசிரியர்களே போதும் என்ற நிலையை எட்ட முடியும் என்ற ஓர் கருத்துக்குப் பெற்றோர் உடன்படுவதாகவும் இல்லை.

### இரு பாடசாலைகளை ஒன்றிணைப்பதை விரும்பாத பெற்றோர்

சொந்த ஊரில் உள்ள பாடசாலைகளுக்கே 4 அல்லது 5 மைல்கள் தூரம் செல்லவேண்டிய நிலையில், அந்தப் பாடசாலையையும், அயல் பாடசாலையொன்றுடன் இணைத்தால், மேலும் அலைச்சல் ஏற்படுவதுடன். கிராமத்தின் பெயரும் மங்கிவிடும் என்ற கருத்தையும் பெற்றோர் முன்வைக்கின்றனர். இதற்கான மாற்றுவழியாக, பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்களை அங்கேயே தினவரவைப் பதிந்து ஆசிரியர்களும் ஒப்பமிட்ட பின்பு, அருகில் உள்ள பாடசாலைக்கு ஏற்றி இறக்குவதன் மூலம் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கலாம் என்ற கருத்தும் முன் வைக்கப்படுகின்றது.

இந்தக் கருத்துக்குக் கூடப் போக்குவரத்தே தடையாகவுள்ளது. அவ்விதம் மாணவர்களை ஏற்றி இறக்குவதற்கான கொடுப்பனவிற்குரிய வழிவகைகளும் இங்கு காணப்படவில்லை.

இத்தகைய விதத்தில் 10 பாடசாலைகளது மாணவர்களை, அருகில் உள்ள 10 பாடசாலைகளுடன் இணைக்கும் சந்தர்ப்பத்தில் 20 பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களை நிறைவு செய்யலாம் எனக் கூறப்படுகின்றது. இதன்மூலமே ஓர் பாடசாலையில் சுமார் 30 முதல் 40 மாணவர்கள் காணப்படுவார்கள்.

### போக்குவரத்துச் சிரமத்தால் திண்டாடும் மாணவர்கள்

இவை ஒருபுறமிருக்க, நெடுங்கேணிச் சந்தியில் இருந்து மாதர் பணிக்கங்குளம், குஞ்சுக்குளம் வரையிலான சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்திற்கு பாடசாலை தொடங்கும் நேரத்தில் சென்று, பாடசாலை முடியும் நேரம் திரும்பும் வகையில் ஓர் பேருந்துச் சேவை ஏற்படுத்தப்படுமாயின் 11 பாடசாலைகளுக்கான போக்குவரத்துச்சேவையை இலகுபடுத்த முடியும். இதற்கும் இன்றுவரை இ.போ.சபையினரோ அல்லது தனியார் பேருந்துச் சங்கங்களோ முன்வரவில்லை. ஒரு பேருந்துச் சேவை மூலம் 11 பாடசாலைகளின் மாணவர்களது போக்குவரத்தை நிவர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறான அத்தனை நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் இந்த வலயமே, நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் 10 இடங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது. வவு/புதுக்குளம் யூனியன் ஆரம்பப் பாடசாலையே அத்தகைய சாதனையைப் புரிந்துள்ளது.

இத்தனைக்கும் இந்த வலயத்தில் ஒரு தேசியப் பாடசாலை கிடையாது. அதேபோன்று ஓர் விஞ்ஞானகூடமோ அல்லது பொது நிகழ்வுக்கேற்ற மண்டப வசதிகளோ கூடக் கிடையாது. வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடாத்துவதானல் வசதி வாய்ப்புக்கள் கொண்ட மைதானமும் இல்லை.

இவ்வாறு எந்தவொரு அடிப்படை வசதியும் அற்று வடமாகாணத்திலேயே மிகவும் பின்தங்கியவலயமாக இயங்குவதனால், இந்தப் பிரதேசத்தில் உள்ள ஒரு சில வசதி வாய்ப்புள்ள பெற்றோர் தமது பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலையில் சேர்க்க முயல்கின்றனர்.

இந்த வலயத்திற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த மாகாணக் கல்வி அமைச்சு, உதவி நிறுவனங்கள், அரசியல்வாதிகள் ஆகிய தரப்பினர் ஒன்றிணைந்து இவ்வலயத்தின் குறைகளைப் போக்கி இந்த மாணவர்களின் எதிர்காலத்திற்கும் ஒளியூட்ட முன்வர வேண்டும்.

# போர்க்குற்ற விசாரணைகளுக்கு சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம்

சேரலாதன்

போர் இடம்பெற்ற போது பொது மக்களைக் கடத்திச் சென்று படுகொலை செய்த படையினர் கைது செய்யப்பட்டுத் தண்டனைக்கு உள்ளாக்கப் படவேண்டும். இவ்வாறு அமைச் சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்துள்ளமை பலருக்கும் ஆச் சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசு நிறைவேற்றவேண்டுமெனமுன்மொழிந்த யோசனைகளில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட படையினர் கைது செய்யப்பட வேண்டுமென்பது பிரதானமானது. கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசுகள் தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்குப் போரை ஒருகாரணமாகக் கூறிச் செயற்பட்டு வந்தன. தமக்கு வேண் டாதவர்களை அழித்து விடுகின்ற கொள்கை மகிந்த அரசின் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. பாடசாலை மாணவர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சாதா ரண பொது மக்கள் எனப் பல தரப்பினரும் படையினரால் கொல்லப்பட்டனர். பிரபல ஊடகவியலாளரான சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கு அரசு மீதே குற்றம் சாட்டப்பட்டது. அரசுக்கு எதிரான கருத்துக்களை லசந்த தமது பத்திரிகையில் வெளியிட்டதால் அவர் கொலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது ஆஸ்திரேலியாவில் வாழும் லசந்தவின் மகள் தமது தந்தையின் கொலையின் பின்னணியில் கோத்தபாய ராஜபக்ச இருந்ததாகத் தெரிவித்த கருத்து மகிந்த தரப்பினரை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

லசந்தவின் கொலை மட்டுமல்ல, இதைவிட ஏராளமான கொலைகள் கடந்த ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றுள்ளன. வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட பலரின் கதி தொடர்பாக இதுவரை தகவல் எதுவுமில்லை. சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் முக்கிய தமிழ் அரசியல் தலைவரான குமார் பொன்னம்பலம் பட்டப் பகல் வேளையில் படு கொலை செய்யப்பட்டார். ஆனால் இந்தக் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் இதுவரை தண் டிக்கப்படவில்லை. இதே போன்றுதான் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த ஜோசப் பரராசசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் ஆகியோரும் கொலை செய்யப்பட்டனர். ரவிராஜ் கொலை வழக்கிலும் படையினர் தொடர்புபட்டிருந்தமை இங்கு நோக்கத்தக்கது. ஏனையவர்களின் கொலைகள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் இன்னமும் முழுமையாக இடம் பெறவில்லை. இதே போன்றுதான் திருமலை மாணவர்கள் படுகொலை, மூதூர் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பணியாளர்கள் படுகொலை விவகாரங்களிலும் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படாது தாமதிக்கப்படுகின்றமை தமிழர்களிடையே விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

இறுதிப் போரின்போது, தமிழர்களைக் காப்பாற்றுவதற்கான மனிதாபிமானப் போர் எனக் கூறியவாறு தமிழர்களை அழித்தொழிப்பதில் அரசு முனைப்புடன் ஈடுபட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பலர் பலதரப்பட்ட இழப்புக்களைச் சந்தித்தனர். பெண் போராளிகள் மிலேச் சத்தனமான வகையில் மானபங்கப்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். அப்போதைய அரசு இதையெல்லாம் அறிந்திருந்தபோதிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இதைவிடப் படையினரிடம் சரணடையும் பொருட்டு வெள்ளைக் கொடி ஏந்திச் சென்ற புலிகளின் மூத்த தலைவர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு ஐக்கிய நாடுகள் சபையே பொறுப்புக் கூறியிருக்க வேண்டும். ஆனால் ஐ.நா. தனது பொறுப்பிலிருந்து தவறி விட்டது. ஈழத்தமிழர்கள் அவலங்கள் குறித்து இந்தியா சிறிதும் அக்கறை காட்டவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில், போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேசத்தின் பங்களிப்புடனான விசாரணை அவசியமென வலியுறுத்தப்பட்டும், இலங்கை அரசு அதை நிறைவேற்றுவதற்குப் பின்னடித்து வருகின்றது. ஐ.நாவிடம் கால அவகாசம் கேட்டுக் காலத்தை கடத்துவதே அரசின் நோக்கம் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. இந்த நிலையில் தான் ராஜித சேனாரத்ன தமது கருத்தை வெளியிட் டுள்ளார்.

ஆனால் இலங்கை விடயத்தில் காலம், என்றோ கடந்து சென்றுவிட்டது. ஐ.நா சபையின் தீர்மானங்களை எந்தவொருநாடும் அலட்சியப்படுத்த முடியாது. இலங்கையைப் பொறுத்தவரை, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரத்தைக் கொண்டுள்ள ரஷ்யாவும், சீனாவும் பக்கபலமாக உள்ளமை இலங்கை அரசுக்குத் தெம்பைக் கொடுத்துள்ளது.

போர்க்குற்றவிசாரணை என்று வந்தால் படையினரும் குழப்பமடையவே செய்வார்கள். இதனால் ஆட்சிக் கவிழ்ப்புக்கான முயற்சிகளும் தீவிரமடையக் கூடும்.

எனவே இலங்கை அரசு துணிச்சலுடன் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கான பங்களிப்பைச் சர்வதேச நாடுகள் வழங்கவேண்டும். இதன் மூலமாகவே நீதி நிலை நாட்டப்பட வாய்ப்பமையும்.



# வாசகர் திருமுகம்

## உதயன் புத்தாண்டு சிறப்பிதழ் பற்றிய ஒரு வாசகனின் பார்வை

உதயன் புத்தாண்டு சிறப்பிதழை ஒரு முற்றுமுழுதான இலக்கியம், கலை, சமூகவியல், சூழல் சார்ந்த இதழாகக் கொண்டு வந்தமைக்கு ஒரு வாசகன் என்ற முறையில் முதலில் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதல் கட்டுரையான அற்புதமரம் என்னும் முருங்கை பற்றிய கட்டுரை, கட்டுரைக்கரை தொல்லியல் ஆய்வுகள் என்கிற பேராசிரியர் புஸ்பரட்ணத்தின் கட்டுரை, ஆக்கிரமிக்கும் அன்னிய உயிரினங்கள் என்ற கலாநிதி திருமதி ஞானேஸ்வரனின் கட்டுரை, பட்சிகளின் பல்வகைமை பற்றிய கலாநிதி அபிராமி சிவரூபன், கஜவதனி கந்தசாமி ஆகியோரின் கட்டுரைகள், வறட்சியும் நாமும் என்கிற ரேணுகாபதி கந்தையாவின் கட்டுரை போன்ற அறிவியல் சார்ந்த ஆக்கங்கள் மிகுந்த பயனும் பொருத்தப்பாடும் மிக்கவை. அதேபோல கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய க.நா. சபாரத்தினத்தின் கட்டுரை, குண்டலினி புரக்காப்பியம் எனும் மருத்துவர் யமுனா நந்தாவின் கட்டுரை, தகவலறியும் உரிமைச் சட்டம் என்கிற கலாநிதி கணேசலிங்கத்தின் கட்டுரை, நாட்டுப்புற ஆடல்கள் என்கிற சுபா.சிந்துதாசன் எழுதிய கட்டுரை போன்றவையும் மலருக்கு அழகு சேர்க்கின்றன.

இலக்கியப் பகுதியைப் பொறுத்தளவில் பாராட்டக்கூடிய அம்சங்கள் குறைவாகவும், கேள்விக்கு உட்படுத்த வேண்டிய விசயங்கள் கூடுதலாகவும் தெரிகின்றன என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். முக்கியமாக எமது எழுத்துச் சூழலில் குறிப்பிடப்பட வேண்டியவர்களாகிய குப்பிளான் சண்முகன், அ.யோகராசா, க.தணிகாசலம், ச.ராகவன் போன்றவர்களின் ஆக்கங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும். மாறாக, அதேவேளை, அதிகம் அறியப்பட்டோ, பங்களிப்புச் செய்தோ இராத சிலர் முதன்மைப்படுத்தப்பட்டிருப்பது கவலைக்குரியது. குறிப்பாக அதிகம் பங்களிப்புச் செய்தோ, அறியப்பட்டோ இராத ஒரு எழுத்தாளருக்கு (ம.பா.மகாலிங்கசிவம்) அதீத முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதாகவே பலரும் உணருகிறார்கள். அதேவேளை, பிரசுரம் பெற்றுள்ள ஏனைய இலக்கியக்காரர்களின் பேட்டிகளிலும், இருபேட்டிகள் தவிர ஏனைய யாவும் அவரவர் பற்றிய கூடுதல் கதையளப்புக்களாகவே அமைந்திருப்பது உறுத்துகிறது. ஓவியர் ஆசை இராசையா, சாந்தன் ஆகியோர் புறநடை. கொடுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு மேடைப்பேச்சாளர் தன்னைத்தானே நல்லதொரு விமர்சகன் என்று சொல்லப் புகுந்ததும், மகாலிங்கசிவத்தின், வாய்க்குள் புகமுடியாத தலைப்புள்ள தனது கதையைப்பற்றித் தானே சொல்லிக் கொள்வதும், உவப்பாக இல்லை. இதேபோல சோ.பத்மநாதன், தான் குழந்தை சண்முகலிங்கத்தின் மூன்று நாடகங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பிறகுதான் தென்னிலங்கை விமர்சகர்கள் எமது படைப்புக்களைத் திரும்பிப் பார்த்தனர் 'என்ற கருத்து நகைப்புக்கிடமானது.

இலக்கியக்கட்டுரைகளைப் பொறுத்தளவில் கருணாகரன், கிரிசாந், இயல்வாணன், சி.ரமேஸ் ஆகியோரின் அறிமுகங்கள் தொடக்கநிலை வாசகர்களுக்கும் ஆர்வமூட்டி வாசிப்பின் பால் நெறிப்படுத்தக்கூடியவை .

இதற்குமாறாக, தொடக்க நிலை வாசகர்களை மட்டுமன்றி, சற்று வாசிப்பின்பால் நாட்டமுள்ளவர்களைக்கூட பயமுறுத்தும் வகையில் உள்ள இரண்டு ஆக்கங்களைப் பற்றியும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒன்று திருமதி கோகிலா மகேந்திரன் எழுதிய புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல் என்கிற ஒன்று, மற்றையது தேவி பரமலிங்கம் எழுதிய மனிதம் என்கிற கதை. முன்னவரின் கட்டுரை தனக்குப் பிராணியியல் தெரியும் என்றும், பின்னவரின் கதை. தனக்குச் சிங்களம் தெரியும் என்றும் காட்ட முனைந்து, முன்னையது ஆங்கிலத்திலும், பின்னையது சிங்களத்திலுமாக அரைக்கரைவாசி அமைந்து, வாசகர்களை மட்டுமன்றி, ஒப்புநோக்குநர்களையும் சவாலுக்கு இழுக்கின்றன. இந்த லட்சணத்தில் என்னதான் வாசிப்பை நேசிப்போம் என்று சாந்தன் போன்றவர்கள் உரத்துக் கூவினாலும் எதுவும் நடக்கப் போவதில்லை.

கவிதைகளைப் பொறுத்த அளவில் வேலணையூர்தாஸ், கோகுலராகவன், த.ஜெயசீலன் போன்றோரின் கவிதைகள் கவிதைகளாக அமைகின்றன. சோ.பவின் அப்பிளும் வெள்ளரியும் என்கிற கவிதை ஆரம்பத்தனமாகவும், அடிப்படையில் பொருள்குறைபாடு இருப்பதாகவும் உள்ளது. பொருள் உறுத்தல் என்கிற வகைக்குள், யதார்த்தன் என்கிற இளம்எழுத்தாளர்எழுதியமஞ்சள்சுவாலை என்கிற கதை யில் வருகிற நவரத்தினம் என்கிற பாத்திரம், தான் குடிப்பதற்காகக் கூறும் காரணமும் அடங்கும்.

கவிதைகளைப் பொறுத்த அளவில் கடம்பேஸ்வரனிடம் இப்படியொரு கதையை வாங்காமல், தமிழ் இலக்கணம் பற்றிய ஒரு நல்ல கட்டுரையைப் பெற்றுப் பிரசுரித்திருக்கலாம். சட்டநாதன், சாந்தன், கே.ஆர்.டேவிட் இவர்களின் கதைகள் ஏற்கனவே பிரசுரம்பெற்றனவையாவே தெரிகின்றன. அவை முதலில் வெளியான காலம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். தஞ்சம், தனியொருவனுக்கு, பூகோளம், மஞ்சள் சுவாலை, மீன்கள் ஆகிய கதைகள் மனதில் நிற்பவை.

ஓவியங்கள் பற்றியும் ஒருவரி குறிப்பிட்டே ஆக வேண்டும். ஜெயராஜ், ஆர்.கே. லக்ஸ்மன் போன்ற பிற ஓவியர்களிடமிருந்து இந்திய சஞ்சிகைகள் மூலமும், இணையம் மூலமும் எடுக்கப்பட்ட ஓவியங்கள் மலருக்கு கலரை மட்டுமன்றி, கறையையும் பூசி நிற்பதாகவே உணரமுடிகிறது. எம்மத்தியில் எத்தனையோ இளைய ஓவியத் திறமைசாலிகள் இருந்தும் இப்படியான நிலையைத் தவிர்த்திருக்கலாம் என்றே படுகிறது.

மலராக்கத்துக்கு ஒருகுறிப்பிட்ட பத்திரிகையாளரின் அதிகப்படியான செயற்பாடும், அதனால் போதாமைகளும் தவிர்க்க முடியாத காரணங்களாய் அமைந்திருப்பது புரிந்து கொள்ளப்படக் கூடியதே. அதேபோல, பங்களித்தவர்களுக்குச் சீரான இடஒதுக்கீடு இல்லாமையும், பக்கங்களின் தள அமைப்பு சரிவர அமையாமையும் தவிர்க்கப்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும், இப்படியான ஒருமலரை வெளியிட முன்வந்த உதயன் நிறுவனத்தினர் பாராட்டப்படவேண்டிய வர்கள். இப்பணி இனிமேலும் தொடர வேண்டும்.

*தீனா – பிரம்மா*




# கோடரியால் பூ பறித்தால்

உழவன் ஒருவனிடம் பெரிய தோட்டம் ஒன்று இருந்தது. அதில் காய்கறிகளைப் பயிரிட்டான் அவன். நாள்தோறும் ஒரு முயல் அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்து இலை, பிஞ்சுகளைச் சாப்பிட்டது. அதைப் பிடிக்க அவன் பல முயற்சிகள் செய்தான். முயல் அவனிடம் சிக்கவே இல்லை.

எப்படியும் முயலைப் பிடித்தாக வேண்டும் என்று நினைத்த அவன் அரசனிடம் சென்றான். "அரசே என் தோட்டத்தை முயல் ஒன்று பாழாக்குகிறது. நீங்கள் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்" என்றான். சிரித்த அரசன் 'ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடியவில்லையா?" என்று கேட்டான்.

"அரசே! அந்த முயலுக்கு மாயமந்திரம் தெரிந்திருக்க வேண்டும் நான் அதைப் பார்த்துக் கல்லையோ கட்டையோ வீசினாலும் அவை அதன் மீது படுவது இல்லை" என்றான் அவன்.

"நாளையே வேட்டை நாய்களுடன் நான் அங்கு வருகிறேன். முயலின் மாய மந்திரம் எதுவும் என் வேட்டை நாய்களிடம் செல்லாது. அந்த முயலைப் பிடித்த பிறகு தான் நான் அங்கிருந்து திரும்புவேன்" என்றான் அரசன்.


மகிழ்ச்சியுடன் தன் தோட்டத்துக்கு வந்தான் அவன். இனி முயலின் தொல்லை இருக்காது என்று நினைத்து அரசனுக்கும் அவன் வீரர்களுக்கும் சிறப்பான விருந்துக்கு ஏற்பாடு செய்தான். மறுநாள் படைவீரர்கள், வேட்டைக்காரர்கள், நாய்கள் சூழ அரசன் அங்கு வந்தான். எல்லோரையும் வரவேற்ற உழவன் அவர்களுக்குச் சிறப்பாக விருந்து வைத்தான். விருந்து முடிந்தது. மகிழ்ச்சி அடைந்த அரசன் ''இன்னும் சிறிது நேரத்தில் அந்த முயல் என்ன கதி ஆகிறது பார்" என்று வேட்டையாடப் புறப்பட்டான்.

வேட்டைக்காரர்கள் கொம்புகளை ஊதினார்கள். வேட்டை நாய்கள் பயங்கரமாகக் குரைத்துக் கொண்டே தோட்டத்துக்குள் பாய்ந்தன. புதரில் மறைந்திருந்த முயல் அச்சத்துடன் வெளியே வந்தது. அங்கிருந்த வேலியை நோக்கி ஓடியது. அதைப் பார்த்த அரசன், "அந்த முயலைத் தப்ப விடாதீர்கள், பிடியுங்கள்" என்று கத்தியபடி வேலிப் பக்கம் ஓடினான். வேட்டைக்காரர்களும் வீரர்களும் அரசனைத் தொடர்ந்து ஓடினார்கள்.

தப்பிக்க நினைத்த முயல் தோட்டத்துக்குள் அங்கும் இங்கும் ஓடியது. அவர்கள் அனைவரும் அதைத் துரத்தினார்கள். நீண்ட நேரப் போராட்டத்தின் பின் ஒரு வேட்டை நாய் பாய்ந்து அந்த முயலைக் கவ்விப் பிடித்தது. வெற்றிப் பெருமிதத்துடன் அந்த முயலை உழவரிடம் காட்டினான் அரசன். இவர்களின் முயல் பிடிக்கும் முயற்சியில் தன் அழகான தோட்டம் முற்றிலும் நாசமாகி விட்டதை அறிந்து வருந்தினான் உழவன்.

"சிறு வேலைக்குப் பெரியவர்கள் உதவி கேட்பது தவறு என்று உணராமல் போனேனே. என் அழகான தோட்டம் அழிந்து விட்டதே.

ஒரு முயல் என்ன ஆயிரம் முயல்கள் பல நாள்கள் வந்திருந்தாலும் இப்படிப்பட்ட அழிவை ஏற்படுத்தி இருக்க முடியாதே. என் முட்டாள்தனத்தால் பேரழிவைத் தேடிக் கொண்டேன்'' என்று வருந்தினான் அவன்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1994 - குடாநாட்டின் மீது ஷெல் தாக்குதல்; யாழ். மாவட்டச் செயலர் கா.மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கவுக்கு எடுத்துரைப்பு.

1995 - பிரபாவுக்குப் புகழாரம் சூட்டுகிறார் வடக்கு - கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா.

2004 - மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தல்; கல்வி மேம்பாட்டுப் பேரவை நடவடிக்கை.

2006 - திருமலை சுடர்ஒளி செய்தியாளர் சுகிர்தராஜன் சுட்டுப் படுகொலை. கடமைக்குச் சென்று கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்தோர் கைவரிசை.

2007 - குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல்; இதுவரை 41 பேர் ஆணைக்குழுவில் சரண்.

## துணிவே துணை

ஜூலியஸ் சீசர் போல ரோமப்பேரரசராக உயர வேண்டுமா? அல்லது உங்களுக்குள்ளேயே சிறைப்பட்ட ஒரு பறவையாக வாழ வேண்டுமா? என்பது உங்களின் துணிச்சலைப் பொறுத்தே அமையும். இந்த இரண்டு வெற்றிகளும் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. எதைத் தேர்வு செய்து முனைப்புடன் உங்களை நீங்களே வழி நடத்திச் செல்கிறீர்களோ. எண்ணியது போலவே - உருவாகி விடுவீர்கள். துணிச்சலுடன் உயர்ந்த இலட்சியங்களை அடைய எப்பொழுதும் முன்னோக்கியே செல்லுங்கள்.

-ஸர் டி.ப்ரெளன்


கல்லுக்கடியில் மாட்டிக் கொண்ட
புல்லும்
முளைத்துக் காட்டும்!

மண்ணுக்கடியில் மாட்டிக் கொண்ட
எள்ளும்
துளைத்துக் காட்டும்!

சுமைகளுக்குள் மாட்டிக் கொண்ட நீ
புல்லைவிட
எள்ளைவிட
இளைத்தவரா? சளைத்தவரா

துளைத்துக் காட்டு
முளைத்துக் காட்டு

வாழ்வையே...
வசமாய்
வளைத்துப் போடு!





# வர்ணம் தீட்டுவோம் வாங்க..



## அப்துல் கலாமின் மாணவர்களுக்கான 10 கட்டளைகள்

1. நான் நன்றாக உழைத்து, படித்துக் கல்வியில் சிறப்பிடம் பெறுவேன்.
2. கல்வியறிவு இல்லாத பத்துப் பேருக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து மனநிறைவு பெறுவேன்.
3. வீட்டிலோ பள்ளியிலோ பத்து மரக்கன்றுகளை நட்டு, மரங்களாக்குவேன்.
4. போதைப் பழக்கத்துக்கு அடிமையான ஐந்து பேரையாவது நல்வாழ்க்கைக்கு மீட்பேன்.
5. துயரப்படுவோருக்கு இயன்ற உதவி செய்து, அவர்கள் முகத்தில் மலர்ச்சி ஏற்படச் செய்வேன்.
6. மதம், சாதி, மொழி பெயரால் நடக்கும் தீவிரவாதச் செயல்களுக்குத் துணை போகச் செய்யமாட்டேன்.
7. நேர்மையான வழியில் நடந்து மற்றவர்களுக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்வேன்.
8. நான் நல்வழியில் நடந்து நற்பணி செய்து என் வாழ்வில் உதாரணமாகத் திகழ, இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.
9. ஊனமுற்ற சகோதர, சகோதரிகள் சாதாரண மனிதர்கள் போல் வாழ என்னால் ஆன முயற்சி செய்வேன்.
10. நாட்டின் வெற்றி, நாட்டு மக்களின் வெற்றி ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவேன்.



## சர்வதேச தினங்கள்

### மார்ச்


06 – புத்தகங்கள் தினம்
08 – பெண்கள் தினம்&எழுத்தறிவுதினம்
11 – பொது நலவாய அமைப்பு தினம்
13 – சிறுநீரக விழிப்புணர்வுதினம்
15 – நுகர்வோர்தினம்
20 – ஊனமுற்றோர்தினம், சிட்டுக்குருவிகள் தினம்
21 – காடுகள்தினம், சர்வதேச இனவேறுபாட்டுக்கு எதிரான தினம், கவிதைகள் தினம்
22 – தண்ணீர்தினம்
23 – தட்பவெப்பநிலை தினம்
24 – காசநோய் தினம்
28 – கால் நடை மருத்துவ தினம்

(தொடரும்)

## நாளை தை-12

புதன்கிழமை -25.01.2017
திதி: திரயோதசி பி.இ.04.58
நட்சத்திரம்: மூலம் மு.இ. 07.48
ராகுகாலம்:12.36-02.06 வரை
சுபநேரம்:05.06-06.36 வரை
பிரதோச விரதம்

| ஜனவரி | 2017 | JANUARY | | | |
|---|---|---|---|---|---|
| SUN ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| MON திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| TUE செவ்வாய் | 3 | 10 | 17 | 24 | 31 |
| WED புதன் | 4 | 11 | 18 | 25 | |
| THU வியாழன் | 5 | 12 | 19 | 26 | |
| FRI வெள்ளி | 6 | 13 | 20 | 27 | |
| SAT சனி | 7 | 14 | 21 | 28 | |



# ஜனவரி மாத ராசி பலன்

## சிம்மம்

எதற்கும் கலக்கமோ, அதிர்ச்சியோ அடையாத சிம்ம ராசியினரே! நீங்கள் வசீகரப் பேச்சாற்றல் கொண்டவர். இந்தக் காலகட்டத்தில் எல்லா வகையிலும் நல்ல பலன்கள் உண்டாகும். எதிர் பாராத சம்பவங்களால் இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். ராசிநாதன் சூரியனின் ஆறாமிட சஞ்சாரம் உடல் ஆரோக்கியம் மனதில் உற்சாகத்தைத் தரும். ராசியைச் சனி பார்ப்பதால் அவ்வப்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டு நீங்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் கேதுவுடன் இணைந்து ராசியை ஏழாம் பார்வையாகப் பார்க்கிறார். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சற்றுக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். கடன் பிரச்சினைகள் குறையும். போட்டிகள் நீங்கும்.

வரவேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டுக் கிடைக்கும். குடும்பாதிபதி புதன் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருக்கிறார். குடும்பத்தி லிருந்து வந்த குழப்பங்கள் தீரும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளுக்காக பாடுபடுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் கௌரவம் கூடும். பெண்களுக்கு இதுவரை இழுபறியாக இருந்த பிரச்சினைகள் சாதகமான முடிவு பெறும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.

கலைத்துறையினர் விடா முயற்சியுடன் காரியங்களைச் செய்து சாதகமான பலன் பெறுவார் கள். பணவரத்து திருப்தி தரும். இதுவரை இருந்த தடைகள் நீங்கும். எதிலும் முழு முயற்சி யுடன் ஈடுபடுவீர்கள். எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்கள் அனுகூல மாக நடக்கும். அரசியல்துறையினருக்கு புத்தியில் தெளிவு ஏற்படும். மனதில் தன்னம்பிக் கையும், தைரியமும் அதிகரிக்கும். மனக் குழப்பம் நீங்கும். ராசிநாதனான சூரியன் சஞ்சாரம் செய்வதால் பணவரத்தை அதிகப்படுத்தும். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். அரசு மூலம் நடக்க வேண்டிய பணிகளில் இருந்த தொய்வு நீங்கும். மாணவர்கள் கூடுதல் மதிப்பெண் பெற அதிகமாகப் படிக்க வேண்டியிருக்கும். கல்வி தொடர்பான பிரச்சினைகள் குறையும். தேவையான உதவியும் கிடைக்கும்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியனைத் தீபம் ஏற்றி வழிபட்டு வரக் கடன் பிரச்சினை குறையும். முன்னேறத் தேவையான உதவிகள் கிடைக்கும்.

## கன்னி

சாந்தமும், அமைதியும் உடைய கன்னி ராசியினரே! நீங்கள் நேர்மையை தாரக மந்திர மாகக் கொண்டவர்கள். இந்தக் காலகட்டத்தில் ராசியில் குரு இருக்கிறார். ராசிநாதனான புதன் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். ராசியைச் செவ்வாய் பார்ப்பதால் மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த நன்மையைத் தராவிட்டாலும், உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருக்கும் சூரியன், குருவுடன் திரிகோண சம்பந்தம் பெறுகிறார். கௌரவம், அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும்.

தொழில் ஸ்தானத்தை ராசிநாதன் புதனே பார்க்கிறார். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழிலை விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். மனைவி குழந்தைகளுடன் சந்தோசமாகப் பொழுதைக் கழிப்பீர்கள். ஆன்மிகப் பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன லாபம் ஏற்படும். தகப்பனாருடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வெளித்தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. பெண்கள் அவர்களின் எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவது நல்லது.

கலைத்துறையினரே, ராசிநாதனான புதனின் சஞ்சாரம் எதிர்பாராத நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும். மனதில் சந்தோசம் உண்டாகும். எந்தப் பிரச்சினை வந்தாலும் சமாளித்து முன்னேறிச் செல்வீர்கள். தெளிவான முடிவுகளை எடுப்பதன் மூலம் இழுபறியான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மற்றவர்கள் பாராட்டக் கூடிய மிகப்பெரிய செயலைச் செய்து முடிப்பீர்கள். அரசியல்துறையினருக்குப் புதிய பதவிகள் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து ஆகியவை உயரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பெரியோர்கள் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். திறமையும் வெளிப்படும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். மனதில் தைரியம் உண்டாகும். மாணவர்களுக்கு பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக்கொள்வது நல்லது. திட்டமிட்டுச் செயலாற்று வது முன்னேற்றத்துக்கு உதவும்.

**பரிகாரம்:** புதன்கிழமைகளில் புதனை, தீபம் ஏற்றி வணங்கி வருவதும், புத்தி சாதுரியத்தைத் தரும். சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாகத் தீர்ப்பீர்கள்.

# உலகைத் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது தமிழர்களின் வீறுகொண்ட போராட்டம்

உலக அளவில் தனித்துவத்தை இழந்து நிற்கும் இனங் களில் தமிழினமும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை ஜல்லிக்கட்டுக்கான போராட்டங்கள் நிரூபித்துள்ளன. முன்னதாக ஈழத்துப் போரில் ஒடுக் கப்பட்டமையும், காவிரி நீர்ப் பிரச்சினையும், ஜல் லிக் கட்டுத் தடைக்கு எதிராக வீறு கொண்டு எழச் செய்துள்ளது. குறிப்பாக இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளோ அல்லது பிரபலங்களின் பங் களிப்போ இல்லை. மாறாக முழுக்க முழுக்க உணர்வு பெற்ற தமிழரின் உரிமைக்குரல் ஒலிக்கவிடப்பட் டுள்ளது.

வழமையாக ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் எனும்போது கலவரம், சேதம், ஆக்ரோசம், ஆவேசம், மோதல்கள் என்பவை வெளிப்படும். ஆனால், மாநி லம் தழுவிய இந்த ஆர்ப்பாட்டத்தில் எந்த விதமான குற்றச் செயல்களும் பதிவு செய்யப்படவில்லை என் பதுதான் விநோதம். போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெறுவது ஒருபுறமிருக்க, மக்களை அடக்க அரசு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளை யும் மக்கள் தகர்த்துள்ளனர்.

மெரீனாக் கடற்கரையில் மக்கள்கூடி ஆர்ப்பாட்டம் நடத்திய போது இரவு வேளையில், மின்சாரம் துண் டிக்கப்பட்டது. ஆனால், மக்கள் தமது செல்லிடத் தொலைபேசிகளை ஒளிரவைத்து விடியவிடியப் போராட்டம் நடத்தினர். அரசின் மின்தடைக்கு இளைஞர்கள் ஆவேசமான எந்த முடிவையும் எடுக்க வில்லை என்பது தான் கவனிக்க வேண்டியதாகும். ஆர்ப்பாட்டத்தில், பெண்கள், குழந்தைகள், பெற் றோர்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டது பாராட்டுதலுக்குரியது.

முன்னர் காவிரிஆற்று நீரைத் தமிழகத்துக்குத் திறந்து விடுவது தொடர்பாக எந்த நியாயமான முடிவும் எட்டப்படவில்லை. இதன் விளைவாகத் தினமும் பல விவசாயிகள் உயிரிழந்தனர். சில வாரங்களில் சில நூறு எண் ணிக்கை என்ற அளவில் விவசாயிகளின் உயிரிழப்புகள் அதிகரித்தன. இதனால் மக்கள் மன தளவில் கொதித்துப் போயிருந்தனர். அனைத்துத் தரப்பின ருக்கும் கிடைக்க வேண்டிய இயற்கை வளங்களை ஒரு சில இனத்தவர்கள் தமது சுயலாபத் துக்காகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகவும் கவ லையை ஏற்படுத்தியது.

அதன் பின்னர் ஜல்லிக்கட்டு விவகாரத்திலும், தமி ழருக்கான தடம் அழிக்கப்படுவதை உணர்ந்த மக் களுக்கு வீடுகளில் முடங்கி இருக்க முடியவில்லை. மாநில அளவில் நடத்தப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களில் மக்களை ஒன்றிணைக்க எந்த அமைப்பும் செயற் படவில்லை. மக்கள் தாமாக முன்வந்து, ஒன்றி ணைந்து தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

ஆர்ப்பாட்டங்களில் அரசியல் கட்சிகளுக்கோ, தலை வர்களுக்கோ இடம் வழங்கப்படவில்லை. மக்களால் தேர்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் செயற்ப டத் தவறியதை அடுத்து, மக்களே களத்தில் இறங்கி இருப்பது இந்தியாவிலே இதுதான் முதல்முறை ஆகும். உலக வரலாற்றில் இது பதிவு செய்யப்பட் டுள்ள போராட்டம். இந்தியர்கள் அனைவருக்கும் தமிழர்கள் முன்னுதாரணமாக மாறியதுதான் சிறப்பு. விடியவிடிய நடைபெற்ற போராட்டங்களில் கலந்து கொண்ட பெண்களுக்கு ஆண்கள் பாதுகாப்பு வழங் கியது பனனாட்டுச் சமூகத்தைத் திரும்பிபார்க்க வைத்துள்ளது. ஜல்லிக்கட்டு என்பது, வீர விளை யாட்டுக்கான ஆர்ப் பாட்டம் மட்டும் அல்ல மாறாக தமி ழரின் உரிமையை ஊர றியவெளிக்கொணர்ந்த எழுச்சி.



# ஒவ்வொருவரின் உயர்வு தாழ்வுக்கும் சந்தர்ப்பங்களே முக்கிய காரணம்

அன்ரனி பீற்றர்

ஒவ்வொரு மனிதருடைய வாழ்விலும் அவர்களுடைய உயர்வையும் அல்லது சிறப்பையும் தாழ்வையும் அல்லது தோல்வியையும் ஏற்படுத்துகின்ற காரணிகளாகச் சந்தர்ப்பங்கள் அல்லது வாய்ப்புக்கள் முன்னிலைப் படுத்தப்படுகின்றன என்பதை ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இது உண்மை என்பதை எமது அனுபவத்தின் மூலமாக நாம் உணரமுடிகின்றது. சந்தர்ப்பங்கள் அல்லது வாய்ப்புக்கள் என்பது ஒவ்வொருவருக்கும் ஒரு முறை அல்லது இருமுறை தரப்படுகின்றன. அதனைச் சரியாகப் பயன்படுத்தும்போது உயர்வு அல்லது வெற்றி எம்மை ஆளுகின்றது. தவற விடும் பொழுது அல்லது பயன்படுத்தாது விடும்பொழுது தோல்வி அல்லது தாழ்வு நிலை எம்மை அலைக்கழிக்கின்றது. இதனைப் பலர் தவறவிடப்பட்ட பின்பே உணர்ந்து வருந்துகின்றார்கள். உயர்வு நிலையாது மேன்மேலும் உயர்வை ஏற்படுத்திக் கொண்டு செல்ல தாழ்வுநிலையானது பல பிரச்சினைகளுக்கு அவர்களை இட்டுச் சென்று தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

ஒரு விடயத்தை நாம் மேற்கொள்ளும் போது ஏற்படும் அனுபவமும் பல படிப்பினைகளை எமக்கு தருகின்றன. அடுத்து நாம் செய்யப் போகும் செயற்பாட்டைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கு எப்படியான ஆக்கபூர்வமான முறைகளைக் கையாள்வதன் மூலம் வெற்றியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதற்கு முதற் கிடைத்த சந்தர்ப்பத்தின் அனுபவங்கள் உதவுகின்றன. இதனாலே வெற்றியின் மூலம் மகிழ்வும் உற்சாகமும் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிக்கத் துணையாகின்றன. தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் விரக்தி நிலையைத் தோற்றுவித்து செயற் பாடுகளைச் சரியாகச் செய்ய முடியாத மனநிலையையும் அவர்களின் வாழ்வில் ஏற்படுத்தி விடுகின்றன. இதனாலே பலர் மனநிலை பாதிப்புக்கும் சென்று விடுகின்றனர்.

இளமையிலே கற்க வேண்டிய காலச் சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட பலர் வாழ்க்கையிலே வறுமையையும் இன்னல்களையும் சுமந்து கொண்டு மகிழ்வையும் நிம்மதியையும் இழந்தவர்களாக வாழ்வை இழந்து கொண்டிருக்கின்றார்கள். உரிய காலத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தியவர்கள் வறுமையிலும் செம்மையாக வாழ்வின் உயர்வை நோக்கித் தமது பயணத்தை மேற்கொள்கின்றார்கள். உலக நாடுகளின் தலைவர்களாக இருப்பவர்களும் விஞ்ஞான தொழில்நுட்ப வல்லுநர்களாக விளங்குபவர்களும் சாதாரண நிலையில் இருந்து வாய்ப்புக்களை உரிய வேளையில் சரியாகப் பயன்படுத்தியவர்களும் உயர்வை அடைந்து உலகில் கணிக்கப்படுகின்றவர்களாக வரலாற்றில் பொறிக்கப்படுகின்றார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் நாம் பெற்றுக் கொண்ட அனுபவமானது பட்டறிவாக எமது செயற்பாடுகளைச் சரியாகவும் இலகுவாகவும் விரைவாகவும் செய்து முடிக்க எமக்கு உதவுகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதற் கோணல் முற்றும் கோணல் என்று கூறுவார்கள். எந்தச் செயலையும் ஆரம்பத்திலேயே நாம் நேர்த்தியுடன் செய்யும் போது அதன் மூலம் எம்மிலே ஒரு புதுத்தெம்பு உருவாகின்றது. மற்றவர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புக்களை வெற்றியுடன் செய்து முடிக்கும் பிறிதொரு ஆற்றலையும் எம்மில் உருவாக்கி விடுகின்றது. தோற்றவர் எப்பொழுதும் தோற்பார் என்ற நியதி கிடையாது. மீண்டும் மீண்டும் முயற்சிக்கும்போது தோல்விகள் வெற்றியின் படிக் கற்களாகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அவ்வாறு முயற்சித்தவர்களே தம்முடைய கண்டுபிடிப்புக்களை உலகுக்கு வழங்கி மானிடம் போற்றும் மாமனிதர்களாகப் போற்றப்படுகின்றார்கள் என்பதை வரலாறு சான்றுரைக்கின்றது.

சந்தர்ப்பங்கள் வரும் என்று நாம் காத்துக் கொண்டிருந்தாலும் அது நம்மை வந்தடையாது. எம்முடைய ஆர்வம் முயற்சி தொடர் செயற்பாடுகள் சந்தர்ப்பங்களை எமதண்டை கொண்டு வரும். இப்படி யானவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் அவர்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களாகவே அமையும். மாறாக எம்முடைய சோம்பல் தனத்தால் வருகின்ற சந்தர்ப்பத்தைப் பார்ப்போம் என்றிருந்தால் நாம் பிரயாண வண்டியைத் தவறவிட்ட பயணி களாகவே நடந்து செல்ல வேண்டிய தோல்வி நிலைகளே உருவாகும். இந்த நிலைகள் மனநோய்வரை கொண்டு செல்கின்ற நிலைகளையும் சமூகத்திலே காண்கின்றோம்.

வென்று விட்டோம் என்பதற்காக நாம் தொடர்ந்து வெற்றியாளர்களுமல்ல. தோற்றுவிட்டோம் என்பதால் தோல்விதான் வாழ்க்கை என்றுமல்ல. எச்செயற்பாட்டையும் முழுக் கவனத்துடன் முழு முயற்சியுடன் சோர்வுகளில் பின்வாங்காது மனவுறுதியுடன் செய்வோமாக இருந்தால் தோல்வி என்பதில்லை. வெற்றிப் பவனியே செல்வோம்.

குடும்ப உறுப்பினர்கள் அலுவலக, நண்பர்கள் தொழிற்சாலைப் பணியாளர்கள் இப்படி ஒவ்வொரு நிலையிலும் உள்ளவர்களும் ஒன்றுபட்டுப் பற்றுறுதியுடன்- விடாமுயற்சியுடன் தொடர் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போது முன்னேற்றம் வெற்றி இலாபம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

மேன்மேலும் அறிவை, ஆற்றலை அனுபவங்களைப் பெறுகின்றபோது சந்தர்ப்பங்களை நீங்கள் தேடத் தேவையில்லை. சந்தர்ப்பங்கள் உங்களை நாடி வரும். கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயனற்றவைகளாக ஆக்கிவிடாமல் எமக்கும் எம் சமூகத்துக்கும் வெற்றியும் உயர்வும் முன்னேற்றமும் அளிக்கின்றவைகளாக ஆக்கிக்கொள்வது எம் ஒவ்வொருவரின் கைகளிலும் தங்கியுள்ளது என்பதை உணர்ந்து செயற்படும் போது ஒருமையில் பன்மையும் பன்மையால் நன்மையும் உருவாகும் காலத்தைப் பயனுள்ள சந்தர்ப்பங்களாக மாற்றுவோம். காத்திருந்து காலத்தை அவப்பொழுதாக்காது தவப்பொழுதாக உயர்வாக்குவோம்.

*கட்டுரையாளர்: ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.*

> தவற விடப்பட்ட சந்தர்ப்பங்கள் விரக்தி நிலையைத் தோற்றுவித்து செயற்பாடுகளைச் சரியாகச் செய்ய முடியாத மன நிலையை அவர்களின் வாழ்வில் ஏற்படுத்தி விடுகின்றன. இதனால் பலர் மனநிலைப் பாதிப்புக்கும் ஆளாகி விடுகின்றனர்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:** பொது நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.


**இடபம்:** மனதில் இருந்த தயக்கம் விலகும். பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.


**மிதுனம்:** உறவினர் மத்தியில் நன்மதிப்பு பெறுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். அரச வகையில் அனுகூலம் கிடைக்கும்.


**கடகம்:** குடும்பத்தினரிடம் கருத்துவேறுபாடு ஏற்படலாம். முக்கிய பணிகளை தாமதமின்றி நிறைவேற்றவும். தொழில் வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பெண்களுக்கு செலவில் சிக்கனம் தேவை.


**சிங்கம்:** உங்களின் யதார்த்த பேச்சு சிலரை சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். சொத்தின் பேரில் கடன் வாங்க நேரிடலாம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.


**கன்னி:** உறவினர்களுக்கு இயன்ற உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமையைத் திறம்பட சமாளிப்பர். மாணவர்கள் கல்வி வளர்ச்சி பெறுவர்.


**துலாம்:** காலத்தின் அருமை உணர்ந்து பணியாற்றுவீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் திடீர் வருமானம் வரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.


**விருச்சிகம்:** மனச்சாட்சிக்கு மதிப்பளித்து நடப்பீர்கள். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். வாகனப் பயணம் இனிய அனுபவம் அளிக்கும்.


**தனுசு:** வெளிப்படையாகப் பேசுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.


**மகரம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.


**கும்பம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழிலில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத்துடன் விருந்து வைபவத்தில் பங்கேற்பீர்கள்.


**மீனம்:** நண்பரிடம் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். வருமானம் சீராக இருக்கும். பிள்ளைகளை வழிநடத்துவதில் இதமான அணுகுமுறை நல்லது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 7 | | | | | 2 | |
| | | | 9 | | | | | |
| | 2 | | | | | | 6 | |
| | | | 8 | | | | 4 | 1 |
| 1 | 7 | | 3 | | | | | 2 |
| 8 | | | 5 | | 2 | | | 9 |
| | | | | | | 1 | 8 | 6 |
| | | | | | 9 | | | |
| 5 | | 8 | 2 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# ரகுமான் இசையில் மீண்டும் காட்டுச் சிறுக்கி.... பாடல்

மணிரத்னம் இயக்கத்தில் தமிழ் மற்றும் ஹிந்தி மொழிகளில் 2010-ஆம் ஆண்டு 'ராவணன்' படம் வெளியானது. ஏ. ஆர். ரகுமான் இப்படத்துக்கு இசையமைத்துள்ளார். இத்திரைப்படம் ஒரே நேரத்தில் தமிழிலும், ராவன் என்ற பெயரில் ஹிந்தியிலும் வெளியிடப்பட்டது. இந்த படத்தில் இடம்பெற்ற 'காட்டுச் சிறுக்கி' என்ற பாடல், ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்த நிலையில் 'எம்.டிவி அன்பிளக்டு' என்ற நிகழ்ச்சிக்காக இந்தப் பாடலை மறு உருவாக்கம் செய்துள்ள ஏ.ஆர்.ரகுமான். அந்தப் பாடலில் ஸ்ருதி ஹாசனைப் பாட வைத்துள்ளார். தமிழில் காட்டுச் சிறுக்கி எனத் தொடங்கும் இந்தப் பாடல், ஹிந்தியில் 'ரான்ஜா..ரான்ஜா' எனத் தொடங்கும். ஹிந்தி பாடலைத்தான் ஸ்ருதி ஹாசன் பாடியுள்ளார்.

அவசரமாகத் தவறு செய்வதை விட தாமதமாகச் சரிவர செய்வது மேல்

WhatsApp

வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் துன்பங்கள் இருந்தாலும், ஒவ்வொரு சின்னச் சின்ன சந்தோசங்களையும் ரசிக்க தெரிந்தவனே, வாழ்க்கையை வாழத் தெரிந்தவன்....














# எள் துவையல்

## தேவையான பொருள்கள்

கறுப்பு எள் - அரை கப்
பூண்டு - 2 பல்
காய்ந்த மிளகாய் - 5
தேங்காய் துருவல் - 3 மேசைக்கரண்டி
கறிவேப்பிலை - ஒரு கீற்று
புளி - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

## செய்முறை

சட்டியைச் சூடாக்கி எள்ளை வறுத்துக் கொள்ளவும். உப்பு தவிர மற்ற பொருள்களையும் சட்டியில் தனித்தனியாக வறுத்து கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து உப்பு, புளி சேர்த்து சிறிதளவு தண்ணீர் விட்டு கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். தேவைப்பட்டால் சிறிது எண்ணெய், கடுகு போட்டு தாளித்துக் கொள்ளலாம். எள்ளில் அதிக அளவு இரும்புச்சத்து உள்ளது.

# குடும்பப் பிரச்சினைகளை கையாள உதவும் சில வழிமுறைகள்

வாழ்க்கையை ரசிக்கத் தெரியாத சிலர், தங்கள் வாழ்க்கையைப் பிரச்சினைகள் மிகுந்ததாக மாற்றிக்கொள்கிறார்கள். பிரச்சினைகள் அதிகம் இல்லாத குடும்ப வாழ்க்கைதான் இதயத் தில் ஏற்படும் விரிசல்களை விலக்கும்.

எந்தச் சூழ்நிலையில், எப்படிப்பட்ட பிரச்சினை கள் ஒரு குடும்பத்தில் உருவாகும்? என்று யாரும் முன்கூட்டியே குறிப்பிட்டு கணித்துச் சொல்ல இயலாது. கண் இமைக்கும் நேரத்தில், கருக் கொண்ட சில பிரச்சினைகள் வாழ்க்கையில் மையம்கொண்டு, புயலாக மாறி சிலர் வாழ்க் கையைச் சீரழித்துவிடுகின்றன. எனவே, குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகாமல் தவிர்க்கவும், உருவான பிரச்சினைகளை முறையாகக் கையாளவும் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

வாழ்க்கையில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை களைக் கையாள உதவும் சில வழிமுறைகள்:

1. உங்கள் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை கள் எவை என்பதை முதலில் அடையாளம் கண்டு கொள்ளுங்கள். பின்னர், உடல்நலம், நிதி, உறவு, நட்பு, கல்வி, வேலை என வெவ்வேறு தலைப்புகளின்கீழ் அந்தப் பிரச்சினைகளை வகைப்படுத்துங்கள். உங்கள் பிரச்சினை எந்த வகையோடு தொடர்புள்ளது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டால், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது எளிதாகும்.
2. நீங்கள் மிகவும் பதற்றமாக இருக்கும்போது உங்கள் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சி செய்யாதீர்கள். கட்டுப்பாடற்ற உணர் வுகளின் பிடியில் சிக்கி, நீங்கள் தவிக் கும்போது பிரச்சினைக்குச் சரியான தீர் வைக் காண முடியாது. ஏனென்றால், உங் களின் வலி மிகுந்த உணர்வுகள் உங் களுக்கு சிறந்த தீர்வைத் தர அனுமதிக்கா.
3. உங்கள் குடும்ப உறுப்பினர்கள் தவறு செய்யும் போது அதனை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், குடும்ப உறுப்பினர்கள் உங்களின் குருதியோடு கலந்த உறவுகள். இந்த உறவுகளை வாழ்க்கையில் தவிர்க்க முடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.
4. நீங்கள் பிரச்சினைகளில் சிக்கியிருக்கும் போது கோபத்தோடு பேசாதீர்கள். மேலும், மரியாதை இல்லாமல் மற்றவர்களைத் திட்டு வதையும், தரக் குறைவானவார்த்தைகளைப்பயன்படுத்துவதையும் தவிர்த்து விடுங்கள்.
5. உங்கள் குடும்ப உறுப்பினர்களோடு பேசு வதையும், கலந்துரையாடுவதையும் எந்தச் சூழலிலும் முற்றிலும் நிறுத்திக்கொள்ளா தீர்கள். ஒருவரோடு மற்றவர் கொண்டுள்ள தகவல் தொடர்பு முற்றிலும் தடைப்பட்டால், உறவுப்பாலம் உடைந்துவிடும். எனவே, வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் மற்றவர்களோடு மனம்விட்டுப் பேசுவதற்கு முயற்சி செய்யுங்கள்.
6. உங்கள் குடும்பத்தில் எந்தப் பிரச்சினை ஏற்பட்டாலும், சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்தித்து உங்கள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது நல்லது. இதற்கு மாறாக, கடிதம் எழுதுவதும், இமெயில் அனுப்புவதும், எஸ்.எம்.எஸ். மூலம் தொடர்பு கொள்வதும், உணர்வுபூர்வமான தகவல்களைப் பரிமாற இயலாத நிலையை உருவாக்கி விடும்.
7. பிரச்சினைக்குரியவர்களிடம் நேரில் மனம்விட்டுப் பேசுவதைத் தவிர்த்து விட்டு, இன்னொருவர் மூலம் தூது அனுப்புவதும் சில நேரங்களில் மிகப்பெரிய பிரச்சினைகளை உருவாக்கிவிடும். உங்கள் பிரதிநிதியாகப் பேசுபவர் சிலவேளைகளில் உங்கள் உணர்வுகளைத் தெளிவாகத் தெரிவிக்கத் தவறிவிட்டால், ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தி விடும் அல்லவா?
8. குடும்பத்தோடு இணைந்து முடிவெடுக்கப் பழகுங்கள். எந்தவொரு பெரிய பிரச்சினையாக இருந்தாலும், குடும்ப உறுப்பினர்களோடு இணைந்து கலந்து பேசி, முடிவுக்கு வரும்போது அந்த முடிவு சிறந்ததாக அமையும்.
9. குடும்ப உறுப்பினர்களில் சிலர் பிரச்சினைக்குரியவர்களாக இருந்தால், அவர்களோடு பேசுவதற்கும், அவர்களிடம் கொண்டுள்ள உறவுக்கும் ஒரு எல்லையை வகுத்துக் கொண்டு அதன்படி செயற்படுவது நல்லது.
10. சில குடும்பப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண இயலாது. அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான அளவு நேரம் எடுத்துக் கொள்வது நல்லது. அவசர அவசரமாக நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்க்க முயலும்போது சில எதிர்பாராத விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புக் கள் உள்ளன.



# பனங்குற்றியால் உருவான சிற்றுரல்கள்




பனங்குற்றியால் உருவான சிற்றுரல்கள் அறிமுகமாகியுள்ளன. முழுக்க முழுக்க பனை மரத்தில் செதுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றை அலங்காரப் பொருள்களாகவும், சமையலறை உரல்களாகவும் பயன்படுத்தலாம். இவை 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# தலையலங்காரம்

படம் 1,2 இல் காட்டப்பட்டவாறு தலையை போனி ரெய்ல் கட்டி, ஷூல் பாண்டை கீழே இறக்கிக் கொள்ளவும்

படம் 3,4,5,6 இல் காட்டியதைப் போன்று இரண்டாகப் பிரித்து, அடிப்பகுதியை உள்ளாகத் திருப்பி தொடர்ச்சியாக நன்கு முறுக்கிக் கொள்க. மேலும் முறுக்குகையில் சிறிய சிறிய சுருள்கள் உருவாகும்.

படம்7இல் காட்டியவாறு சிறிய சுருள் களை அமைவிடப்படுத்தி கிளிப் செய்க.

படம் 8 இல் காட்டப்பட்டவாறு பின்னர் கீழாக உள்ள அடிமுடியை அழுத்தி வைத்து கிளிப் செய்து அலங் காரத்தை நிறைவு செய்க.



# உயிர்த்தெழும் செடி!

உயிர்த்தெழும் செடி என்று ஒரு தாவரம் இருக்கிறது. சீரோ பைட்டா விஸ்கோசா (Xerophyta viscosa) என்பது இதன் அறிவியல் பெயர்.

இவை 95 சதவீதம் காய்ந்துபோன பிறகும்கூட சிறிதளவு நீர் ஆகாரம் தரும் போது மறுபடியும் பிழைத்துக் கொள்ளும். காய்ந்து போனாலும் உயிரைத் தாக்குபிடிக்கும் தன்மை கொண்டது. இதன் மரபணுக்கள் எவை என்பதைக் கண்டுபிடித்து அதனை நெல்லுக்கும் இதர பயிர்களுக்கும் வழங்கினால் நன்செய் பயிர்களை புன்செய் பயிர்களாக வறண்ட பூமியில் வளரச் செய்ய முடியுமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆனாலும் இவற்றின் மரபணுக்கள் மாற்று ஆய்வுகளில் பெரும்பகுதியாகவும் தனியார் ஆய்வுக்கூடங்களின் அறிவு சார் சொத்தாகவும் இருப்பதால் உண்மையான பசுமைப் புரட்சியைத் தருமா என்பது தொடர்பில் ஆய்வுகள் இடம் பெற்று வருவதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா நாகமணி

(ஓய்வுபெற்ற உடற்பயிற்சி உதவிக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி)



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தைய நாகமணி 21.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்து மாணிக்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சர்வேஸ் வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வாசுதேவன் (கனடா) மற்றும் ஜெயந்தி (கனடா), ஸ்ரீபாஸ்கரன் (இந்தியா), இராஜ்குமார் (ஜேர்மனி), சுகந்தி (ஆசிரியை, யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற நவக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகாம்பிகை, பாலசுந்தரம், உமா, சூரியகலா, அனுஜெயன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சனஜன், யாழினி, ஜெயந்திரா, ஷர்மி, ஸ்ரீலோகா ஷாளினி, விசால், தனுஷன், தீப்தனன், ஆர்த்திகன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, ஆறுமுகம், கதிரித்தம்பி, செல்ல்ம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜசிங்கம், தயாபரசிங்கம், பராபரசிங்கம், பரயோகசிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (25.01.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

" ஈஸ்வரி வாசம்"
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 224 0058**

## நன்றி நவிலல்



### அமரர் வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் - அரச கரும மொழிகள் திணைக்களம்)


தோற்றம்
07.05.1932

மறைவு
22.12.2016

அவர்களின் மரணச்சடங்கிலும் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெறாமகன் - Dr.செல்லத்துரை பரமசிவம்பிள்ளை D.A.M.Cey
(அரச ஓய்வு சித்த வைத்திய அலுவலர்- அராலி வடக்கு, வட்டுக்கோட்டை),
திரு.அ.சரவணபவன் (வட்டுக்கோட்டை)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி சாதனா செந்தில்குமரன்
அவர்களின் அன்புத் தந்தை


### நல்லையா லோகேஸ்வரன்

அவர்கள் 20.01.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்,
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
11 . 04 . 1947



இறப்பு
22 . 01 . 2017

### சின்னையா துரைராசா

நெடுங்கேணி, கோர மோட்டையைப் பிறப்பிடமாகவும், நெடுங்கேணி, மருதோடையை வதிவிடமாகவும் தற்போதைய முகவரியாக மருக்காரப்பனை வீதி, வவுனியாவை வதிவிடமாக வும் கொண்ட சின்னையா துரைராசா 22.01.2017 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், சிவசிதம்பரம் - கனகம்மா தம்பதிகளின் மருமகனும், கனகாம்பிகையின் அன்புக் கணவரும், தனேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற குகனேஸ்வரன், தனரூபி, பிரகாஸ் ( தபாலதிபர் - நெடுங்கேணி மருதோடை), நிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரி (லண்டன்), சயிலினி, சாரங்கி, முகுந்தன் ஆகியோரின் மாமனாரும், லிதுசன், சானுகன், திவாகரி, குலவிழி, அக்சயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் மருதோடை நெடுங்கேணியில் உள்ள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(00384)
(11,17)

தகவல்: **குடும்பத்தினர்.**

**077 935 5624**

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
21 . 02 . 1953



உதிர்வு
24 . 01 . 2012

### அமரர் கனகசபை விஜயரெத்தினம் (ஞானம்)

(உரிமையாளர் - ஞானம் பெயின்ற், கண்ணன் பெயின்ற்)

அன்போடும் பாசத்தோடும் அரவணைத்த எங்கள் அன்பு அப்பாவே
ஆண்டுகள் நீளலாம் - ஆனால் உங்கள் நினைவுகள் நீங்காது
எம் உயிராக இருந்து - எங்கள் உணர்வுகளோடு கலந்த
எங்கள் அப்பாவே உங்கள் கனவெல்லாம் நனவாகி வரும் வேளையில்
கணப்பொழுதில் கண்மூடி மறைந்து சென்றதன்
மாயம் புரியாமல் - தவிக்கின்றோம்
நாங்கள் வாழும் நாள் வரைக்கும் - நீங்கள்
நிறைவாக எம் நெஞ்சில் - நின்று நிலைப்பீர்கள் அப்பா
உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

விஜய் மகால்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(j/7000)
(12,17)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

## 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
26 . 04 . 1926



விண்ணில்
19 . 01 . 1993

### அமரர் இ.ச.பேரம்பலம் (E.S.P)

(வாரிவளவு, காரைநகர்)

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய் இனிய அறிவுரைகள் கூறி
ஈட்டிய வணிகத்தில் வழிகள் பலகாட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்
எண்ணரிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர் எம்மையெல்லாம்
ஐயுறவு ஏதுமின்றி எவ்வாழ்வு மலர்ந்திட

ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதற்கரிய கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும் இனிதே தந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்த
தெய்வமே எங்கள் அன்புத் தந்தையே
எம்மைவிட்டு விண்ணுலகம் சென்று
ஆண்டுகள் இருபத்துநான்கு வந்து போனாலும்
மறக்குமா எம் நெஞ்சம்
என்றென்றும் உம் நினைவில் வாழும்

'மணிஓசை',
383, கோயில் வீதி,
நல்லூர்.

E.S.P. நாகரத்தினம்
சகநிறுவனம்,
521, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# 8வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

## JAFFNA INTERNATIONAL TRADE FAIR 2017

JITF 2017

27 28 29
ஜனவரி JANUARY
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Grounds - Jaffna

கல்வி 2017
Special Education Pavilion

jitf.lk www.jitf.lk

முழுக் குடும்பத்திற்குமான ஒட்டுமொத்த தீர்வு




ORGANIZED BY LECS · IN ASSOCIATION WITH · CO-SPONSOR S-lon · SUPPORTED BY · ENDORSED BY · PARTNER COUNTRY

OFFICIAL PARTNERS


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
02.11.1950

உதிர்வு
17.01.2016

## அமரர் யோகலட்சுமி இராசரத்தினம்

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே....
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே அம்மா...
அதிகாலையில் எழுந்ததும் நின் முகமும் உன்குரலும் தேடும்
எம்மைவிட்டு கணப்பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ அம்மா....
மாதம் பன்னிரண்டாகித் தவிக்கின்றோம் உங்களைப்பிரிந்து அம்மா
பிள்ளைகள்தான் உலகம் என்று அன்பை பொழிந்தீரே அம்மா...
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில் அம்மா....

**எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

கேணிக்கரை வீதி,
அளவெட்டி.

குடும்பத்தினர்.
இராசரத்தினம் (கட்டையப்பா)


ESOFT SCHOOL OF BUSINESS

REGISTRATIONS NOW OPEN

LEARN HOW TO MANAGE
PEOPLE FOR
SUCESS!

PEARSON BTEC
HND
- Business Management
- Accounting & Finance
- Marketing
- Human Resource Management

Durations: 18 months
Equivalent to the 1st & 2nd Year of a UK Honours Degree
TVEC APPROVED

NEW INTAKE February
FREE
for all Registrations

Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY
Leading to the Final Year of a UK Degree
BA (Hons) in Business Administration

Pearson Annual Awards 2015 GOLD PARTNER
UGC APPROVED
CALL : 021 7 572 572 | 077111 9367

The Highly Qualified and experienced lecture panel ensure that students have the right kind of practical knowledge and exposure to back their book learning.

ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 Hotline : 077 309 9 308
Shaping Lives, Creating Futures.
Sri Lanka's Largest Private Sector Higher Education Network

# CAREER GUIDANCE WEEK

## 23rd - 29th Jan

8.00am - 6.00pm Daily

Visit our Campus for
FREE CAREER GUIDANCE & Counselling

Attractive Offers for Registration

FREE Counselling

- Information Technology
- Software Engineering
- Computer Networking
- Business Administration
- Marketing / Accounting & Finance
- Hospitality Management
- Travel & Tourism Management
- Civil Engineering
- Mechanical Engineering
- Electrical & Electronic Engineering
- Quantity Surveying

SUBJECTS STREAMS & DEGREES WE OFFER

0217 572 572

ESOFT METRO CAMPUS
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 Hotline : 077 309 9 308
Shaping Lives, Creating Futures.
Sri Lanka's Largest Private Sector Higher Education Network

# ஊர்வன.!

ஊர்வன என்பவை தரையோடு தரையாக ஊர்ந்து செல்லும் பிராணிகள் எனப்படுகிறது

ஊர்வனவற்றின் சிறப்புக் குணங்கள் அற்புதமானவை.

1. முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தல்
2. முதுகெலும்புள்ள பிராணிகள்
3. கால்களில் கொக்கிபோன்ற உகிர்களைக் கொண்ட விரல்கள் என அவை இயல் பூக்கங்களை கொண்ட மைந்துள்ளன.

பறவைகளும் கால்களில் கொக்கிபோன்ற உகிர்களைக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே பறவை அல்லாத ஊர்ந்து செல்லும் உயிர்களை ஊர்வன என்று நாம் வகைப் படுத்தலாம். எறும்பு, தேள், பூரான், பூச்சிகள், சிலந்தி போன்றவற்றிற்கு முதுகெலும்பு இல்லை. எனவே ஊர்வன என்று இப்பிராணி களைக் நாம் கூற இயலாது.

சிறுவர்கள் எப்போதும் வேலிகள், புதர்களில் காணப்படும் ஓணான்களை எந்தவித கார ணமும் இன்றி அடித்துக் கொன்று விடுகின்றனர். ஓணான்கள் நமக்கு எந்தத் தீங்கும் செய்வதில்லை. மாறாக எப்போதும் அவை நமக்கு நன்மையே செய்கின்றன. பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அவை இரையாக உண்ணுகின்றன.

இதேபோன்று பாம் பைக் கண்டால் அடித் துக் கொல்லும் மானிடர்கள் எம் மத்தியில் இருக் கின்றனர். இவர்களுள் பயந்து ஓடும் மானிடர் களும் அடக்கம். பாம்புகள் மனிதர்களுக்கு எந்த விதத்திலும்தீங்கிழைப்பதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளத் தவறுகிறோம். பாம்பு கழத்து சிலர் இறந்திருக்கலாம். இருந்தும் அவை தனக்கு ஆபத்து என்று உணரும்போது மட்டுமே கடிக்கின்றன. மனி தர்களைத் தேடி வந்து எந்த பாம்பும் கடிப்பதில்லை. புரிந்து கொள்ள வேண்டும்!

**வேலையாள் தேவை**

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன் அனுபவமுள்ள எரிபொருள் நிரப்புநர் தேவை.
தொடர்பு - 077 057 1258

**தேவை**

விருந்தினர் விடுதி ஒன்றிற்கு
- சமையலாளர் - ஆண்
- சமையல் உதவியாளர் - (பெண்கள்/ ஆண்கள்)
- பராமரிப்பாளர் (ஆண் - Room boy)

போன்றவர்கள் தேவை.
தங்கிவேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.
இல. 19, சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 076 769 3776, 021 222 7839

**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல நகைவியாபார நிலையத்திற்கு, நகை வியாபாரத்தில் அனுபவமுள்ள மற்றும் பழகவிரும்புவர்களும் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு - 077 133 2206

**Tamil/ English Chemistry Personal Classes**

Basic, inorganic, Organic, Physical,
கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey)
M.SC (cey) Chemistry கற்பிக்கப்படும்.
075 046 0555

**2017 இல் புதியதோர் உதயமாக்க உங்கள் ஆசைகள்**

Money House

**Vacancy**

க.பொ.த சாதாரண தரம் போதுமானது.
அனுபவம் அவசியமில்லை.
பயிற்சியுடன் நிரந்தர தொழில் வாய்ப்பு வழங்கப்படும்.
பயிற்சியின் போது
14,000/= - 20,000/=
பின்னர்
65,000/=
அழையுங்கள் :
077 999 4807,
076 756 5659

Vehicle Family

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 46
சீட்டிழுப்பு திகதி 2017.01.23
வெற்றி இலக்கங்கள்
13 17 36
இல்லாத இலட்சாதிபதிகள் 12
வழங்கப்பட்ட மொத்த பரிசு 2,677,700/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1334
சீட்டிழுப்பு திகதி 2017.01.23
வெற்றி இலக்கங்கள்
37 52 53 56 B
ரூ. 16,361,270/-

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி பூமணி பேரானந்தம்

எமது கிராம சமயவளர்ச்சிக்காக சைவத் திருப்பணிச் சபையை உருவாக்கியவர்களில் ஒருவரும். எம் ஆலயவளர்ச்சிக்கு உத்வேகம் அளித்தவருமாகிய அமரர் **பேரானந்தம்** அவர்களின் துணைவியும் எம் ஆலயவளர்சிக்கு இன்று வரை உத்வேகம் தரும் **பேரானந்தம் அருளானந்தம்** குடும்பத்தாருக்கும் பிரிவால் துயருறும் உறவு களுக்கும் எம் இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

ஞானசெல்வவிநாயகர்
தேவஸ்தான பரிபாலன சபை
பிரதம அட்சகர்,அடியார்கள்.

## ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை

ஆங்கிலப் பேச்சு திறன் விருத்தி (Spoken English) தொடர்பான ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை எதிர்வரும் 29.01.2017 காலை 8.30 மணியிலிருந்து 3.00 மணி வரை இல.04, 22 ஆவது, ஒழுங்கை, கொழும்பு-3, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இலங்கை ஜப்பானிய கலாசார நினைவு நிலையமான சசகாவாவில்-கல்ஸ்டா (CALSDA) நிறுவனத்தினால் நடத்தப்படும். ஆசிரியர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தும்படி ஊக்குவிக்கப் படுகின்றார்கள். மதிய உணவு வழங்கப்படும்.பயிற்சிக்கட்டணமாக 1000/= அறவிடப்படும்.

**பதிவுகளை மேற்கொள்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 011 205 5088,தொலை நகல் இலக்கம்: 011 205 5087,மின்னஞ்சல் முகவரி : calsda.info@gmail.com**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**

**கலைமாணித் தேர்வு பகுதி - II - 2012 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 06.02.2017(திங்கட்கிழமை) தொடக்கம் 20.02.2017 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 01.02.2017(புதன்கிழமை) தொடக்கம் 03.02.2017(வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்.**
**23.01.2017**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
22
02
1945

ஆண்டவன் அடியில்
25
12
2016

### அமரர் புலேந்திரலிங்கம் சின்னத்தங்கம்

அன்பைப் பொழிந்து வளர்த்தெடுத்த எம் தாயே!
கதியிழந்து கலங்கித் தவிக்கின்றோம்
நீர் வாழ்ந்த உம் மனை இன்று செயலிழந்து சென்றதம்மா
உதிர்ந்த மலர்களாய் நாற்திசையிலும் – உம்
குழந்தைகள் தவிக்குதம்மா
கலங்கி நிற்கும் எமக்கு ஆறுதல் சொல யாருளர்?

கடந்த 25.12.2016 இறைபதம் அடைந்த எம் குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.01.2017) செவ்வாய்க் கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும் தொலைபேசியூடாகவும் இரங்கல் செய்தி, இரங்கலுரை, அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று இடம்பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முதலாம் மைல் வீதி,**
**மடத்தடி, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபையில் தொழில் முயற்சி ஊக்குவிப்பு முகாமையாளராக கடமையாற்றும் **திரு.தியாகராஜா தனம்** அவர்களின் அன்புத்தாயார்


### திருமதி நாகேஸ்வரி தியாகராஜா

அவர்கள் 19.01.2017 ஆம் திகதி இறைபதம் அடைந்தையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். மாவட்டச்செயலக நலன்புரிகழகம்.**

## மரண அறிவித்தல்

### சின்னையா மார்க்கண்டு



மட்டுவில்நாடு, பூநகரியைப் பிறப்பிடமாகவும் இணுவில் வீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மார்க்கண்டு நேற்று (23.01.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சீனிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் கிருபாகரன், சிவகுமாரன், சுபத்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் சகுந்தலாதேவி, மஞ்சுளா, ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமனும் வாகீஸ், ஆகாஷ், டிலாஸ், நிசாளினி, டயாளினி, சிவாஜினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் வீதி,**
**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியபாமா பாலசுப்ரமணியம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா பாலசுப்ரமணியம் நேற்று(23.01.2017)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான பாலசுப்ரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சீனிவாசம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசதுரை-மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியசீலன், சத்தியகலா, சத்திய காந்தன் மற்றும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருந்ததி, மௌலீஸ் வரன், கதிவாணி ஆகியோரின் மாமியாரும் வைஷ்ணவி, கஜராம், லட்சாயினி, சங்கீர்த், விதுர்ஜிகன், ஹரிணி, ஹரிசா, ஹம்சத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் செல்வராசா, சாவித்திரிதேவி, யோகம்மா, இராஜவரோதயம், சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிரிசாளினி, சிவபாதசுந்தரம், மகேந்திரலிங்கம், ரஞ்சிதபூபதி, சத்தியவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.01.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: (மகன்மார்)**
**பா. சத்தியசீலன்**
**பா. சத்தியகாந்தன் (யுனிக் வீடியோ கொம்பிளக்ஷ்)**
**077 652 3229, 077 947 9150**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## நிறைவேற்ற...

சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் திடமாக உறுதியளித்துள்ளனர்.

சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும், கூட்டு அரசின் அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

'நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படக்கூடாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானம் நிறைவேற்றவில்லை. அடுத்த அரச தலைவர் தேர்தல் நடைபெற்றால் அதில் மைத்திரியே போட்டியிடுவார் என்றுதான் தீர்மானம் நிறைவேற்றினோம்' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

அமைச்சர்களான ராஜித, மங்கள ஆகியோர் கருத்துத் தெரிவிக்கும்போதும், நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றார். நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்கு மைத்திரிபால நடவடிக்கை எடுப்பார் என்று அமைச்சர்கள் திடமான உறுதிமொழியைச் சிங்கள சிவில் சமூகத் தலைவர்களுக்கு வழங்கியுள்ளார். (த-5)

## ஜல்லிக்கட்டு...

மாலை 5 மணிக்கு நிரந்தரச் சட்டம் இயற்றுவது தொடர்பான அவசரக் கூட்டம் இடம்பெற்றது. சட்டத்தை இயற்றுவதற்கான சட்ட முன்வரைவை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். அது தொடர்பிலான விளக்கங்களும் வழங்கினார். இந்தச் சட்ட முன்வரைவுக்குப் பெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் வரவேற்றுப் பேசினார். எதிர்ப்புக்கள் இல்லாமல் ஏக ஆதரவுடன் ஒருமனதாக நிரந்தரச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. (ம)

## வடக்கில்...

விடயம் வடக்கு மாகாணத்துக்கு நேற்று முதன் முறையாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

அறிமுக நிகழ்வு, யாழ். பொது நூலகத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில்பதிவைக்கொண்ட வாகனங்கள், எந்தப் பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அந்தப் பிரதேச செயலகத்துக்குச் சென்றே இதுவரை காலமும் வாகன வரி அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய தேவை இருந்தது. இணையத்தின் ஊடான சேவை அறிமு கப் படுத்த ப்பட்டுள்ளதால், நாட்டின் எந்தப் பிரதேசத்திலிருந்தும் வரி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

www.gov.lk என்ற இணையத் தளத்தினுள் பிரவேசித்து, இணையத்தின்மேல் மூலையில் உள்ள தேடு பொறியினுள், revenue என்று ரைப் செய்ய வேண்டும். Revenue Licence (new/renewal) தெரிவு செய்யவேண்டும். அதன் பின்னர் மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்து உள்ளே சென்று, வடக்கு மாகாணத்தைத் தெரிவு செய்யவேண்டும். வாகன இலக்கம், செசி இலக்கம் போன்ற தகவல்களை வழங்கி இந்தச் சேவைக்குள் பிரவேசிக்கவேண்டும். இணையத்தினுள் காட்டப்படும் வழிகாட்டலைப் பின்பற்றி வரி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அறிமுக நிகழ்வில் முதலாவது வரி அனுமதிப் பத்திரம் அமைச்சர் பா.டெனீஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டது. (த-5-ரி)

## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் பணியாற்றும்
திருமதி கிருஷ்ணவேணி லிங்கரூபனின்
பாசமிகு தாயார்
**பாக்கியராஜா சந்திரமணி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதம பொறியியலாளர், மின்பொறியியலாளர்கள் மற்றும் ஊழியர்கள்.
இலங்கை மின்சாரசபை - வாணிபம்
பழைய பூங்காவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## துயர் பகிரலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



எமது பாடசாலையில் கடமையாற்றும்
திருமதி திருச்செல்வி ஸ்ரீவிஜயன்
அவர்களின் தந்தையார்
**நல்லதம்பி கணேசபிள்ளை**
அவர்கள் கடந்த 25.12.2016 ஞாயிற்றுக்கிழமையன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயம்.
(J/260)
(11,17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16 . 10 . 1950



உதிர்வு
24 . 01 . 2016


அமரர்
**எஸ்தாக்கி அலன்டே (பயஸ்)**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (25.01.2017) புதன் கிழமை காலை 5.45 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இல. 486/1, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
(J/7897)
(22,17,18)
இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் இரத்தினசிங்கம்
**வினோதரன்**
மண்ணில்
17.08.1985
விண்ணில்
28.10.2016



கடந்த 28.10.2016 அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகன் இரத்தினசிங்கம் வினோதரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.01.2017) புதன்கிழமை காலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தியானது கீரிமலை புனித தீர்த்தக் கேணியில் கரைக்கப்படும். அத்தருணம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசன நிழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

அயிட்டியபுலம், கொற்றாவத்தை.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திருமதி இந்திராணி ஜீவேந்திரா அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி கமலாம்பிகை முத்துச்சாமி**
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 . 08 . 1947



மறைவு
05 . 02 . 2016

**அமரர் கார்த்திகேசு சோதிலிங்கம்**
திதி: துவாதசி

வளர்த்தெடுத்து அறிவூட்டி ஆளாக்கி வைத்துவிட்டு
அவசரமாய் ஏன் அப்பா அவனிவிட்டு சென்றீர்கள்
ஆண்டொன்று என்ன ஆயிரம்தான்
கடந்தாலும் ஆறாது எம் இதயம்

போத்தலை, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
(J/255)
(12,17)
என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
021 205 9255

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
02 . 01 . 1942



இறப்பு
25 . 12 . 2016

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட
**மார்க்கண்டு (சோமு) பூரணம்**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.01.2017) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் அமரத்துவம் அடைந்த நேரம் சகலவழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் தேவையான உதவிகளைச் சேவையாக வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

அரசடிவீதி,
சுதுமலை - கிழக்கு,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.
(நாகேசு, மகேந்திரன், ரவி, வட்டன்)
077 899 9978

## கலவர...

களிலும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள்மீது பொலிஸார் தடியடி நடத்தியதால் மெரீனா கடற்கரை நேற்று மாலை வரை கலவர பூமியாகக் காட்சியளித்தது. தமிழ்நாடெங்கும் பொதுவாகப் பதற்றமும் உணரப்பட்டது. இளைஞர் போராட்டத்தைச் சில தீவிரவாதச் சக்திகள் தமக்குச் சாதகமாக பயன்படுத்துகின்றன என்றும் பொலிஸ் தரப்பால் குற்றம் சுமத்தப்பட்டது.

ஜல்லிக்கட்டை நடத்த ஏதுவாக தமிழ்நாட்டு அரசு கொண்டுவந்த அவசரச் சட்டத்தைப் போராட்டக்காரர்கள் ஏற்கவில்லை. அவர்கள் நிரந்தரச் சட்டம் வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இதனால் எட்டாவது நாளாக அலங்காநல்லூர் மற்றும் மெரீனா பகுதிகளில் நேற்றும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. ஆனால் போராட்டக் காரர்களைக் கலைந்து செல்லும்படி பொலிஸார் நேற்றுக் காலைமுதல் கடுமையாக வலியுறுத்தினர். முதலில், பெண்கள், குழந்தைகள் வெளியேற்றப்பட்டனர். இதனைத் தொடர்ந்து சிலர் தாங்களாகவே வெளியேறினர். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்தனர். இதனை அடுத்து மெரீனாவில் சிறு பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகை நடத்தியதால் இளைஞர்களும் கற்களால் தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். இதனால் மெரீனா கடற்கரை நேற்று பலமணி நேரம் கலவர பூமியாகக் காட்சியளித்தது.

இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து பல இடங்களிலும் பரவலாகப் பொதுமக்களால் சாலை மறியல்கள் மேற்கொள்ளப்பட்டன. பொலிஸ் நிலையமொன்று தீக்கிரையானது. வாகனங்கள் சில கொளுத்தப்பட்டன. பஸ்களின் கண்ணாடிகள் நொருக்கப்பட்டன. ரயில்களின் சேவையில் தளம்பல்கள் ஏற்பட்டன. வெளிநாட்டுக் குளிர்பானங்கள் வீதியில் வீசப்பட்டன. இதனையடுத்து விடயத்தைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக ஜல்லிக்கட்டுக்கு நிரந்தரத் தீர்வுவேண்டி உருவாக்கப்பட்ட சட்டவரைவின் பிரதி இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. இளைஞர்களுடன் கைகோர்த்து நின்ற நடிகர் லோறன்ஸும் ஏனைய பிரமுகர்களும் இளைஞர்கள் தமது போராட்டத்தைத் தற்போதைக்குக் கைவிடவேண்டும் என்று அழைப்பு விடுத்தனர்.

இந்த அழுத்தங்களுக்குச் செவிமடுத்துப் போராட்டம் இரு மாதங்கள் பிற்போடப்படுகிறது. செயற்பாடுகளில் திருப்தி இல்லையெனின் போராட்டம் தொடரும் என்று போராட்டங்காரர்களின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனால் மெரீனா நேற்றுமாலை அதன் இயல்பான நிலைக்கு படிப்படியாக திரும்பியது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. அலங்காநல்லூரும் அதன் இயல்பான நிலைக்குத் திரும்பியது. அங்கு பெப்ரவரி முதலாம் திகதி ஜல்லிக்கட்டு நடைபெறும் என்று கிராம நிர்வாகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது. (ம)

## புதிய...

அளவில் பெரும் பரப்புரை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிவில் சமூகமும், கூட்டு அரசின் அமைச்சர்களும் இந்தப் பரப்புரையை முன்னெடுக்கவுள்ளனர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு, தேர்தல் சீர்திருத்தம் உள்ளிட்ட விடயங்கள் மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பிலும் புதிய அரசமைப்பின் ஊடாகக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-5)

## லசந்த...

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர். முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சருமான சரத் பொன்சேகா வழங்கிய வாக்குமூலத்தின் அடிப் படையில் இவர்களிடம் விசாரணை விரைவில் முன்னெடுக்கப்பட வுள்ளதாகத் தெரிய வருகின்றது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஊடகவியலாளர் லசந்த படுகொலை செய்யப்பட்டிருந்தார். அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவிடம் கடந்த வெள்ளிக்கிழமை 5 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணைகளின்போது, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரின் நேரடி உத்தரவுகளைப் பெற்று, நீதிக்குப் புறம்பான செயல்களை மேற்கொள்ளும் தனியான குழுவொன்று இராணுவத்தில் இயங்கியது என்பதை, சரத் பொன்சேகா ஒப்புக்கொண்டுள்ளார். இந்த நடவடிக்கைகள் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண மூலமாகவே மேற் கொள்ளப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுபற்றி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும், முன்னாள் பாதுகாப்புச் செயலருமே, லசந்த விக்கிரமதுங்க படுகொலைக்குப் பொறுப்புக் கூறவேண்டும். போர் தொடர்பாக எமக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் லசந்த விக்கிரமதுங்கவுக்கும் எனக்கும் இடையில் குரோதம் இருக்கவில்லை - என்றார்.

**விசாரணை வளையத்துள் கோத்தா**

பொன்சேகா வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது. குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரைவில் இந்த விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர். (த-5)

## உறவுகளைக்...

உயிருடன் இருந்தால் அவர்கள் எந்த இரகசிய சித்திவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள், உயிருடன் இல்லாது விட்டால் அவர்களுக்கு என்ன நடந்தது, யாரால், எப்போது கொலைசெய்யப்பட்டு எங்கு புதைக்கப்பட்டார்கள் என்பதை நாட்டு மக்களுக்கு அரசு பகிரங்கப்படுத்தவேண்டும், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் உயிரோடு இருப்பின் அவர்களைக் குடும்பங்களுடன் இணைந்து வாழ்வதற்கு விடுவிக்கவேண்டும், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் வரை உணவு ஒறுத்தல் தொடரும் என்று போராட்டத்தில் பங்கேற்றுள்ள காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்த இடத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்த வவுனியா பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி, நடைபாதையில் அமர்ந்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தவேண்டாம் என்று தெரிவித்ததுடன் அந்த இடத்தில் போடப்பட்ட கொட்டகையையும் அகற்றுமாறு அல்லது நகரசபைச் செயலாளரிடத்தில் அனுமதி பெறுமாறு அறிவுறுத்தினார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் பொலிஸாருடன் கலந்துரையாடினர். நகர சபைச் செயலாளரைச் சம்பவ இடத்துக்கு அழைத்துப் பொலிஸாருடன் கலந்தரையாடப்பட்டது.

உணவு ஒறுத்தல் போராட்டத்தை மேற்கொண்டு வருவபவர்களினால் இடையூறு ஏற்பட்டால் தான் பொறுப்பேற்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பொலிஸாருக்கு வாக்குறுதியளித்தார். நகர சபைச் செயலாளர் அனுமதியளித்தார். போராட்டம் தொடர்கிறது. நேற்று நண்பகலின் பின்னர் வவுனியாவில் கனமழை பெய்தபோதும் போராட்டம் கைவிடப்படாது தொடர்ந்தது. (வ-21,402)

## வு கடத்தப்பட்டு...

வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் வைத்து ஊடகவியலாளர் பிரகீத் கடத்தப்பட்டிருந்தார். மகிந்த ஆட்சிக் காலத்தில் பிரகீத் கடத்தல் தொடர்பிலான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டிருந்தன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டன. கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்ற தீவிர விசாரணையில் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. எக்னெலிகொட கடத்தப்பட்டுக் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னரே, கிரிதல படை முகாமுக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர். மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாக்கியுள்ளனர். (த-5)

## இடியுடன்...

கிழக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட 150 மில்லி மீற்றர் அதிக மழைவீழ்ச்சி சாத்தியப்படக் கூடும். சில பகுதிகளில் சுமார் 100 மில்லி மீற்றர் மழை பொழியக்கூடும். வடபகுதியில் சுமார் 40 - 50 கிலோமீற்றர் வேகத்திற்கு கடும் காற்று வீசக்கூடும். கடற்பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும், என்று வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல மாவட்டங்கள் வறட்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மழை பெய்ய ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்துள்ளது. (த-5)

## கையாடிய...

கையாடல் செய்யப்பட்ட நிதியைக் கட்டம் கட்டமாக மீளவும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

தமிழ் மக்கள் பேரவையால் நியமிக்கப் பட்ட நிதிக் குழுவுக்கு புறம்பாக, ஏற்பாட்டுக் குழு நபர் ஒருவர் நிதி சேகரிப்பு நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவைக்கு நிதி சேகரிப்புச் செய்த அந்த நபர் தெரியப்படுத்தவில்லை.

நிதியைக் கையாடல் செய்த உறுப்பினரை இடைநிறுத்தி, விசாரணை முன்னெடுப்பதற்காக 5 பேர் கொண்ட குழுவை, தமிழ் மக்கள் பேரவை கடந்த நவம்பர் மாதம் 20 ஆம் திகதி அமைத்திருந்தது. விசாரணைக் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், நிதியைக் கையாடல் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட நபர் நிதியை மீளவும் வழங்கச் சம்மதித்துள்ளார்.

அதனடிப்படையில் கட்டம் கட்டமாக நிதியை மீளவும் வழங்கியுள்ளார். இன்னும் ஒரு தொகுதிநிதி அவரினால் மீள கையளிக்கப்பட வேண்டியுள்ளது. அதனைக் கையளிப்பதற்கு அவர் கால அவகாசம் கோரியுள்ளதாக அறிய முடிகின்றது. (த-5)

## ரோம்...

வலியுறுத்தியுள்ளது.

சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதமாபிமானமற்ற, அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான, ஜுவான் மென்டஸ் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதிலேயே கொழும்பு அரசை மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டுள்ளார். இவரது இந்த அறிக்கை மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அறிக்கையாளர் ஜுவான் மென்டஸ் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக இல்லாமல் ஒழிக்கவேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக வரையப்படும் புதிய சட்டத்தில், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர் சட்டவாளரைச் சந்திக்க அனுமதிக்க முன்னர் வாக்குமூலம் பெற வழிவகுக்கும் முன்மொழிவும் விலக்கிக் கொள்ளப்படவேண்டும்.

சித்திரவதைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்து வழக்குத் தொடுப்பதற்கான பணியகம் உருவாக்கப்படவேண்டும். குற்றமிழைத்தவர்கள் தப்பித்துக் கொள்ளும் கடந்தகால கலாசாரத்தில் இருந்து விடுபட்டு, இந்தப் பணியகம் சுதந்திரமாகச் செயற்படுவதை சட்டமா அதிபர் பணியகம் உறுதிப்படுத்தவேண்டும்.

தேசிய பாதுகாப்பு படைகளில் அங்கம் வகிப்பவர்களை விலக்கி, சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டம் காத்திரமான வகையில் நடைமுறைப்படுத்தவேண்டும். பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தை அங்கீகரிக்கும் ரோம் பிரகடனத்தில் கையெழுத்திட வேண்டும்.

சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதமாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் என்பன, ஆயுத மோதல்களின் ஒரு மரபுரிமையாகவே இருந்து வந்திருக்கின்றன. அரசு அதிகாரத்துக்கு எதிராகக் குறிப்பாக, அதன் பாதுகாப்புப் படைகளுக்கு எதிராக, குறைந்த பட்ச பாதுகாப்பு உத்தரவாதமற்ற நிலையிலேயே மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

தற்போதைய சட்ட வரைமுறை, மற்றும் ஆயுதப் படைகள், பொலிஸ் துறை, சட்டமா அதிபர் பணியகம் மற்றும் நீதித்துறை கட்டமைப்புகளில் போதிய மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படாமையால், சித்திரவதைகள் நீடித்து நிலைத்திருக்கும் ஆபத்து உள்ளது. சித்திரவதைகளை இல்லாமல் செய்வதற்கும், எல்லா அதிகாரிகளும் பன்னாட்டு நியமங்களுக்கு இணங்கிச் செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இந்த நிறுவனங்களில் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளைக் கொழும்பு அவசரமாகவும், விரிவான அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டஸ் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (த-5)

## சரத்...

மான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவிடம், மீண்டும் இன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலகட்டத்தில், லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

படுகொலையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தொடர்புகள் இருப்பதாகத் தகவல்கள் வெளியான நிலையில், பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவிடம், கடந்த வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஐந்து மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான மேலதிக தகவல்களை பெறுவதற்காக, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவிடம் மீண்டும் விசாரணைகள் நடத்தப்பட வுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த-5)

## திருமலையிலும்...

அடையாள உணவு ஒறுத்தல் போராட்டம் நடத்தப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எந்தவித பதிலும் அரசிடமிருந்து கிடைக்காத பட்சத்தில் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளதாக வடக்கு, கிழக்கு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி கண்டறியும் அமைப்பின் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

இந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 50 பேர் வரை கலந்து கொண்டனர். (வ)

## மூன்று...

பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர்கள் திஹா[illegible] பிரதேசத்திலிருந்து சமய நிகழ்வுக்க[illegible] (ஜமாஆத்) மூதூர் 7 ஹதீப் நகருக்கு[illegible]சன்றிருந்தபோதே இந்தச் சம்பவம் நட[illegible]ற்றுள்ளது. குறித்த இளைஞர்களி[illegible]டலங்கள் மீட்கப்பட்டு மூதூர் தள வைத்[illegible]சாலையின் பிரேத அறையில் வைக்கப்[illegible]ள்ளன.

முஹம்மட் பியாஸ் முஹ[illegible]ட் இக்ராம் (வயது-20), காதர் ஹசன் [illegible]துல்லாஹ் (வயது-17), மற்றும் முஹம்[illegible] நௌஷாட் முகாஷ் (வயது-19) ஆகியோ[illegible]ர இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனப்[illegible] ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (த)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 24

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாண மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான கூடைப்பந் தாட்டத்தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோத வுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங் குளம் யங்ஸ்ரார் விளையாட் டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொட ரில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் ஏ.பி.சி. அணியை எதிர்த்து மருதநிலா பி அணி மோதவுள்ளது. (ம-23)

## பூப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 24

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடை யிலான பூப்பந்தாட்டத் தொடர் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. தொடரின் முடிவுகள் வருமாறு; பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜொலிஸ்ரார் விளையாட்டு கழக வீராங்கனை கே.பிரியங் காவை எதிர்த்து நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக் கழக வீராங்கனை எஸ்.பது மிளா மோதினார். 21:12, 21:6 என்ற புள்ளிகளின் அடிப்ப டையில் முதல் இரு செற்களை யும் கைப்பற்றி நேர் செற் வெற்றிபெற்றார் பிரியங்கா.

பெண்கள் இரட்டையர் பிரிவில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் எஸ்.கேசாயினி, கே.பிரயங்கா இணையை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கே.மயூரி, எஸ்.தாட்சாயினி இணை மோதியது. ஜொலி ஸ்ரார் இணை 21:10, 21:8 என்ற புள்ளிகளின் அடிப்ப டையில் முதல் இரு செற்களை யும் கைப்பற்றி நேர் செற் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான குழுநிலைப் போட்டியில் ஜொலிஸ்ரார் விள்ளயாட்டுக் கழகம் முத லாம் இடத்தையும் அரியாலை ஐக்கிய விளையாட்டு கழகம் இரண்டாம் இடத்தையும் தமதாக்கின. (ம-23)



# நல்லூர் பிரதேச செயலக கால்பந்தில் பொற்பதி அணி இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 24

நல்லூர் பிரதேச செயலக பிரி வுக்கு உட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங் களுக்கு இடையிலான கால் பந்தாட்டத்தில் பொற்பதி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பொற் பதி அணியை எதிர்த்து அரி யாலை ஐக்கிய அணி மோதி யது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதற்பாதி. இரண்டாம் பாதியிலும் மாற் றங்கள் ஏற்படவில்லை. நிர்ண யிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எவை யும் பதிவுசெய்யப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)



முடிவுக்கு வந்தது முதற்பாதி.

# ஐக்கியம் அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 24

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத்தில், ஆண்கள் பிரிவில் நீர்வேலி ஐக்கிய அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அச்சுவேலி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் காலிறுதி ஆட்டம் இடம்பெற்றது. நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நீர்வேலி ஐக்கிய அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மதுளதாஸ் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் புத்தூர் எவரெஸ்ட் அணி சார்பில் கஜமுகன் 2 இலக்கு களையும், அனந்தன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புத்தூர் எவரெஸ்ட் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்கு களை இழந்து 20 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனையடுத்து 41 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஐக்கியம். (ம-422)



# யங்ஹென்றிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 24

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி சம்பியனானது.

விக்னேஸ்வராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. யங்ஹென்றிஸின் முதற் கோலைப் பதிவுசெய்தார் மதுசன். றோயலின் கோலைப் பதிவு செய்தார் சுலக்சன். முதற் பாதியின் முடிவில் இரு அணி களும் 1:1 என்றிருந்தன. இரண்டாம் பாதியில் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதை களில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற் பட்டது. யங்ஹென்றிஸ் அணி 6:5 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக யங்ஹென் றிஸின் மதுசன் தெரிவானார். (ம-23)

# சிறிமுருகன் வெற்றி வாகை

யாழ்ப்பாணம், ஜன. 24

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையி லான நடப்பு வருடத்துக்கான கால்பந்தாட் டத்தில் சிறிமுருகன் அணி சம்பியனானது. ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மைதா னத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் ஏழாலை பை ஸ்ரார் அணியை எதிர்த்து சிறிமுருகன் அணி மோதியது. இதில் சிறிமுருகன் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# ஞானமுருகன், நியூவாரியஸ் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 24

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப் பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஞானமுருகன், நியூவாரியஸ் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன. ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது ஞானமுருகன்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் ஞானகலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுராவத்தை நியூவாரியஸ் அணி மோதியது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பதிவு செய்ததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் சுராவத்தை நியூவாரி யஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)



# காலிறுதியில் செரீனா

ஆஸ்திரேலிய பூப்பந்தாட்டத் தொடரில் காலி றுதிக்குத் தகுதிபெற்றார் அமெரிக்காவின் நட்சத்திர வீராங்கனையான செரீனா வில் லியம்ஸ்.

காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து செக்குடிய ரசின் பார்போரா மோதினார். மூன்று செற் களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 7:5, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் வெற்றியுடன் செரீனா காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# நெடுந்தீவு பிரதேச செயலக விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 24

நெடுந்தீவு பிரதேச செயலகத்துக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான விளையாட்டு விழா இன்று இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம், பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம், ஆண்களுக்கான ஆயிரத்து 500 மீற்றர் ஓட்டம், பெண்களுக்கான 800 மீற்றர், 4 நபர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம், கபடி இறுதி யாட்டம் ஆகிய போட்டிகளே இன்று இடம்பெறவுள்ளன. நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்திலேயே இந்தப் போட்டிகள் இடம்பெறவுள் ளன. (ம-23)

# பாடசாலைகளில் காலை உடற்பயிற்சிகள் மாலைக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்

## அர்ஜுன ரணதுங்க வலியுறுத்தல்



பாடசாலைகளில் தற்போது காலை வேளைகளில் மாணவர்களுக்கு உடற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவை மாலை வேளைக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறையின் தற்போதைய அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க.

வெயங்கொட மாரபொல மகா வித்தியாலயத்தில் இவ் சேவ் த ஸ்போர்ட்ஸ் விளையாட்டு பயிற்சி முகாம் ஏற்பாடுச் செய்யப்பட்டிருந்தது. குறித்த முகாமில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் எம்முடைய சிறுபராயத்தில் விளையாட்டு மைதானங்களுக்குச் சென்று விளையாடினோம். கிரிக்கெட் வலைப்பந்து கால்பந்து, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளில் ஈடுபட்டோம். இன்றுள்ள மாணவர்கள் இவை பற்றி அறிந்து வைத்துள்ளீர்களா என தெரியவில்லை. அனைவரும் இன்று தொழில்நுட்பத்துடன் இணைந்து கணினியில் அல்லது மடிகணினியில் அல்லது கையடக்கத் தொலைபேசியில் கதிரையில் இருந்தவாறு களைப்புறாமல் விளையாட்டில் ஈடுபடுகின்றார்கள். கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சுக்களின் ஒன்றிணைந்த செயற்றிட்டமான காலை வேளையில் அனைத்து மாணவர்களும் உடற் பயிற்சியில் ஈடுப்பட வேண்டுமென்ற செயற்றிட்டம் அனைத்து பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படுகின்றது. மாணவர்கள் மாலை வேளையில் உடற்பயிற்சிகளில் ஈடுப்பட வேண்டுமென்பதே என்னுடைய கருத்தாகும். காலைவேளையில் உடற்பயிற்சிகளில் ஈடுப்பட்டு களைப்புடனே வகுப்பறைக்குச் செல்கின்றார்கள். இந்த நிலையை தவிர்க்கும் பொருட்டு இறுதி பாடவேளையில் பிள்ளைகள் உடற்பயிற்சியில் ஈடுப்பட்டால் மேலதிக நேரம் அவர்களால் விளையாட்டில் ஈடுப்பட இயலும்.

விளையாட்டுதுறை அழிவடைந்துச் செல்கையில் அதனைப் பாதுகாக்க வேண்டுமென ஒரு சில விளையாட்டு ஆர்வலர்கள் தீர்மானித்தோம். அதன் அடிப்படையில் இவ்வாறான பயிற்சி முகாம்களை நடத்துவதன் மூலம் நாட்டிற்கு சேவையாற்றுகின்றோம். ஒரு சிலர் இந்தச் செயன்முறையை விரும்புவதில்லை. அவர்கள் ஏனையவர்களின் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளார்கள் என்று ரணதுங்க மேலும் தெரிவித்தார்.. (ம)




## கோக்லி சாதனை

தலைமைத்துவத்தில் மிக விரைவாக ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த தலைவர் என்ற சாதனையை நிலைநாட்டினார் இந்திய அணித் தலைவரான கோக்லி.

தலைமைத்துவத்தை ஏற்ற பின்னர் இதுவரை தான் களமிறங்கிய 17 இன்னிங்ஸில் கோக்லி ஆயிரம் ஓட்டங்களைக் குவித்தார். தென்னாபிரிக்க அணியின் தலைவரான வில்லியர்ஸ் தலைமைத்துவத்தை ஏற்று 18 இன்னிங்ஸில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்ததே இன்றுவரை சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையையே கோக்லி தகர்த்தார்.

நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் 20 ஆட்டங்களிலும், இங்கிலாந்து. அணித்தலைவர் குக் 21 ஆட்டங்களிலும் குறித்த மைற்கல்லை எட்டினார். (ம)



# கிண்ணத்தை முழுமையாக கைப்பற்றியது நியூசிலாந்து

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றி பெற்று தொடரை 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது நியூசிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. 289 ஓட்டங்களில் சுருண்டது பங்களாதேஷ். அதிகபட்சமாக சர்க்கர் 86 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 59 ஓட்டங்களையும், நுறுல் ஹசன் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சவுத்தி 5 இலக்குகளையும், போல்ட் 4 இலக்குகளையும் வாக்நெர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 260-7 என்றிருந்தது. மூன்றாம் நாள் மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாத நிலையில் கைவிடப்பட்டது. நிக்கொல்ஸ் 56 ஓட்டங்களுடனும் சவுத்தி 4 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். தொடர்ந்தும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் நிக்கொல்ஸ். ஆனால் சவுத்தியின் ஆட்டம் 17 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. 2 ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டு ஆட்டமிழந்தார் நிக்கொல்ஸ். 354 ஓட்டங்களில் சுருண்டது நியூசிலாந்து.

பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 4 இலக்குகளையும், ரபி, மிராஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், அஹமட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்ப வீரரான இக்பால் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றி னார். சர்க்கர் முகமதுல்லா இருவரும் முறையே 36, 38 ஓட்டங் களைக் குவித்து ஆட்டமிழந்தனர். ஒரு கட்டத்தில் 73-3 என்ற நிலையில் பங்களாதேஷ் இருந்தது. பின்னர் பெரியதொரு தடுமாற்றத்தை எதிர் கொண்டது. ஏனைய வீரர்கள் முழுமையாகப் 10 ஓட்டங்களைத் தாண்டவே படாதபாடுபட்டனர். பின்வரிசையில் 33 ஓட்டங்கள் குவித்து பலம் சேர்த்தார் அகமட். 173 ஓட்டங்களில் பங்களாதேஷ் சுருண்டது. பந்துவீச்சில் போல்ட், சவுத்தி, வாக்நெர் மூவரும் தலா மூன்று இலக்குகளையும் கிராண்ட்கோம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

நியூசிலாந்துக்கு 109 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நாள் நிறைவடைய 19 பந்துப்பரிமாற்றங்களே எஞ்சியிருந்தன. ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அடித்தாடி ஓர் இலக்கை இழந்து இலக்கை அடைந்தது நியூசிலாந்து. ஆட்டநாயகனாக சவுத்தி தெரிவானார். (ம)



# தமிழ்நாட்டு மக்களை வைத்து ஆதாயம் தேடவேண்டாம்

## சேவாக் கருத்து

ஜல்லிக்கட்டு விவகாரத்தில் தமிழ்நாட்டு மக்களை வைத்து ஏனையவர்கள் ஆதாயம் தேட வேண்டாம் என்று தெரிவித்தார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான சேவாக்.

மெரினா கடற்கரையை விட்டு கலைந்து செல்ல மாட்டோம் என ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள் மறுத்து வருவதால் பொலிஸார் அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி வந்தனர். தடியடி, கண்ணீர் புகை குண்டு வீச்சு என பொலிஸார் நேற்று எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகி பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தின.

இந்த நிலையில் ஜல்லிக்கட்டுப் போராட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வந்த கிரிக்கெட் வீரர் சேவாக் தமிழ்நாட்டு மக்கள் அமைதி காக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அவர் தனது டுவிற்றர் பதிவில், தமிழ்நாட்டு மக்கள் அமைதி காக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். தங்களது அறவழிப் போராட்டத்தின் மூலம் தமிழ்நாட்டு மக்கள் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தை வைத்து மற்றவர்கள் ஆதாயம் தேட முயற்சிக்க வேண்டாம் எனப் பதிவிட்டார். (ம)

# இறுதியாட்டத்தில் மத்தியூஸ் இல்லை

காயம் காரணமாக தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் இருந்து மத்தியூஸ் விலகுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 113 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை இரு பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது. மத்தியூஸ் ஆட்டநாயகனானார். அவர் இறுதிவரை ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைக் குவித்தார். துடுப்பெடுத்தாடிய போது அவரின் காலில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் நாளை நடைபெறவுள்ள மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் கலந்துகொள்ளமாட்டார். இதனால் தலைமைப் பொறுப்பு சந்திமல்லுக்கு வழங்கப்பட்டது. (ம)

# இலங்கை - தென்னாபிரிக்கா இறுதி ரி-20 ஆட்டம் நாளை

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் உள்ளன. இதனால் நாளைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே கிண்ணம் வெல்லும் என்ற காரணத்தால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# இந்தியா - இங்கிலாந்து தொடரில் புதிய சாதனை

இரு அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த தொடராக இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடர் பதிவாகி சாதனை படைத்தது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. இந்தத் தொடரில் மொத்தம் 2 ஆயிரத்து 90 ஓட்டங்கள் குவிக்கப்பட்டுள்ளன. 3 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரில் இவ்வளவு ஓட்டங்கள் எடுக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். மூன்று ஆட்டங்களிலும் அதாவது ஆறு இன்னிங்ஸ்களிலும் 300 க்கு மேல் இரு அணிகளும் எடுத்தன. ஒரு பந்துப்பரிமாற்றத்துக்கு 7 ஓட்டங்கள் என்று செல்கிறது சராசரி. முன்னதாக இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதிய 3 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆயிரத்து 884 ஓட்டங்கள் பெறப்பட்டதே இது வரை சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

இம்முறை O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

3 மாத சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 28.01.2017

1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (செவ்வாய்,வியாழன்)
1.காலை 08-10 2.காலை 10-12

பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்

SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புற வீதி. யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

முகாமைத்துவ உதவியாளர்
செவ். புதன்
பி.ப. 4.30 - 6.00
*இலங்கைவங்கி, காணி வெளிக்கள போதனாசிரியர் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

தொடர்பு - 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கிஅருகில் )

**மாநகரசபை யாழ்ப்பாணம்**

பொது மலசலகூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவை

**பகிரங்க ஏலம்**

யாழ் நகர பொது மலசலகூடங்களின் தொகுதி குத்தகைக்கு வழங்குவதற்காகப் பகிரங்க ஏலம் கூறப்படவுள்ளது.

இத்தொகுதியிலுள்ள மலசல கூடங்களாவன.

1. நவீன சந்தை மலசல கூடம் - யாழ் நகர்
2. நல்லூர் மலசலகூடம் மற்றும் குளியலறை
3.பெரியகடை மரக்கறிச்சந்தை மலசலகூடம்-யாழ் நகர்
4. பண்ணை சந்தைக்கு முன்பாக உள்ள மலசலகூடம்

குத்தகைக்காலம் : 01.02.2017 தொடக்கம் 31.07.2017 வரை
ஏலம் கூறும் திகதியும் நேரமும் : 30.01.2017 மு.ப 10.00 மணி
ஆ.கேள்வி : ரூபா 100,000(VAT நீங்கலாக )

அறவிடப்படும் கட்டண விவரங்கள் மாநகர சபையால் தீர்மானிக்கப்படும் . மேலதிக தகவல்களையும் நிபந்தனைகளையும் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

பொ.வாகீசன்
ஆணையாளர்.மாநகர சபை



# ஆஸ்திரேலியத் தொடரிலிருந்து அண்டி முர்ரேயும் வெளியேறினார்

ஆஸ்திரேலியத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டார் பிரிட்டன் வீரரான அன்டி முர்ரே.

நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில், பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலாம் இடத்தில் உள்ளவரும் ஒலிம்பிக் சம்பியனுமான பிரிட்டன் வீரர் அன்டி முர்ரேயை எதிர்த்து தரப்படுத்தலில் 50 ஆவது இடத்திலுள்ள ஜேர்மன் வீரர் மிஸ்ஸா மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தில் முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் மிஸ்ஸா. இரண்டாவது செற்றை 7:5 என்று கைப்பற்றி பதிலடி கொடுத்தார் முர்ரே. மூன்றாவது மற்றும் நான்காவது செற்களை முறையே 6:2, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் முர்ரேயை வெளியேற்றினார் மிஸ்ஸா.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்திலுள்ள வீரரான ஜோகோவிக் ஏற்கனவே வெளியேற்றப்பட்டார். தற்போது முர்ரே வெளியேறியுள்ளார். இதனால் நடால் மற்றும் பெடரர் இருவருக்கும் அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

**தேவை**

யாழ். நகரில் விற்பனைமுகவர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 071 7024 116

**தேவை**

யாழ். நகரிலுள்ள MobilShop ஒன்றிற்கு கணினி அறிவுள்ள ஆண் ஒருவர் தேவை.
தொடர்பு - 077 5594 179

**2 ROOMS வாடகைக்கு விடப்படும்**

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து 700 M தூரத்தில் இருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடு ஒன்றில். 3 மாணவர்கள் அல்லது 2 தொழில் புரிபவர்களுக்கு 2 அறைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். (J/00540) (11,17)

071 201 1709

**Smart Class**
**ICT O/L, A/L**
Bilingual
இருமொழி மூலம்
Micro Wish
இல.82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்
075 2615002
www.microwish.yolasite.com

**பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் படிவம் ( FIRST FORM )**

பல்கலைக்கழக அனுமதிக்கான முதல்படிவம் 25.01.2017 புதன்கிழமை விநியோகம் செய்யப்படும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் யாழ். பிரதான முகவர்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 6693
வேம்படி சந்தி, யாழ்ப்பாணம். 021 222 1637

**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 15 . 03 . 1936
மறைவு 20 . 01 . 2012



மீசாலை
**அமரர் திருமதி புஸ்பலதிகவதி கணேசலிங்கம்**
(இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் - தென்மராட்சி வலயம்)
திதி: அபரபக்க துவாதசி (24.01.2017)

கரு தந்து உயிர் தந்து உடல் தந்த தாயே!
அன்புடன் அறிவு தந்து உயர வைத்தாய் நீயே!
அதிகாலை எழுந்ததும் நின்முகம் தேடும் நமைவிட்டு
கணப் பொழுதில் விண்ணுலகம் சென்றது தானேனோ?
ஆண்டுகள் ஐந்தாகித் தவிக்கின்றோம் உங்களைப் பிரிந்து
ஆறுதல் சொல்ல நமக்கு இனி யார் இவ்வுலகில்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

35/1A, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.
'சிவகிரி' மீசாலை வடக்கு, மீசாலை.
72/27, பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலி.

**சாவகச்சேரி நகராட்சிமன்றம்**
**2017 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்**

01. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 06.02.2017 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 13.02.2017 முற்பகல் 10.00 மணிவரை
03.கேள்வி திறக்கப்படும் திகதி :- 13.02.2017 முற்பகல் 11.00 மணி
04. கேள்வித் தொகையின் 2/3 பகுதியைச் செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டிய இறுதித்திகதி :- 22.02.2017

**2017 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக்கடை - இல. 02 | 1,388,475.00 | 13,884.75 | 1,000.00 |
| 02 | கோழி இறைச்சிக்கடை - இல. 02 | 842,985.00 | 8,429.85 | 1,000.00 |
| 03 | கருவாட்டுக் கடை - இல.01 | 67,500.00 | 675.00 | 1,000.00 |
| 04 | கருவாட்டுக் கடை - இல.02 | 67,500.00 | 675.00 | 1,000.00 |

**குறிப்பு:**
இந்நகராட்சிமன்றத்தின் கோழி இறைச்சிக்கடைகளிலிருந்து 1KM சுற்று வட்டாரத்துக்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்படமாட்டாது. மேலதிக விவரங்களை 04.11.2016 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடவும். அல்லது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சிமன்றம், சாவகச்சேரி.
23.01.2017

திரு.கா.சண்முகதாசன்,
செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.